Registered as a News Paper in Sri Lanka  දිනමුරසු වාරමලර්


# தினமுரசு வாரமலர்

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY

பக்கம் 24
ரூபா: 30.00
நவ. 26 - டிச. 02, 2015
முரசு 1145

# "சமந்தா பவர்" இன் இலங்கை தொடர்பான விமர்சனங்களும் விளைவுகளும்










## இயற்கையை தொலைத்துவிட்ட செயற்கை வாழ்க்கை



## வீரம் சேர்ப்பது தாய் முலைப்பாலடா...

## வெற்றி தரும் சங்கு

ஆன்மீகம்

கார்த்திகை மாதத்தில் பெரும்பாலான சிவாலயங்களில் 108 அல்லது 1008 சங்குகளில் நீர்நிரப்பி, அப்புனித நீரால் சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்வது வழக்கம். கார்த்திகை சோமவாரத்தில் நடைபெறும் சங்காபிஷேகத்துக்கு மிகுந்த மகத்துவம் உண்டு.

ஆலய வழிபாட்டில் பொதிந்துள்ள எண்ணற்ற அறிவியல்ரீதியான ஆச்சரியங்களில் இந்த வழிபாடும் ஒன்று. சங்காபிஷேகத்தில் கலந்து கொண்டு இறைவழிபாடு செய்தால் நாம் தொடங்கும் செயல்களில் வெற்றி பெறலாம் என்பது ஐதீகம். சங்காபிஷேகத்துக்கு முன்பு சங்கு பற்றி தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். தேவர்களும், அசுரர்களும் ஒன்றிணைந்து பாற்கடலை கடைந்தபோது லட்சுமியுடன் சங்கும் சேர்ந்து வெளியில் வந்தது. இந்த உலகுக்கு சங்கு அறிமுகமானது இப்படித்தான். லட்சுமியின் அழகில் மயங்கி அவளை திருமணம் செய்துகொண்ட மகா விஷ்ணு, சங்கை இடது கையில் ஏந்தி ‘சங்கு சக்கரதாரி’யாக மாறினார்.

[தொடரும்]

## தற்பெருமையை அகற்றுவோம்

இந்த நற்செய்திப் பகுதியில் மறைநூல் அறிஞர்களுக்கு எதிராக இயேசு வரிசையாக பல குற்றச்சாட்டுக்களைச் சாட்டுகிறார். அவர் வைக்கக்கூடிய முதல் குற்றச்சாட்டு: அவர்கள் தொங்கல் ஆடை அணிந்து நடமாடுவதை விரும்புவார்கள். நீண்ட, தரையைத் தொடுமடுமளவுக்கு அணியப்படும் ஆடை, மதிப்பைக்கொடுப்பதாக இருக்கிறது. அந்த நீண்ட ஆடையின் முனைகளில் குஞ்சங்கள்செய்து ஒவ்வொரு குஞ்சத்திலும் நீல நாடாவைக்கட்டினர்.

இயேசுவின் குற்றச்சாட்டு, மறைநூல் அறிஞர்கள் தாங்கள் செய்வது அனைத்தையும், உண்மையான அர்த்தத்தோடு செய்யாமல், கடவுளை மகிமைப்படுத்தவேண்டும் என்று எண்ணாமல், சடங்குக்காகவும், தங்களை மகிமைப்படுத்தவும், அதைப் பயன்படுத்தினர். மற்றவர்கள் முன் தங்களை மதிப்புள்ளவர்களாகக் காட்டிக்கொண்டனர். கடவுள் முன்னிலையில் நாம் தற்பெருமை உள்ளவர்களாக வாழ்ந்தால், அழிவு நமக்கு மிகவிரைவாய் நேரிடும். இதற்கு எத்தனையோ உதாரணங்கள் விவிலியத்தில் தரப்பட்டுள்ளது. படைப்புக்களாய் இருக்கிற நாம், படைத்தவருக்கு இணையாக நம்மையே கருதமுடியாது. அது நம்மை அழிவிற்குத்தான் கொண்டு செல்லும்.

## இறைவன் விரும்பும் இனிய பண்புகள்

பழக்கவழக்கங்களில், கொடுக்கல் வாங்கலில், வணிகத் தொடர்புகளில், பொதுவாக மக்களுக் கிடையில், எழும் எல்லாப் பிரச்சினைகளிலும் சாந்தமும், அமைதியும் நிலவுவதை அல்லாஹ் விரும்புகிறான்; உவக்கிறான். மலர்ந்த முகத் துடன் இன்சொல் கூறுவதே மனிதப் பண்புகளின் மகுடமாகும்.

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:- “இறைவன் சாந்தம் உள்ளவன். அவன் சாந்தத்தையே விரும்பு கிறான்.” மேலும் நபிகள் கோமான் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:- “சாந்தகுணம் எவரி டம் இல்லையோ. அவர் அனைத்து நன்மை களையும் இழந்துவிட்டார்”

(நூல்: அபூ தாவூத்- கிதாபுல் அதப்)

**முஹம்மது ஹஸனி, கல்முனை -07**

தேன் கிண்ணம்

## கல்வியைத் தொடர்வதற்காக...

போராட்டத்தைத் தாண்டி வந்தது
போக வேண்டும் பல்கலைக் கழகமென்று
இருளுக்குள் முடங்கிக் கிடந்தது
இலட்சியத்தை அடையவேண்டுமென்று.

உறக்கமின்றித் தவித்தது
உயரவேண்டும் வாழ்வில் என்று
வெயிலுக்குள் வெந்தது
வெற்றியை நிலைநாட்டுவதற்காக.

உணவின்றி வாடியது
உயர் கல்வி கற்கவேண்டுமென்று
தண்ணீரின்றித் தவித்தது
தடம்பதிக்க கல்வியிலே.

மனம் நொந்த வேளையிலும்
மரணிக்காது மீண்டு வந்தது
கரம்பிடித்து பேனாவால்
கல்வியைத் தொடர்வதற்காக!



**மயில். வேல்மகள்,**
**புளியம் பொக்கணை.**

## புகை உடலுக்குப் பகை

புகைப்ப துடலுக்குக் கெடுதலென வறிந்தும்
புகைப்பது அடிமுட்டாள்தனம் - பிறர்
நகைப்புக்குள்ளாவதும் இப்புகையே
நீண்ட வாயுளைக் குறைக்கும் - உடலுக்குப்
பகையாகும் புகைத்தல் தேவைதானா?
பாதியில் உயிரை விடுவதும் சரிதானா
வகைவகையாய் ஊதித்தள்ளுவதில்
வருவதெல்லாம் பிணியேயன்றி வேறேதுமில்லை.

வாழ்வே கொஞ்சக் காலம்தான் - உன்
வசந்தத்தையே தீயாய் எரிப்பதில்
கேள்விக்குறியாவது உன் குடும்பம்தான்
கேடுகெட்ட இப்பழக்கத்தினால்
பாழ்பட்டுப்போவது நீ மட்டுமல்ல; - உன்
பரம்பரையேயென வுணர்ந்து கொள் - நெடிய
நாள் நீவாழ நிக்கோட்டினைக் கிஞ்சித்தும்
நினைத்தும் பாராதே; உயிரையும் விடாதே

மதிப்பும் மரியாதையும் இதனால்தானென
மதியில் ஏற்றிக்கொண்டால் - மரணமே
கதியென கருத்திலெடு கவனம்
காததூரமல்ல எமன்; உன் கதவோரம்
சுதியேறுதென தினமும் புகைத்தால்
சுற்றம் கூட முற்றம் நிற்காது
விதி வலியது வேறு வழியில்லை
விட்டுவிடு உடனே புகைப்பதை.



எஸ்ஸெம் நிலாம்,
தாராபுரம், மன்னார்.

## கொல்லென கொல்லும் மழை..

வானம் அழுது
பூமிக்கு வந்த மழை
நாங்கள் அழுத
கண்ணீரில்
நனைந்தது.

நிலம் கடலானது
குளம் கூளமானது
ஆறு ஏழானது
எங்கள் வாழ்வு பாழானது...
ஒரு நாளில்...

அன்று மழைவேண்டி
தொழுதவர்கள்
இன்று
மழை தீண்டி
அழுத
கொண்டிருக்கிறோம்....

போன வருடப்போரில்
தோற்றுப்போய்
புறமுதுகிட்டோடிய
மழையரசன்...

இம்முறை
கோடான கோடி
போர்வீரர்களோடும்
இடி மின்னல்களோடும்
புயலோடும் வந்து
அடித்த அடியிலும்

இடித்த இடியிலும்
கோட்டை
கொத்தளங்களை இழந்து
கட்டடங்களை
கட்டியணைத்து
கதறிக்கொண்டிருக்கிறோம்.

குளத்தை
துடிக்கத் துடிக்க கொன்றோம்
ஆற்றினை சிறைபிடித்தோம்
வயல் நிலங்களை
சிலுவையில் அறைந்தோம்...
மரங்களின் கரங்களை
முறித்தோம்
காட்டினை கதறக்கதற
கற்பழித்தோம்.

காட்டுமிராண்டிகள்
நாங்கள்
இயற்கைக்கு செய்த கொடுமை
கொஞ்ச நஞ்சமல்ல....
நேற்று நாங்கள் விதைத்தோம்
இன்று அறுவடை
செய்கிறோம்....

இயற்கை என்பது
சிங்கம் புலி போன்று
சினம் கொண்டதல்ல
நாயைப்போன்று
நன்றியுள்ளது

வாழவைத்தால் வாலாட்டும்
காதலோடு
காவலிருக்கும்
நாங்கள்
கல்லெடுத்து அடித்தால்
கடிக்குமா..
இல்லை
வா... வந்து
என்னை கொல்லென்று
செங்கம்பளம் விரித்து
வரவேற்குமா...?

இயற்கையை
கொன்றொழித்த
அயோக்கிய
கொலைகாரர்கள் நாங்கள்
வாருங்கள்...
மரங்களை நட்டு
மன்னிப்பு கேட்போம்...!!

கடந்த கால தவறுகளை
நாம் கொல்லாதவரை...
எம்மை
திருத்திக்கொள்ளாதவரை
தொடர்ந்தும்
இதுபோல் கொல்லென
கொல்லும் மழை...

**பொத்துவில் அஸ்மின்**
**(திரைப்பட பாடலாசிரியர்)**

## நன்றி! நன்று!!



தேன் கிண்ணமதில் சிந்தும்
தெவிட்டாத கவித்துளியதும்
தெளித்து
முட்டிமோதும் படைப்புக்கள்
நன்று! நன்று!

சிதறும் பேனா மையின்
சிறப்பினால்
சிந்தைக்கு சந்தம்
சேர்த்து
சுதியதற்கு நயம்
கோர்த்து
பாடும் பறவைகளாக
நேயர் பதிவுகளும்
நன்று! நன்று!

எழுத எழுத பெருகும்
அறிவும்
படிக்க படிக்க பொழியும்
அமுதும்
வாழ்வின் வசந்தத்துக்கு
தரும் அர்த்தமும்
நன்று! நன்று!

நன்று நன்று நம்
அனைவர் கவியும்
நவிலும் நானும்
சொல்வேன் நன்று
நிறையும் கிண்ணம்
துளியதற்காய்
மீண்டும் நன்றி! நன்று!

நஜீரா அஸீஸ், யாழ்ப்பாணம்.

## சொந்தம்



இதயத்தின் உள்ளே வந்து
இடம்பிடித்தாய்
என்னிதயத்தின் இதயமாகி
வாழ்வில்
உதயம் தந்தாய்!
தோல்விகளின் காயங்களுக்கு
அன்பு மருந்தேற்றி
ஆறவைத்தாய்...
தழும்புகள்கூட தடயமில்லாது
ஆறிவிட்டன!
இப்போது விருந்தல்லவா தருகின்றாய்...
வீரனாகி

உலா வருகின்றேன்
என்னினியவளே
என்றும் நானுனக்குரியவனே!

**கே.வாலேந்திரன்,**
**கொழும்பு -03**


## நவம்பர் - 26



“உங்கள் உறவுகளை
கவனத்துடனும்,
பொறுப்புடனும், முழுமையான
அன்புடனும் உருவாக்கிக் கொண்டால்
சொர்க்கத்தை இங்கேயே
அனுவிக்கலாம்.

சத்குரு ஜாக்கி வாசுதேவ்”

# சமூகவிரோதச் செயல்களைக் கட்டுப்படுத்த செயலாளர் நாயகம் வலியுறுத்தல்!



மேற்படி விடயம் தொடர்பில் சட்டம் மற்றும் ஒழுங்கு விவகார அமைச்சரிடம் எடுத்துக் கூறியுள்ள செயலாளர் நாயகம்

யாழ். தீவகப் பகுதிகளில் சமூகவிரோதச் செயற்பாடுகள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்களிடமிருந்து தொடர்ந்தும் முறைப்பாடுகள் கிடைத்துவரும் நிலையில், இதுதொடர்பில் உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

அவர்கள், தீவகப் பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை நிலையைப் பாதிக்கும் வகையில் அண்மைக்காலமாக அப்பகுதிகளில் சமூகவிரோதச் செயற்பாடுகள் இடம்பெற்றுவருவதாகவும், இதில் வெளிநபர்கள் ஈடுபட்டு வருவதாகவும் பொதுமக்கள் தொடர்ந்தும் எனக்கு அறிவித்துவருகின்றனர். இது ஆரோக்கியமான விடயமல்ல. ஏற்கனவே இப்பகுதியில் புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை செய்யப்பட்டதும் யாவரும் அறிந்த விடயமே. எனவே, இவ்விடயம் தொடர்பில் அதிக அக்கறை கொண்டு உரிய செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

அதேநேரம், யாழ். குடாநாட்டில் சமூகவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த பலதரப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், ஒரு சில பகுதிகளில் அவை இன்னும் தொடர்வதாகவே அறிய முடிகிறது. இவை தொடர்பிலும் அவதானமெடுத்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டுமென செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## வரவு – செலவுத் திட்டத்தின் நன்மைகள் சிறிது காலத்திற்கு மட்டுமே – விமல் வீரவன்ச



வரவு - செலவுத் திட்டத்தின் நன்மைகள் சிறிது காலத்திற்கு மட்டுமே கிடைக்கும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அங்கு தொடர்ந்து பேசிய அவர், வரவு - செலவுத் திட்டத்தில் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ள நன்மை மக்களுக்கு இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு மட்டுமே கிடைக்கும். வரவு செலவுத்திட்டத்தின் பாதிப்பினை மூடி மறைக்கும்நோக்கில் தற்காலிக அடிப்படையில் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. முடிந்தால் அரசாங்கம் தொடர்ச்சியாக ஆறு மாத காலத்திற்கு பொருட்களின் விலைகளை குறைத்துக் காட்டட்டும். இந்த சவாலை அரசாங்கத்திற்கு விடுக்கின்றேன் என விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

# வெற்று வரவு- செலவுத்திட்டம்!

## பொருளாதார நிபுணர் கலாநிதி மு.சர்வானந்தன்

தேசிய அரசால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2016ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் குறித்து தனது பார்வையை வெளிப்படுத்திய பிரபல பொருளாதார நிபுணரும், அபிவிருத்திக்கான பருத்தித்துறை ஆய்வகத்தின் பிரதம ஆய்வாளருமான கலாநிதி முத்துக்கிருஷ்ண சர்வானந்தன்,

நீண்டகாலப் பொருளாதார இலக்குகளைக் கொண்டிராத இந்த வரவு - செலவுத் திட்டம் ஒரு வெற்று வரவு - செலவுத்திட்டம் என்று குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் குறித்து தனது பார்வையை வெளிப்படுத்திய கலாநிதி முத்துக்கிருஷ்ண சர்வானந்தன், நீண்டகாலப் பொருளாதார இலக்குகளைக் கொண்டிராத இது ஒரு வெற்று வரவு- செலவுத் திட்டம் எனக்குறிப்பிட்டார்.

இந்த வரவு - செலவுத் திட்டம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய அரசால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டம் எனக்கு மிகவும் அதிர்ச்சியையும் அதிருப்தியையும் தருவதாகவுள்ளது. போர் நிறுத்த காலத்தில் இருந்த ரணில் அரசால் சமர்ப்பிக்கப்பட்டதற்கும் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளதற்கும் பாரிய வித்தியாசம் உள்ளது. 2001ஆம் ஆண்டில் நாட்டில் எதிர்மறை பொருளாதார வளர்ச்சி காணப்பட்டநிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருந்தது.

அப்போது தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிலையில் ரணில் அரசு "இலங்கையை மீள நிலைநிறுத்தல்" என்ற தலைப்பிலான வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்திருந்தது. ஆனால், அது பல காரணங்களினால் வெற்றி பெறவில்லை. ஆனால், அது பல காரணங்களினால் வெற்றி பெறவில்லை.

கடந்த 5ஆம் திகதி பிரதமர் ஆற்றிய பொருளாதாரம் குறித்த உரையில் தெரிவிக்கப்படடிருந்த சாராம்சத்தையும் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்தையும் நோக்குகின்றபோது திட்டவட்டமான பொருளாதார இலக்குகள் அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தின்பின்னர் எப்படி பொதுத்தேர்தலை இலக்கு வைத்து பெப்ரவரி மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட் வரவு - செலவுத் திட்டம்போன்றே, அடுத்த வருட முற்பகுதியில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்காக வைத்து இந்த வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஐந்து வருட காலத்தில் பத்து இலட்சம் தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதாக குறிப்பிடப்பட்டது. ஆனால், எந்தத் துறையில் எவ்வித பொருளாதார இலக்குகளை சார்ந்ததாக அது உருவாக்கப்படும் போன்ற தெளிவான விளக்கங்கள் வழங்கப்படவில்லை என்றார்.

## யாழ்.வடமராட்சியில் சுமந்திரனுக்கு எதிராக சுவரொட்டிகள்!




தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரனுக்கு எதிராக யாழ். மாவட்டம், வடமராட்சியில் சுவரொட்டிகள் பரவலாக காணப்படுகின்றன. 21-11-2015 கடந்த சனியன்று கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா ஒன்று நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்கு சிறப்பு விருந்தினராக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது. இவரின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த சில தினங்களுக்கு முன்னால் அவுஸ்திரேலியா சென்றிருந்த சுமந்திரன், அங்கு வாழும் தமிழ் மக்கள் மத்தியிலும் கடும் எதிர்ப்பைச் சந்தித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தோழமை தினம் தோழர் பத்மநாபா நினைவு தினம்



தோழர் பத்மநாபா அவர்களின் 25ஆவது நினைவு நாள் 22.11.2015 அன்று யாழ்.ரிம்மர் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ் அரசியல் கட்சிகளின் சார்பில் பிரதிநிதிகள் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். காலை நிகழ்வுகள் வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் திரு.க.தவராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. காலை அமர்வில் முன்னாள் வடக்கு, கிழக்கு (இணைந்த) மாகாண சபையின் செயலாளர்கள் டாக்டர் நச்சினார்கினியர், டாக்டர் விக்கினேஸ்வரனும் பொறியியலாளர் இரகுநாதன், அமைச்சராக இருந்த திரு.ஜோ.செனிவரத்தின, திரு. சேருஇஸ்தாபினும் கௌரவிக்கப்பட்டனர்.

செயலாளர் டாக்டர் விக்கினேஸ்வரன் தமது உரையில், முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாண சபையின் செயற்பாடு எவ்வாறு அமைந்தது என்றும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் அனைத்து தமிழ் கட்சிகளும் ஆயுதம் ஏந்திய இயக்கங்களும் கையொப்பமிட்டிருந்தன. விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தமது இயக்கத்துக்கு பணம் கேட்டார்கள். ஆனால் மக்களைப் பற்றி எதுவுமே கேட்கவில்லை எனக் குறிப்பிட்டார்.

புளொட் இயக்கத்தின் திரு. லிங்கநாதன் பேசுகையில், அனைவரும் இணைந்து ஒருமுகப்படுத்தப்பட்ட தீர்வு யோசனையை முன்வைக்க வேண்டும் எனக்குறிப்பிட்டார். இவரது கருத்தை ஒத்துக்கொண்டு பின்னர் பேசிய பேச்சாளர்கள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் திரு. துரைரட்ணம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.சங்கர், ரெலோ இயக்கத்தின் திரு ஸ்ரீகாந்தா, ஈபி.டி.பி. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சந்திரகுமார், பாராளுமன்ற உறுப்பினர் திரு த.சித்தார்த்தன் ஆகியோர் பேசினார்கள்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் திரு. மாவை சேனாதிராஜா தனது உரையில், திரு.ஸ்ரீகாந்தா முன்வைத்த ஒன்றிணைந்து தீர்வு யோசனை முன்வைக்க வேண்டும் எனும் யோசனையைத் தான் வழிமொழிவதாகக் கூறினார். பின்னர் வழமையான பாணியில் மேற்குலக நாடுகளிலும் ஐ.நா. சபையும் நமது பிரச்சினையைத் தீர்க்க முயலுவதாகவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அரைத்தமாவை மீண்டும் ஒரு தடவை அரைத்து உரையை முடித்தார்.

பத்மநாபா தோழமை தினத்தின் ஏற்பாட்டாளராகச் செயற்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாள் நிகழ்வில் இடையிடையே தலைகாட்டி வரவேற்புரை முதல் நன்றியுரை வரை நிகழ்த்தினார். அதிகமாக அரசியல் பேசாது மௌனம் காத்தார். மௌனத்தின் நோக்கம் தெரியவில்லை.

தோழமை தினம் சிறப்பாக நடைபெற்றது. மனிதநேயம்மிக்க பத்மநாபாவின் அரசியல் அபிலாசையை நிறைவு செய்யவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு என்பதுதான் விழா தந்துள்ள பாடமாகும்.

ஈ.பி.டி.பி. பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய டக்ளஸ் தேவானந்தாவின் செய்தியை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு ஜெகன் வாசித்தார். நாபா, தேவா எனும் நாமங்கள் மனிதநேயத்தின் விழுமியங்கள் எனத் தனது அனுபவத்தைக் கூறினார்.

அரசியல் தலைவர்கள் இனியாவது சிந்திப்பார்களா? என்பதுதான் கலந்துகொண்ட மக்களின் கேள்வியாகும்.


## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவலகத்தினால் பின்வரும் பதவிகளிற்கான விண்ணப்பங்கள் தகுதியுடையவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

I. சட்ட உத்தியோகத்தர்
II. கணக்கியல் உத்தியோகத்தர்
III. தொழில்நுட்ப உதவியாளர்

இதற்கான விபரங்கள் 15.11.2015 அன்று வெளியிடப்பட்ட தினகரன், சண்டே ஒப்சேபர் மற்றும் சிலுமின ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளது.

தகுதியானவர்கள் தங்கள் விண்ணப்பங்களை பிரதிப்பொது முகாமையாளர் (மனிதவள முகாமைத்துவம் மற்றும் பரிபாலித்தல்) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, சேர் சிற்றம்பலம் A கார்டினர் மாவத்தை, கொழும்பு-02 எனும் முகவரிக்கு 2015.12.03 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவையாயின் அலுவலக நேரத்தில் யாழ். மாவட்ட அலுவலகத்தில் பார்வையிடமுடியும்.

தினமுரசு
வாரமலர்
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

# "சமந்தா பவர்" இன் இலங்கை தொடர்பான விமர்சனங்களும் விளைவுகளும்

ஐ.நா.விற்கான அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதியான சமந்தா பவர் ஐ.நா. தொடர்பான அமெரிக்க விவகாரங்களை மேற் கொள்வதற்காக மட்டுமே நியமிக்கப்பட்டவர். இவரது கடமை நிறை வேற்று அதிகாரம் ஐ.நா. விவகாரங்கள் உட்பட்ட அமெரிக்காவிற்கு மாத்திரமே உரியது. இருந்தும் இலங்கை விவகாரத்தில் இவர் தலையிடுவதால் அமெரிக்காவின் ஆளுகைக்குள் இலங்கை வந்துவிட்டதா? என பல எதிர் விமர்சனங்கள் கிளம்பியுள்ளன. அமெரிக்காவின் 51 ஆவது மாநிலமான இலங்கையை பார்வையிடுவதற்கு ஐ.நா. வுக்கான அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதி சமந்தா பவர் வந்துள்ளார். அமெரிக்கா தனது ஆளுகையை நிலைநாட்ட தமிழர் தொடர்பான இலங்கையின் இனப்பிரச்சினையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்த முற்பட்டதன் அடிப்படைதான் அமெரிக்கப் பிரதிநிதியின் விஜயம் என பலமான விமர்சனங்கள் கிளம்பியுள்ளன.

இவரது வருகைக்கு எமது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்து கின்றோம் என பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் எம்.பி.யுமான உதய கம்மன்பில தெரிவித்தார். இலங்கையில் புலி ஆதரவாளர்களைச் சந்திக்கும் சமந்தா பவர் ஏன் முஸ்லிம், சிங்களத் தலைவர்களை சந்திப்பதற்கு ஏற்பாடு மேற்கொள்ளவில்லையென்றும் அவர் கேள்வி எழுப்பினார். ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போது குறித்த எம்.பி. இவ்வாறு தெரிவித்தார். இலங்கை இன்று அமெரிக்காவின் 51ஆவது மாநிலமாக மாறியுள்ளது. அரசு நாட்டை அமெரிக்காவிற்கு அடிமையாக்கியுள்ளது. எனவே தங்களது மாநிலத்தை பார்வையிடவே அவர் வருகிறார் என்றும் உதய கம்மன்பில எம்.பி. தெரிவித்தார்.

மறுதுருவத்தில், இலங்கை அரசை பாராட்டியஐ.நாவிற்கான அமெரிக்க பிரதிநிதி தீவிரவாதத்தை வெற்றிகரமாகச் சமாளித்து உலகின் வழிகாட்டியாக இலங்கை திகழ்வதாக தெரிவித்துள்ளார். கொழும்பில் பேசிய சமந்தா, உலகம்முழுவதும் நடைபெற்று வரும் தீவிரவாத தாக்குதல்களால் பல்வேறு சமூகத்தினரும் கடும் நெருக்கடியை எதிர்கொண்டுவருவதாக தெரிவித்தார்.

இத்தகைய சூழ்நிலையில், 26 ஆண்டுகள் நடந்த உள்நாட்டு போரில் தீவிரவாதத்தை வெற்றிகரமாக முறியடித்து பிறநாடுகளுக்கு முன்னோடியாகத் இலங்கை திகழ்வதாக அவர் கூறினார். முன்னாள் அதிபர் மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் சுமார் 40 ஆயிரம் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டதாக எழுந்த புகார் தொடர்பாக, இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணை நடத்த அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. இந்நிலையில், இலங்கை அரசை பாராட்டி அமெரிக்கப் பிரதிநிதி தெரிவித்துள்ள கருத்து முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

நாட்டின் வடபகுதிக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டு இருந்த சமந்தா பவர் மாகாண முதலமைச்சர் உட்பட பலரை சந்தித்தார். யாழ். நூலகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள ஓலைச்சுவடிகளைப் பார்வையிட்ட அவர், அவற்றை நவீன முறையில் பாதுகாப்பதற்கு அமெரிக்கா உதவிபுரியும் என்றும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் உள்ள சிறுபான்மை இன மக்கள்மீது அதிக கரிசனை கொண்டிருப்பதாகவும், அதன்காரணமாகவே தான் யாழ்ப்பாணத் திற்கான இந்த விஜயத்தை மேற் கொண்டதாகவும் அவர் கூறியதாக மாகாண முதல்வர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருந்தாலும் தமிழ் மக்கள் முழுமையாக திருப்தியடையவில்லை என்பதை உணர்ந்து கொள்வ தாக தெரிவித்துள்ள சமந்தா பவர், படிப்படியாக மாற்றங்கள் ஏற்படு வதற்கான அழுத்தத்தை அரசுக்கு அமெரிக்கா கொடுக்கும் எனவும் கூறியுள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணி விமர்சனங்களின் மத்தியில் இடம்பெற்ற சமந்தா பவரின் இலங்கை விஜயம் இலங் கைத் தமிழர்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வினைப் பெற்றுத் தருமா? என்பதுதான் இன்றுள்ள மக்கள் கேள்வியாகும். இலங்கையரசுக்கு அமரிக்காவின் ஆதரவு இன்று தேவைப்படுகின்றது. காரணம் பலவழிகளால் திறைசேரி உட்பட அரசின் பக்கங்கள் வலுவிழந்துள்ளன. மறுதுருவத்தில் ஐரோப்பிய நாடுகளின் வல்லாதிக்கத்தை நிலைநாட்ட இந்துசமுத்திரத்தின் மத்தியில் உள்ள இலங்கையை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவேண்டிய தேவையும் அமெரிக்காவிற்கு உள்ளது. இனப்பிரச்சினையை அமெரிக்கா தனக்கு சாதகமாக்கி தொழிற்பட முற்படும்போது அதை எம்மவர்கள் சாதகமாக பயன்படுத்துவார்களா? என்பதைப் பொறுத்துத்தான் இதன்விளைவின் சாதகங்கள் உண்டு.




# தற்காலிக தீர்வும் நிரந்தர அபிவிருத்திக்கு நீண்ட இடைவெளியும்

## 2016 இற்கான வரவு - செலவுத் திட்டம்

தேசிய அரசின் நல்லாட்சிக் கான பட்ஜெட் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மகிந்த அரசின் ஆட்சியால் நொந்தும் வெந்தும் போன திறைசேரியை மீட்டெடுக்க வேண்டும் எனும் நோக்கோடும், மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு நல்லாட்சியரசு எதைச் செய்தது எனும் கேள்விக்கு விடையளிக்கும் முகமாகவும் இது வெளியிடப்பட்டுள்ளன. இதில் நன்மையும் உள்ளன தீமையும் உள்ளன. இது தொடர்பான பல விமர்சனங்கள் நாளுக்கு நாள் அரசியல்வாதி களாலும் ஊடகங்களாலும் விமர்சிக்கப்பட்டு வருகின்றன.

பட்ஜெட் என்றதும் பெரும்பான்மையான மக்கள் முதலில் எதிர்பார்ப்பது அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டு ள்ளனவா, அரச ஊழியர் களுக்கான சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளதா, நிவாரணங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளனவா என்றுதான்.

அவ்வாறான ஓரிரு விடயங்களைத்தான் மக்கள் முதலில் எதிர்பார்க்கின்றனர். அவற்றைத் தொடர்ந்துதான் மற்ற விடயங்களைத் தேடுகின்றனர். வாழ்க்கைச் செலவீன அதிகரிப்பின்றி கஷ்டமில்லாமல் வாழ்வதற் கான வழி முதலில் திறக்கப்பட வேண்டும். ஏனைய விடயங் களுக்கு இரண்டாமிடம் வழங் கப்படவேண்டும் என்பதே ஒட்டுமொத்த மக்களின் நிலைப்பாடாகும்.

மகிந்தவின் ஆட்சியில் மாடிக்கட்டிடங்கள் எழும்பின, கப்பற்வீதிகள் போடப்பட்டன, புகையிரதப் பயண விஸ்தரிப்பு இடம்பெற்றன. மக்களின் சுகபோக வாழ்க்கைக்குரிய அபிவிருத்திகள் அத்தனையும் இடம்பெற்றன. இருந்தும் இருந்தும் மகிந்தாவை ஏன் மக்கள் நிராகரித்தனர்...?

பசிகுறைந்த வருமானம் பெறுகின்ற அப்பாவிப் பொது மக்கள் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்சி யால் பசியோடு வாடும்போது காப்பெற் வீதியோ அல்லது கண்கவரும் மாடிக் கட்டடங்களோ அன்று அவர்களிற்கு அபிவிருத்தியாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் ஜனவரி 8ஆம் திகதி ஆட்சி மாறியதும் இந்தப் புதிய அரசு பெப்ரவரி மாதம், 2015 ஆம் ஆண்டுக் கான பட்ஜெட்டைக் கொண்டு வந்தது. அது மிகவும் பிரபல்யமாகப் பேசப்பட்டது. மக்களின் வரவேற்பைப் பெற்றது. அப்போது, தவித்த வனுக்குத் தண்ணீர் கிடைத்ததைப் போல் அந்த பட்ஜெட் அமைந்திருந்தது.

அந்த பட்ஜெட்டில் 13 அத்தியாவசியப் பொருட் களின் விலைகள் குறைக்கப்பட்டிருந்தன. அத்தோடு, மஹிந்தவின் ஆட்சியில் மக்களை ஆட்டிப் படைத்துக்கொண்டிருந்த எரிபொருட்களின் விலைகள் மக்கள் நிம்மதி அடையும் அளவுக்குக் குறைக்கப்பட்டு இருந்தன.

அதுபோன்றதோர் ஏற்பாடு 2016ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டிலும் காணக்கூடியதாக இருக்கின்றது. 2015ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் 13 அத்தியாவசியப் பொருட் களுக்கான விலைகள் குறைக்கப்பட்டதோடு, 2016ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் 11 அத்தியாவசிய பொருட்களுக்கான விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

அதாவது, அந்தப் பொருட் களின் விலைகள் குறைக்கப்பட்டு இருந்தநிலையில்தான், அவற்றுக் கான விலைகள் மீண்டும் குறைக்கப்பட்டுள்ளன. இது ஏழை மக்களுக்கு ஆறுதலைக் கொடுத்துள்ளது என்றே சொல்லவேண்டும்.

சில முக்கியமான பொருட் களின் விலைகளை எடுத்துக்கொண்டால், 2015 பட்ஜெட்டில் 400 கிராம் பால் மாவின் விலை 61 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் விலை 325 ரூபாவாக நிர்ணயிக்கப் பட்டது. இப்போது மீண்டும் 30 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் விலை 295 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த விலைக் குறைப்பை வரவேற்றே ஆக வேண்டும். மஹிந்தவின் ஆட்சியில் இந்த பால்மா விலை அதிகரிப்பு மக்களுக்குப் பெரும் தலை யிடியாகவே இருந்ததை எம்மால் மறக்கமுடியாது.

அப்போது வருடாவருடம் பால்மா இறக்குமதியாளர்கள் அதன் விலையை அதிகரித்தனர். அதற்காக அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதியும் இருந்தது. அதன்படி, பால்மா வகைகளின் விலைகள் வருடா வருடம் அதிகரிக்கப்பட்டதே தவிர குறைக்கப்படவில்லை. அடுத்தது எரிபொருட்கள். 1896 ரூபாவாக இருந்த சமையல் எரிவாயுவின் விலை 2015 பட்ஜெட்டில் 300 ரூபாவால் குறைக்கப்பட்டது. இப்போது மேலும், 150 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இது மக்களுக்கு எப்படிப்பட்ட நிம்மதியைக் கொடுக்கும் என்று சொல்லவே தேவை இல்லை.

சமையல் எரிவாயு விலை மட்டும் குறைந்தால்போதும் என்று இல்லத்தரசிகள் சொல்லுகின்ற அளவுக்கு மஹிந்தவின் ஆட்சியில் இதன் விலை தாறுமாறாக அதிகரித்திருந்தது. அதுபோல் மண்ணெண்ணெய். கிராமப்புற மக்களுக்கு இது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். 2015 பட்ஜெட் டில் இது 6 ரூபாவால்குறைக் கப்பட்டது. இப்போது 10 ரூபா வால் குறைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, கல்வியின் வளர்ச்சிக்காகவும் இந்த பட்ஜெட்டில் அதிக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதைக் காணலாம்.

(22 ஆம் பக்கம் பார்க்க...)





தமிழர் பிரதேசங்களுக்கு பூரண சுதந்திரத்தை பெறுகின்ற இலட்சியத்தை அடைகின்றமையில் தமிழ் இளையோர்கள் மிக தீவிரமாக இறங்கி உள்ளனர் என்று தமிழ் அரசியல்வாதிகள் இரகசியமாக ஒப்புக்கொண்டு உள்ளார்கள். இலட்சியங்களை அடைகின்றமைக்கு ஒரே ஒரு வழி வன்முறையே என்று இளையோர் அணி உணர்கின்றது என்று கூறப்படுகின்றது.

ஐக்கிய முன்னணிக்கு ஆதரவான வயதான தமிழ் தலைமையால் இளையோரை இனிமேல் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது என்று பெரிதும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

WikiLeaks

# விக்கிலீக்ஸ் வெளியிட்ட இரகசியங்கள்!!

பகுதி -08-

அன்பார்ந்த நம் வாசகர்களே! யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா படுகொலை குறித்து கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து வாஷிங்டனில் உள்ள அமெரிக்க வெளியுறவு தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்பப்பட்ட இராஜதந்திர ஆவணத்தை இம்முறை பார்ப்போம்.

அல்பிரட் துரையப்பா 1975 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட நிலையில் ஆவணம் மறுநாள் அனுப்பப்பட்டு உள்ளது.

- யாழ்ப்பாண மேயர் அல்பிரட் தங்கராஜா துரையப்பா முகமூடி அணிந்த துப்பாக்கிதாரிகள் மூவரால் ஜுலை 27 ஆம் திகதி மாலை படுகொலை செய்யப்பட்டார். இவர் மூத்த தமிழ் அரசியல்வாதியும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் யாழ்ப்பாண கிளைத் தலைவரும் ஆவார். அத்துடன் பிரதமரின் புதல்வர் அனுரா பண்டாரநாயக்க வின் அந்தரங்க நண்பரும் ஆவார்.

சூட்டுக்காயங்கள் பலவற்றுக்கும் உள்ளாகி உடனடியாகவே இறந்து போனார். யாழ்ப்பாணமும், சுற்றுப்புற இடங்களும் அமைதியாக உள்ளன என்று பதில் அரசாங்க அதிபர் ஜுலை 28 ஆம் திகதி எமக்கு கூறினார்.

ஆளும் ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு ஆதரவான அரசியல் வாதிகளுக்கு எதிராக படுகொலை முயற்சிகள் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றுள்ளன என்று அறிக்கைகள் கூறுகின்றன. குறிப்பாக கடந்த 10 மாதங்களில் நாசகார சம்பவங்கள் பல இடம்பெற்று உள்ளன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

தமிழர் பிரதேசங்களுக்கு பூரண சுதந்திரத்தை பெறுகின்ற இலட்சியத்தை அடைகின்றமையில் தமிழ் இளையோர்கள் மிக தீவிர மாக இறங்கி உள்ளனர் என்று தமிழ் அரசியல்வாதிகள் இரகசியமாக ஒப்புக்கொண்டு உள்ளார்கள். இலட்சியங்களை அடைகின்றமைக்கு ஒரேயொரு வழி வன்முறையே என்று இளையோர் அணி உணர் கின்றது என்று கூறப்படுகின்றது.

ஐக்கிய முன்னணிக்கு ஆதரவான வயதான தமிழ் தலைமை யால் இளையோரை இனிமேல் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது என்று பெரிதும் சுட்டிக் காட்டப்படுகின்றது. தாக்குதல்தாரிகள் தமிழ் பிரிவினைவாத அமைப்பை சேர்ந்தவர்கள் என்று அரசாங்கம் காட்டினால் ஒழிய இனமுறுகல்கள் அதிகரிக்கின்ற வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

வடக்கில் உள்ள தமிழர்களுடன் அரசாங்கம் கடந்த இருவருடங்களாக மேற்கொண்டுவந்த அரசியல் சமரச முயற்சிகள் வெற்றிபெறவே இல்லை என்பதையும் இப்படுகொலை காட்டி நிற்கின்றது.

### துரையப்பாவுடன் செல்வநாயகத்தை இணைத்து

இதேவேளை தந்தை செல்வாவின் மரணம் குறித்து கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் வாஷிங்டன் தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்பிவைத்து உள்ள இராஜதந்திர ஆவணத்தையும் பார்வையிடுவோம்.

1977ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், 26 ஆம் திகதி இவர் காலமான நிலையில் மறுநாள் ஆவணம் எழுதப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டு உள்ளது.

எஸ்.ஜே.வீ. செல்வநாயகம் - வயது 79, ஏப்ரல் 26 ஆம் திகதி இதயம் இயங்க மறுத்ததால் காலமானார். இவர் பெடரல் கட்சியின் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின்



இணைத் தலைவரும் ஆவார். ஒட்டுமொத்த ஒன்றரை மில்லியன் ஈழத் தமிழர்களின் தலைவர் இவர் என்பதில் எவ்வித அபிப்பிராய பேதமும் கிடையாது.

தமிழர்களுக்கென தனிநாடு ஒன்றை ஸ்தாபிக்கின்ற முயற்சிகளில் இவரின் போக்கில் அண்மையில் மாற்றம் நேர்ந்தது. ஆயினும் ஒரு பொதுத்தேர்தலுக்கு முந்திய இவரின் மரணம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒற்றுமையை மேலும் தகர்த்துவிடும். ஏற்கனவே இளைஞர் பேரவை, தமிழ் காங்கிரஸ் ஆகியவற்றுடன் ஏற்பட்டு உள்ள பிணக்கு காரணமாக கூட்டணி ஏற்கனவே பலவீனம் அடைந்து காணப்படுகின்றது.

இவர் பல மாதங்கள் சுகவீனம் அடைந்து காணப்பட்டநிலையில் இறந்துபோனார். இவர் பார்கின்சன் நோயால் பீடிக்கப்பட்டு, தீர்க்கமாக கதைக்கக்கூட முடியாதவராக பல வருட காலங்கள் அந்தரித்தார். ஆயினும் ஈழத் தமிழ் இனத்தின் தலைவராகவும், இலங்கையின் கனவான் அரசியல்வாதியாகவும் மதிக்கப்பட்டார்.

1952 - 1956, 1972 - 1975 ஆகிய காலப் பகுதிகளை தவிர்த்து 1947 ஆம் ஆண்டில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்தார். புதிய அரசமைப்பில் தமிழுக்கு உரிய அந்தஸ்து வழங்கப்படவில்லை என்று தெரிவித்து 1972 - 1975 காலப் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 1975 ஆம் ஆண்டு பெருவாரி வாக்குகளால் நாடாளு மன்றத்துக்கு மீண்டும் தெரிவானார். இவ்வருடம் போட்டியிடுவார் என்றும் எதிர்பார்க்கப்பட்டார்.

ஊடுருவி

(யாத்திரை தொடரும்)

# நிலமெல்லாம் இரத்தம்

180

பா.ராகவன்



தங்களுடைய இக்கருத்தை அழுத்தம் திருத்தமாக உலக மக்கள் மத்தியில் பதியச்செய்வதற்காக, Dome of the Rock INa–அல் அக்ஸா என்று குறிப்பிடுவது யூதர்களின் வழக்கம். அல் அக்ஸா மசூதியை இடித்து விட்டுத் தங்கள் தேவாலயத்தை மீண்டும் அங்கே எழுப்புவதற்குத் தொல்பொருள் துறையின் உதவியை அவர்கள் நாடினார்கள்.

உண்மையில் அல் அக்ஸா வேறு, Dome of the Rock வேறு. இரண்டும் பைத்துல் முகத்தஸ் என்கிற ஒரே வளாகத்தில் இருக்கும், இரு வேறு மசூதிகள்.

அயோத்தி மாதிரியேதான். யூத தேவாலயங்கள் – சாலமன் ஆலயமே ஆனாலும் சரி எப்படியானாலும் மசூதிகளின் காலத்துக்கு முற்பட்டவைதான். ஏனெனில், இஸ்லாத்தின் தோற்றமே காலத்தால் மிகவும் பிற்பட்டது. ஆனால், மசூதி இருக்கும் ஓரிடத்தில்தான் தங்களது புராதன ஆலயம் இருந்தது என்று நிறுவுவதற்கு, அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள்தான் பல விபரீதங்களை உள்ளடக்கியதாக இருந்தது. ஆதாரங்களில் தெளிவு இல்லாதது அவற்றுள் முதலானது. அணுகுமுறையில் முரட்டுத்தனம் மிகுந்திருந்தது அடுத்தது. பேசித் தீர்க்கவேண்டிய பிரச்சினையை, இராணுவ நடவடிக்கைமூலம் தீர்க்க நினைத்தது மூன்றாவது.

புராண, சரித்திர காலங்கள் தொடங்கி மிகச் சமீபத்தில் 1967ஆம் ஆண்டுவரை இந்த மசூதி வளாகம், முஸ்லிம்களின் வசம்தான் இருந்திருக்கிறது. பலஸ்தீன் யூதர்களை மொத்தமாக விரட்டியடிக்கும் தமது அரசியல் நோக்கத்துக்கு வலுச்சேர்ப்பதற்காகவே, இஸ்ரேலிய அரசு அல் அக்ஸா மசூதி விஷயத்தைக் கையில் எடுத்து, அங்கேதான் சாலமன் தேவாலயம் இருந்தது என்று தொடர்ந்து பிரசாரம்செய்து, மக்களின் மதஉணர்வுகளைத் தூண்டிவிட ஆரம்பித்தது.

பிரச்சினையைத் தொல்பொருள் ஆய்வுத்துறையின் வசம் அளித்துவிட்டு, "நீங்கள் எங்கே வேண்டுமானாலும் தோண்டிப் பாருங்கள்" என்று அனுமதியும் அளித்தது.

ஒரு மசூதி இருக்கிறது. மக்கள் அங்கே தினசரி தொழுதுகொண்டிருக்கிறார்கள். உள்ளூர் மக்கள் தவிர உலகெங்கிலும் இருந்து ஜெருசலேத்துக்கு யாத்திரைவரும் முஸ்லிம்கள் அத்தனைபேரும் அந்த மசூதிக்கு வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். (முஸ்லிம் உலகின் மூன்றாவது மிக முக்கியமான வழிபாட்டுத்தலம் அது.) இறைத்தூதருடன் தொடர்புடைய ஒரு நினைவுத்தலம் அது. அப்படிப்பட்ட இடத்தில் தோண்டிப் பார்க்க அனுமதி அளிப்பது என்றால், என்ன அர்த்தம்?

1967ஆம் ஆண்டு யுத்தத்தின் போது ஜெருசலேம் நகரை முழுமையாக யூதர்கள் கைப்பற்றிய பிறகுதான், இதெல்லாம் ஆரம்பமானது. யுத்தத்தில் வெற்றிகண்ட மறுநாளே, இதற்கான பணிகள் தொடங்கிவிட்டன. முதலில் பள்ளிவாசலின் மேற்குப் பகுதியில் பதினான்கு மீட்டர் நீள, ஆழத்துக்குத் தோண்டினார்கள். அடுத்த ஒன்றரை ஆண்டு கால இடைவெளியில், அந்த இடத்தில் சுமார் எண்பது மீட்டர் நீளத்துக்குத் தோண்டி ஓர் அகழிபோல் ஆக்கிவிட்டார்கள். பள்ளிவாசலின் மேற்குப் பகுதி வழியே, யாருமே உள்ளே போகமுடியாதவாறு ஆகிவிட்டது.

(தொடரும்)




30

# விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

மண்டேலா தன் முடிவை மாற்றிக்கொண்டான். சட்டம் படித்திருந்ததால் ஏதாவதொரு வழக்கறிஞரிடம் உதவியாளராக சேர்ந்து பணியாற்றிக்கொண்டு அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை கொண்டு மேற்படிப்பை தொடர்ந்து படித்து பூர்த்திசெய்து உயர்பதவியில் அமர்ந்துகொண்டு கறுப்பின மக்களின் முன்னேற்றத்திற்காக சட்டத்தை தட்டிக் கேட்போம் என்று முடிவுசெய்து கார்லிக் பெக்கினியிடம் தன் முடிவை தெரிவித்தான். அவரோ "மண்டேலா நீ எடுத்தது நல்ல முடிவு. இந்தத் துறையில் சென்றால்தான் நீ முன்னேறுவாய். உன் திட்டமும் நிறைவேறும். நானும் அதற்கு உதவுகிறேன். ஊரில் எனக்கு தெரிந்த சில பெரியவர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் சொல்லிவைக்கிறேன். உனக்கு நல்ல எதிர்காலம் அமையும்" என்று நம்பிக்கை ஊட்டி ஆசீர்வதித்தார்.

மண்டேலா சட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக வழக்கறிஞரின் உதவியாளராக சேர்ந்துவிடவேண்டும் என்று அல்லும் பகலும் வேலைதேடி அலைந்தான். இறுதியில் கார்லிக் பெக்கினி அவனுக்கு கைகொடுத்தார். ஒருநாள் ஜொஹன்னர்ஸ்பெக்கில் உள்ள புகழ்பெற்ற ஒரு அலுவலகத்திற்கு கார்லிக் பெக்கினி மண்டேலாவை அழைத்து சென்று வால்டர் சிசுலு என்பவரை அறிமுகப்படுத்தி மண்டேலாவின் எதிர்கால திட்டங்களைக் கூறி அவனுக்கு உதவுமாறு வேண்டிக் கொண்டார். சிசுலு என்பவர் காணி வாங்கி விற்கும் வியாபாரம் நடத்தி வரும் பெரும் வர்த்தகர் மட்டுமல்ல புகழ்வாய்ந்த உள்ளூர் தலைவரும்கூட.

மண்டேலாவை பார்த்த உடனேயே சிசுலுக்கு பிடித்து போய்விட்டது. சிசுலு பேசிய ஆங்கிலம் சரளமாகவும் நவீனமாகவும் இருந்ததால் மண்டேலா சிசுலுவிடம் கவர்ந்திழுக்கப்பட்டான். இருவரும் மனம்விட்டு மணிக் கணக்கில் பேசினார்கள். மண்டேலா சிசுலுவிடம் தன் எண்ணங்களை தயக்கமின்றி வெளிப்படுத்தினான். இருவர் மனதிலும் நட்பு எனும் விதை வேர்விட தொடங்கியது.

இந்த சிசுலுதான் பின்னாட்களில் தன் வாழ்நாள் தோழராக தொடர்ந்து வரப்போகிறார் என்பது என்று மண்டேலா அத்தருணத்தில் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை. சிசுலு மண்டேலாவை பார்த்து "நான் உனக்கு உதவுகிறேன் தோழனே. ஏனோ தெரியவில்லை. உன்னை பார்த்தவுடனேயே எனக்கு உன்னை பிடித்துவிட்டது. எனக்கு தெரிந்த அலுவலகத்தில் வழக்கறிஞரின் உதவியாளராக உன்னை சேர்த்துவிடுகிறேன். அதன்பின் தென்னாபிரிக்க பல்கலைக்கழகத்தில் இணைந்து நீ பட்டப்படிப்பை தொடர வேண்டும். அப்போதுதான் உன் திட்டம் நிறைவேறும். கறுப்பின மக்களின் அடிமைத்தன வாழ்க்கைக்கு விடுதலையளிக்கும் உன் நல்ல எண்ணம் சீக்கிரமே நிறைவேறும். அதற்கு இப்போதே என் நல் வாழ்த்துக்கள்" என்று உற்சாகமாகக் கூறி வழியனுப்பிவைத்தார்.

மண்டேலாவும் சிசுலுவை முழுமையாக நம்பினான். இருவரும் உற்ற தோழர்கள் ஆனார்கள். மண்டேலாவுக்கு வாக்கு கொடுத்தபடி சிசுலு அலெக்சாண்ட்ரியாவில் இருந்த விட்கன் சிடெல்ஸ்கி அன்ட் ஈடல்பேன் எனும் நிறுவனத்தில் மண்டேலாவுக்கு கிளார்க் வேலை வாங்கி கொடுத்தார். அந்நிறுவனத்தில் கறுப்பினர்களும் வெள்ளையர்களும் கலந்தே பணியாற்றினார்கள்.

மண்டேலாவின் உயர் அதிகாரியான லாஸர் சிடெல்ஸ்கி ஒரு யூதர். மண்டேலாவிடம் தோழமையுடன் உரையாடினார். ஆபிரிக்கர்களின் நலனுக்காக அவர் தனியே சில முயற்சிகளை மேற்கொண்டிருந்தது மண்டேலாவை கவர்ந்தது. மண்டேலா தன் திறமையை தனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று சிடெல்ஸ்கி அறிவுறுத்தினார். ஒரு வழக்கறிஞராக மாறி நீ உன் இன மக்களுக்கு உதவவேண்டும். அதுதான் அவர்களுக்கு நீ ஆற்றும் நன்றிக்கடன் என்று கூறி மண்டேலாவுக்கு உற்சாகமூட்டினார்.

யூதர்கள் வெள்ளையர்களை போன்றவர்கள் அல்லர் என்று மண்டேலா நினைத்துக்கொண்டான். ஆபிரிக்கர்களை போலவே அவர்களும் சரித்திரத்தால் வஞ்சிக்கப்பட்டவர்கள். எனவே ஆபிரிக்கர்களின் வலி அவர்களுக்குத் தெரியும். தெரிந்ததால் தான் நான் கறுப்பன் என்று தெரிந்திருந்தும் எனக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள் என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டான்.

(தொடரும்)



# இயற்கையைத் தொலைத்துவிட்ட செயற்கை வாழ்க்கை!



இயந்திரமயமான இந்தப் பரபரப்பு வாழ்க்கை ஓட்டத்திலே சிறிவர்கள் தொடக்கம் முதியவர்கள்வரை தினமும் ஓடிக்கொண்டுதானிருக்கின்றோம். இந்த நவீன கட்டமைப்பிலே ஒருவகையான செயற்கை வாழ்க்கை முறைதான் நம்மிடையே நிரந்தர இடம்பிடித்திருக்கிறது.

எல்லாமே செயற்கையாகிப் போய்விட்டது. துரதிர்ஷ்டவசமாக மனிதர்களின் குணங்கள்கூட செயற்கையாகிப் போய் விட்டதால் அவநம்பிக்கைகளும், ஏமாற்று மோசடிகளும், பித்தலாட்டங்களும் பிரச்சினைகளும் உருவாகிவிட்டன.

அடிப்படையில் மனித ஆயுள், இயற்கை, இயல்பு என்பனவற்றைப் புறந்தள்ளிவிட்டு எல்லாமே மனித மௌட்டீக கற்பனைகளில் இடம்பிடித்துவிட்டதால் ஒட்டுமொத்தத்தில் இந்த உலகமே நாசகார அழிவுகளால் சூழப்பட்டுள்ளது.

மனிதன் தனது கண்டுபிடிப்புக்களால் தன்னைத்தானே அழிவுக்குள்ளாக்கிக் கொள்வதோடு இயற்கைக்கும் நிரந்தரத் தீங்குவிளைவிக்கும் செயற்பாடுகளைச் செய்துகொண்டிருப்பதால் இந்த உலகம் மனிதர்களும் இன்னபிற ஜீவராசிகளும் வாழ்வதற்கு இலாயக்கற்ற ஒரு இடமாக மாறிக்கொண்டிருக்கின்றது.

இன்றைய நவீனயுகத்தில் பிளாஸ்டிக் இல்லாமல் ஒருநாள் பொழுதைக்கூட நகர்த்தமுடியாது போலிருக்கிறது. காலையில் படுக்கையிலிருந்து எழுந்தது முதல் மீண்டும் இரவு படுக்கைக்கு செல்லும்வரையில் மனிதர்கள் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருள்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, ஏராளம்.

"பிளாஸ்டிக் இயற்கைக்கு கேடு விளைவிப்பவை. சுற்றுச் சூழலை மாசுபடுத்துபவை. மனிதர்களுக்கு புற்று நோய் உள்ளிட்ட கொடிய நோய்களை உண்டாக்கும். எளிதில் அழியாது. எனவே, அவற்றைப் பயன்படுத்தாதீர்" என என்னதான் உரக்கக் கூவினாலும், பிளாஸ்டிக் அரக்கன் அழிந்தபாடில்லை. குறைந்திருக்கிறதா என்றால் கண்ணுக்குத் தெரிந்த வரையில் அப்படியும் தென்படவில்லை.

ஒருபுறம் குறைத்தால், மறுபுறம் புதிய அவதாரத்தில் வந்துநிற்கிறது. 1862-இல் லண்டன் மாநகரில் நடைபெற்ற கண்காட்சி ஒன்றில் அலெக்ஸாண்டர் பார்க்ஸ் என்பவர், முதல் முறையாக மனிதனால் உருவாக்கப்பட்ட பிளாஸ்டிக்கை காட்சிக்கு வைத்தார்.

அன்று முதல், குழந்தைகளின் விளையாட்டுப் பொம்மைகள் தொடங்கி பெரிய கார் பாகங்கள் வரையில் இன்று பிளாஸ்டிக் இல்லாத பொருள்களே இல்லை என்றாகிவிட்டது. கடந்த நூறு ஆண்டுகளுக்கும் மேலாக மனித வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஆகிவிட்டது இந்த பிளாஸ்டிக். சரி, பொட்டலமாக வாங்கிக் கொண்டுபோய் இருப்பிடத்தில் வைத்து சாப்பிடலாம் என்றால் சாதம், சாம்பார், ரசம், மோர், கூட்டு, பொரியல், அவியல் அனைத்தும் பிளாஸ்டிக் பையில்தான்.

முன்பெல்லாம், மளிகை கடைக்குச் செல்வோர் துணிப்பையைக் கொண்டு செல்வர். இப்போது அதை எல்லாம் எடுத்துச் சென்றால் கேவலம் என்ற நினைப்பு. பிளாஸ்டிக் பைகளில் வாங்கி வருகிறோம். கூடவே தீராத வியாதிகளையும் என்பதை மறந்துபோகிறோம்.

பிளாஸ்டிக் பையில் சூடான கோப்பி, பால் போன்ற திரவத்தைப் பொட்டலமிடும்போதோ அல்லது கொதிக்கும் எண்ணெய்யில் பிளாஸ்டிக் மேல் உறைகளை முக்கும்போதோ, சூடான உணவுப் பொருள்களை அதில் வைக்கும்போதோ அதிலிருந்து "பிஸ்பெனொல்-ஏ" (BisphenolA) என்ற வேதிப்பொருள் இயல்பான அளவைவிட சுமார் 55 மடங்கு அதிகமாக வெளியேற்றப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

அந்த வேதிப்பொருள் கலந்த உணவுப் பொருள்களை மனிதர்கள் உட்கொள்ளும்போது அவை இரத்த ஓட்டத்தில் கலந்து உடலில் உள்ள நாளமில்லாத சுரப்பிகளின் செயல்பாட்டை மாற்றி அமைக்கின்றன.

அதனால், மூளை கட்டமைப்பில் சேதம், பதற்றம், படிக்கும் குழந்தைகளுக்குப் படிப்பில் கவனம் செலுத்தமுடியாமை, நோய் எதிர்ப்புத் தன்மை குறைதல், பெண் குழந்தைகள் முன்னமே பூப்பெய்தல், இனப்பெருக்க உறுப்புகளில் பாதிப்பு, மலட்டுத்தன்மை, முறையற்ற பாலின நடவடிக்கை, விந்து திரவ சுரப்பு குறைதல் என எண்ணற்ற பாதிப்புகள் ஏற்படுவதாக ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன.

விலை குறைவு, எடை குறைவு, உலோகத்துக்கு இணையான வலிமை போன்ற காரணங்களால் ஆரம்ப காலங்களில் மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது இந்த பிளாஸ்டிக். இன்று புலி வாலைப் பிடித்த கதையாக மாறிவிட்டது. சுற்றுச் சூழலுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்திவரும் இந்த பிளாஸ்டிக் அழிய சுமார் 400 முதல் 1,000 ஆண்டுகள் வரை ஆகுமாம்.

ஆதலால்தான் எதிர்கால சந்ததிக்கு பாதுகாப்பான, பழுதற்ற உலகை விட்டுச் செல்வோம் என்ற எண்ணத்துடன் பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தவிர்ப்போம் என அரசும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் வீதி, வீதியாக கோஷத்துடன் வலம்வருகின்றன. என்ன பயன்? பாத்திரத்தையும், பையையும் கையில் எடுக்கத் தயக்கம் காட்டும்வரையில் பிளாஸ்டிக்குக்கு மரணமில்லை.

உலகின் பல்லுயிர் வளம் கட்டாயமாக பாதுகாக்கப்படவேண்டிய ஒன்றாகும். இதற்காகவே பல்வேறு பன்னாட்டு அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன குப்பைக் குவியல்கள் - இந்நூற்றாண்டின் நினைவுச் சின்னங்கள் நமது சூழலில் குப்பைகளும், கழிவுப்பொருட்களும் நிறைந்து உள்ளன. இவைகள் மறைந்து போவதற்கோ நமது பார்வையைவிட்டு அகன்று போவதற்கான சாத்தியக் கூறுகளோ தற்போதைக்கு இல்லை.

மாறிவரும் வாழ்க்கைமுறையே குப்பைகளின் அதிகரிப்பிற்கு காரணமாகும். இயந்திரமயமாகிப் போன வாழ்க்கைப் பாதையில் ஈடுகொடுத்து செல்வதற்கு ஏற்ப நம்முடைய தேவைகளும், விருப்பங்களும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன.

குப்பைகளின் உற்பத்தியில் வளர்ந்து வரும் நாடுகளைவிட வளர்ந்த நாடுகளின் பங்கு மிக அதிகமாகும். புது மாதிரி சாதனம் ஒன்று அறிமுகமாகி விற்பனைக்கு வரும் முன்னமே மற்றொரு மாதிரி உருவாக்கப்பட்டு விடுவதாலும் விற்பனைச் சந்தையில் உள்ள புதிய பொருட்களை உடைமையாக்கி கொள்ளவேண்டும் என்ற மக்களுடைய மோகத்தினாலும் கழிவு சேருதல் அதிகமாகிறது.

செயற்கை பொருட்கள் - இயற்கையின் எதிரிகள் நாம் உபயோகித்து கழிவு என தூக்கியெறியும் பொருட்கள் நம்முடைய வாழ்க்கை முறை எந்த அளவிற்கு இயற்கைக்கு முரணாக அமைந்துள்ளது என்பதைக் காட்டுகிறது. நமக்கு தேவையானவற்றை நமது இயற்கை சூழலில் இருந்து பெற்று பயன்படுத்துவதோடு அந்த சூழலால் ஏற்றுக் கொள்ளமுடியாத செயற்கையாக உருவாக்கப்பட்ட கழிவுகளையும் அதில் சேர்த்துக் கொண்டேவருகிறோம். இயற்கை சுழற்சியானது, கழிவுப்பொருட்களை தீங்கு விளைவிக்காத பொருட்களாக மாற்றக்கூடிய தன்மைகொண்டது.

ஆனால், நாம் வெளியேற்றும் கழிவுகளின் அளவு மிக அதிகமாக இருப்பதால் இயற்கைச் சிதைவு சக்தி அளவிற்கு அப்பாற்பட்டதாக உள்ளது. கழிவுப் பொருட்களில் அதிக அளவு பிளாஸ்டிக் மற்றும் இரசாயனப் பொருட்கள் இருப்பதே இதற்கு காரணமாகும். இயற்கையோடு இணைந்த வாழ்க்கை இயற்கை மனிதனுக்கு வாழ்வளிக்கிறது. வாழ்க்கையினைக் கற்றுக்கொடுக்கிறது. இயற்கையில்லையென்றால் மண்ணில் ஈரமில்லை... விளைச்சலில்லை... அறுவடையில்லை... மனித வாழ்க்கை இல்லை. ஏன் உயிரினங்களுமில்லை. உயிரினங்கள் ஒன்றையொன்று சார்ந்து வாழும் வாய்ப்பை வழங்கிவருவது இயற்கை. இதனை மிகத் தெளிவாய் உணர்ந்ததால்தான் பழங்காலத்து மக்கள் தங்களின் வாழ்வை இயற்கையோடு இணைத்தே வாழ்ந்தார்கள்.

இயற்கையை அவர்கள் நேசித்தார்கள். இயற்கையைக் காத்தார்கள்.

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

அப்போதெல்லாம் மாதம் மும்மாரி மழை பொழிந்தது. அதற்கு சாட்சிகளாய் பழந்தமிழ் நூல்கள் இன்றும் உள்ளன. இதை அவ்வவ்காலத்து எழுந்த இலக்கியங்கள் நமக்கு புலப்படுத்துகின்றன. மனிதர்களின் வாழ்வில் இயற்கைப் பற்றுக் குறையும்போது அழிவுகளும் உண்டாகின்றன. இயற்கை என்ற சொல் பழந்தமிழில் இயல்பு என்றபொருளில் வழங்கியது. தமிழ்ப் பேரகராதி தரும் பல பொருள்களில் "செயற்கைக்கு மாறானது" என்ற பொருளும் உண்டு. இயற்கை இறைவன் படைப்பு. மனிதன் உருவாக்காத, உருவாக்க இயலாத அனைத்தும் இயற்கையே என்று சொல்லும் கூட்டமும் உண்டு. இயற்கை இறைவனின் படைப்பு என்றால் அந்த இயற்கையை அழிக்கும் கூட்டமும் இறைவனை வழிபடுகிறவர்களாக இருக்கிறார்களே? தனது படைப்பை அழிப்பவர்களை இறைவன் ஆசீர்வதிப்பது ஏன்? என்று எதிர்வாதம் செய்பவர்களும் உண்டு.

இயற்கையே செயற்கைக்கும் அடிப்படை ஆகின்றது. இயற்கை இல்லாவிட்டால் செயற்கை இல்லை. செயற்கை இன்றியும் இயற்கை நிகழும். நடுவாரும் நீர் பாய்ச்சுவாருமின்றி மரங்கள் பல வளர்ந்து தொகுதியாகக் கனியளித்து நிற்கும்போது அதை இயற்கைச் சோலை என்கிறோம்.

அதை ஒத்த அல்லது விஞ்சிய சோலையொன்றை மனிதன் உருவாக்கும்போது அது செயற்கைச்சோலை ஆகின்றது. மனிதனின் செயல்திறனால் சோலை பெற்ற அமைப்பே செயற்கை. சோலையை ஆக்கிய மரங்களும் கனிகளும் இயற்கையே. இயற்கையில் செயற்கை அமைவதில்லை.

இவ்வியற்கை நிலமும் நீரும் நெருப்பும் காற்றும் ஆகாயமும் கலந்த மயக்கம். மனிதனும் இயற்கை. மலையும், மடுவும் இயற்கை மின்னும். மழையும், முகிலும் இடியும், காற்றும் கடலும், புள்ளும் விலங்கும், மரமும் செடியும். இவைபோல இறைவன் படைத்த பலவும் இயற்கை.

இயற்கையின் நகல் கலை. அது இயற்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி. இயற்கையால் கலையும் கலையால் இயற்கையும் செவ்விப்பெறுகின்றன. இயற்கை கட்டுப்பட்டதோ, சலனமற்றதோ அல்ல; இயற்கை தனிஆற்றல் உடையது. காலச் சுழற்சியில் அதன் ஆற்றல் பொலிகிறது. வளமும் வளர்ச்சியும் ஆற்றலும்மிக்க இவ்வியற்கையின் உயிர்த் துடிப்பால் அதன் வடிவமும் வண்ணமும் மாறிக்கொண்டே இருக்கின்றன. இதனால் இவ்வியற்கையை, வாழ்க்கையைப் போன்று வடிவற்றது என்றும் கூறுவார்கள்

காலை முதல் இரவுவரை, இரவு முதல் விடியல்வரை அலரும் மலர்களும், உதிரும் இலைகளும், ஒளிரும் ஆதவனும் பொழியும் நிலவும் எனக் காட்சி மாறுகிறது. மணிக்கு ஆயிரம் கவினுறு காட்சிகளை வழங்கும் இயற்கைக் கன்னி என்றும் முதிர்வதில்லை. எழில்மிக்க இயற்கையைக் காரியம் என்பர். இக்காரியத்தை ஆக்கிய காரணன் இறைவனே. இயற்கையை இறைவனின் வெளியீடாகப் பல நிலைகளில் காணலாம். இறைவனின் ஆற்றலை மனிதனின் சிற்றறிவுக்கு எட்டாத அவன் பேரறிவு மாட்சியினைப் பறைசாற்றுவதும் இயற்கையே. இறைவனின் படைப்பாம் இயற்கையின்முன் மனிதனின் செயற்கை ஆக்கங்கள் செயலிழந்துவிடும்.

(21 ஆம் பக்கம் பார்க்க)

# பாரிஸ் குண்டுவெடிப்பு

**உலகம்பூராவும் அமெரிக்க ஹொலிவூட், பிரிட்டன், பிரான்ஸ், திரைப்படங்கள் குறிப்பாக துப்பறியும் பின்னணியைக்கொண்ட ஜேம்ஸ் பான்ட் பாணி திரைப்படங்கள் சினிமா ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றவை. இந்த திரைப்படங்கள் வெறும் பொழுதுபோக்கு ரசனை மட்டும் கொண்டவை அல்ல. அமெரிக்க மேற்கத்தேய நாடுகளின் உளவாளிகளின் அளவற்ற தீரத்தையும், அவர்களிடம் கைவசமிருந்து மேம்பட்ட விஞ்ஞான தொழில்நுட்ப ஆற்றலையும் அளவுக்கதிகமாக பறை சாற்றியது. அமெரிக்கா, சோவியத் போட்டியில் அமெரிக்க CIA உளவாளிகள் சோவியத் KGB உளவாளிகளை எவ்வாறு தோற்கடிக்கிறார்கள் என்பது ஹொலிவூட் படங்களின் பிரசாரமாகும்.**




கார்த்திகை 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாரிஸின் மையப் பகுதியில் நிகழ்ந்த கோர குண்டு வெடிப்பு பிரான்சின் வரலாற்றில் ஒரு கரிநாளாக, கறைபடிந்த நாளாக நினைவுகூரப்படுகின்றது. உலக வரைபடத்தில் வடஅமெரிக்காவும், மேற்கு ஐரோப்பாவும் செழுமைமிக்க நாடுகளாகவும், ஜனநாயகம், வட்டவாட்சி, மனிதஉரிமை பேணல் ஆகியவற்றில் பெருமைமிக்க நாடுகளாகவும் விளங்குகின்றன. பிரான்சு நாட்டை எடுத்துக்கொண்டால் பிரான்சியப் புரட்சியின் தாயகம், சோவியத்தில் 1917ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஒக்டோபர் புரட்சியின் முன்னோடி பிரான்சியப் புரட்சி என்பது மீண்டும் வரலாற்றின் பக்கங்களைப் புரட்டும்போது ஞாபகத்துக்கு வரும் விடயங்கள். பிரான்சிய நாடு நாகரிகத்துக்கும், ஜனநாயகத்துக்கும் இலக்கியத்துக்கும் பெயர்பெற்ற நாடாகும். இன்றும் பாரிசில் அமைந்துள்ள அரங்கு ஒன்று ஜனநாயக விழுமியங்களுக்கான மண்டபமாக அமைந்துள்ளது. பிரான்சிய நாட்டு தலைவரையோ அரசாங்கத்தையோ அல்லது உலகின் வேறு தலைவர்களையோ மனதுக்கு விரும்பியபடி விமர்சனம் செய்யவோ, உரத்துப் பேசவோ திட்டித்தீர்க்கவோ இந்த மண்டபம் இடமமைத்துத் தந்துள்ளது. ஐ.நா. சபையின் ஐந்து நிரந்தர பாதுகாப்பு சபை நாடுகளில் பிரான்சும் ஒன்றாகும்.

உலக யுத்த வரலாற்றில் மிகச் சிறந்த தளபதிகளில் ஒருவராக வரலாற்றாசிரியர்களால் கணிக்கப்பட்ட நெப்போலிய மாவீரரின் தாய்நாடாகும். இவ்வாறான சிறப்பு அம்சங்கள் பொருந்திய பிரான்ஸ் நாட்டின்மீது உலகில் இன்று மிகக் கொடூரமான பயங்கரவாத இயக்கமாக ISIS (ஈராக் மற்றும் சிரியா இஸ்லாமிய தேச அமைப்பு) தனது கைவரிசையை காட்டுவதற்கு முன்வந்தமை பல வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தி உள்ளது. ISIS எனும் அமைப்பு ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் சில பிரதேசங்களில் பலமாக காணப் படுகிறது. அமெரிக்க ISIS-ஐ ஒழித்துக் கட்டுவேன் என சபதம் பூண்டுள்ளது. ரஷ்யாவின் விமானங்கள் சென்ற மாதம் அடையாளம் காணப்பட்ட ISIS தலங்கள்மீது விண்வெளி தாக்குதல் நடாத்தி பெரும்சேதத்தை விளைவித்துள்ளது என்பது பழைய செய்தி.

பயங்கரவாதம் என்பது மிகவும் கண்டிக்கத்தக்கது எனவும் உலக அரங்கிலிருந்து பயங்கரவாதம் தூக்கி எறியப்படவேண்டும் என்பதும் ஐ.நா சபை, வேறு சர்வதேச அமைப்புக்கள். தனிப்பட்ட நாடுகளின் கொள்கைகளிலும், தீர்மானங்களிலும் பிரத்தியேக இடத்தைப் பெற்றுள்ளது. குறிப்பாக செப்டெம்பர் பதினொன்று நியூயோர்க்கின் உலக வர்த்தக மையத்தின் மீது அல்கைதா இயக்கத்தால் மேற்கொண்ட வான்வெளி தாக்குதல் பயங்கரவாதத்துக்கு எதிரான தாக்குதலில் புதிய சிந்தனையை தோற்றுவித்தது. அதைப்போன்று ஐப்பசி, 13இல் பாரிசில் இடம்பெற்ற தாக்குதல்களிலிருந்து அப்பாவி மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்கின்ற முனைப்பில் பெரும்மாற்றத்தை ஊக்குவித்துள்ளது.

பாரிசினை மையப்பகுதியான மிக ஆரவாரமிக்க நகர்ப்புறத்தில் தொடர்ச்சியான குண்டுவெடிப்புத் தாக்குதல்களும் துப்பாக்கி வேட்டுக் களும் 129 பெறுமதியான மனித உயிர்களைத் காவுகொண்டுள்ளது. இருநூறுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது எனச் செய்திகள் கூறுகின்றன. இந்த தாக்குதலுக்கு ISIS உரிமை கோரியுள்ளது. தாக்குதல் நடாத்திய குழுவில் எண்மர் செயற்பட்டதாகவும்



இன்றைய நிலவரப்படி சகலரும் கொன்றொழிக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

செப்டெம்பர் 11, ஒக்டோபர் 13 தாக்குதல்கள் பல கேள்விகளை கேட்கவைக்கின்றன. உலகம்பூராவும் அமெரிக்க ஹொலிவூட், பிரிட்டன், பிரான்ஸ், திரைப்படங்கள் குறிப்பாக துப்பறியும் பின்னணியைக்கொண்ட ஜேம்ஸ் பான்ட் பாணி திரைப்படங்கள் சினிமா ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றவை. இந்த திரைப்படங்கள் வெறும் பொழுதுபோக்கு ரசனை மட்டும் கொண்டவை அல்ல. அமெரிக்க மேற்கத்தேய நாடுகளின் உளவாளிகளின் அளவற்ற தீரத்தையும், அவர்களிடம் கைவசமிருந்து மேம்பட்ட விஞ்ஞான தொழில்நுட்ப ஆற்றலையும் அளவுக்கதிகமாக பறை சாற்றியது. அமெரிக்கா, சோவியத் போட்டியில் அமெரிக்க CIA உளவாளிகள் சோவியத் KGB உளவாளிகளை எவ்வாறு தோற்கடிக்கிறார்கள் என்பது ஹொலிவூட் படங்களின் பிரசாரமாகும். நாடுகளுக்கு இடையில் பொருளாதார ஆதிக்கம், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக் களில் ஏற்படும் நன்மைகளைப் பயன்படுத்தல், எண்ணெய் வளம் கனிய வளம் எவ்வாறு தம்மால் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடிகிறதென்பது இப்படங்களில் காண்பிக்கப்படும் புழுகுமூட்டைகள் ஆகும். உண்மையில் அமெரிக்க மேற்கு நாடுகளின் பாதுகாப்பு அரண்களிலும், அவர்களின் உளவுச் சேவைகளிலும் துலாம்பரமாக காணப்படும் பலவீனங்கள் அல்கைதாவிற்கும் ISIS-க்கும் சாதகமாக அமைந்துள்ளன. செப்ரெட்பர் 11 தாக்குதல் அமெரிக்க புலனாய்வுத்துறையின் கையாலாகாத் தனத்தைக் காட்டியுள்ளது. ஐப்பசி 13 தாக்குதல் பிரான்சிய புலனாய்வு துறையின் கையாலாகாத்தனத்தைக் கோட்டிட்டுக் காட்டியுள்ளது.

ISIS சிரியாவிலும் ஈராக்கிலும் அமெரிக்க நேட்டோப் படைகளின் மூர்க்கத்தனமான தாக்குதல்களை முகம் கொடுக்க வேண்டியுள்ளது. சிரியாவில் அமெரிக்க நேட்டோப் படைகளுடன் பிரான்சிய படையணியும் IS-க்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளது. அதற்குப் பழிவாங்கும் முகமாகவே ISIS பிரான்சில் அழிவினை மேற்கொண்டுள்ளது.

பாரிஸ் குண்டுவெடிப்புக்கும் கார்த்திகை 2008இல் இந்தியாவில் நிகழ்ந்த பம்பாய் குண்டுவெடிப்புக்கும் நிறைய ஒற்றுமைகள் காணப்படுகின்றன. பம்பாய் குண்டு வெடிப்புக்கு பாகிஸ்தானை தளமாகக் கொண்டியங்கும் Lashkar e Taiba (LET) காரணமாகும். பம்பாய் குண்டு வெடிப்பில் 160-க்கு மேற்பட்டோர் இறந்துள்ளனர். இதற்குப் பொறுப்பானவர்கள் இந்திய நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளனர். ஆனால் பாரிசில் இடம்பெற்ற தாக்குதல்கள். குறிப்பாக ஒரே தினத்தில் ஆறு இடங்களில் நிகழ்ந்த வன்முறைகள் பிரான்ஸ் அரசுக்கு பெரும்சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.


மேற்கு நாடுகள் பயங்கரவாதத்துக்கு எதிரான அணுகுமுறையில் இரட்டை வேடம் பூணமுடியாது. இன்னொரு நாட்டின் பயங்கரவாதி எனக்குப் பயங்கரவாதி அல்ல என்கின்ற அணுகுமுறை வன்மையான பயங்கர வாதத்தை கிள்ளி எறிய துணை போகாது. ஒரு காலத்தில் அல்கைதா, தலிபான் ISIS போன்ற பயங்கரவாத இயக்கங்கள் வளர்வதற்கு திரைமறைவில் காரியமாற்றிய அமெரிக்க மேற்குலக சக்திகள் தாம் உருவாக்கியவற்றை தாமே அழிப்பது என்பது சாத்தியமாகுமா என்பது சிந்திக்க வேண்டிய விடயம் ஆகும்.

பிரான்சிய அதிபர் பகிரங்க சூளுரை விடுத்துள்ளார். ISIS ஐ அழித்தே தீருவோம் என கங்கணம் கட்டியுள்ளார். சென்ற வாரம் சிரிய பிரதேசத்துள் இனம் காணப்பட்ட ISIS நிலைகள்மீது விமான றொக்கட் தாக்குதல்களை நிகழ்த்தியுள்ளது. பிரான்சில் சந்தேகத்துக்கிடமானவர்களை விசாரணைக்குட்படுத்தியுள்ளார்கள். பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். பெல்ஜியம் போன்ற பிராந்திய நாடுகளுக்குள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த இருதினங்களுக்குள் மாலேயின் தலைநகரில் 70-க்கு மேற்பட்டோர் பயங்கரவாதிகளால் பணயக்கைதிகளாக சிறைப்பிடிக்கப் பட்டனர் என்பதும் அந்நாட்டுப் படையினரின் துணிகரமிக்க நடவடிக்கைகளால் விடுவிக்கப்பட்டனர் என்பதும் பயங்கரவாதிகள் எவ்வளவு பலமாக உள்ளனர் என்பதை காட்டுகிறது. எவ்வாறாயினும் பயங்கரவாதம் ஒரு இடத்திற்கு மட்டும் வரையறுக்கப் பட்டதில்லை. இன்றைய தகவல் தொழில்நுட்பம், சமூகம் வலைத்தளங்கள் ஆகியவற்றின் அபிவிருத்தி பயங்கரவாதிகட்கு பெரும் உந்துதலை அளித்துள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. ஐ.நா அமைப்பில் அங்கத்துவ நாடுகளிலும் பயங்கரவாதத்துக்கு எதிரான முன்மொழிவுகளும் எதிர் நடவடிக்கைகளும் தெளிவாக இடம்பெறவேண்டும் என்பதே இன்றைய தேவையாகும்.

—— தேவ தர்மா ——

# இலங்கையில் கட்டாயக் கல்வி



பா.பாலகணேசன்,
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி

**1943 கல்வி விசேட ஆணைக்குழுவின் சிபார்சு 5-16 வயதுவரை கட்டாயக் கல்வியை வழங்க வழி ஏற்படுத்தியது. C.W.W.கன்னங்கரா 1931 -1947 கல்வித்துறைக்குப் பொறுப்பாக (கல்வி மந்திரியாக) இருந்த காலப்பகுதியில் பல முற்போக்கான மாற்றங்களை ஏற்படுத்தினார். அவற்றுள் இலவசக்கல்வி, தாய்மொழிக்கல்வி, ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் இந்தவகையில் 1945ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக்கல்வி கட்டாயக் கல்வி தொடர்பான பல முன்னேற்றகரமான மாற்றங்களைக் கொண்டுவந்தன.**

கல்விமூலம் மனிதவள விருத்தி, அதன்மூலம் சமூக பொருளாதார, அரசியல் அபிவிருத்தியை வேண்டிநின்ற நாடுகள் தமது மக்களின் கல்விமீது அதிக அக்கறை செலுத்துகின்றன. கல்விமூலம் நீண்டகால உறுதியான அபிவிருத்தியை அடையமுடியும் என்றநிலையிலும், கல்வி அறிவு வீதத்தின் பெருக்கம் அபிவிருத்தியின் உயர் குறிகாட்டியாக அமைந்து காணப்படுகின்றது. இவை போன்ற காரணங்களால் தமது மக்கள் அனைவருக்கும் கல்வி அறிவை வழங்கவேண்டும் எனப் பல நாடுகள் உறுதியெடுத்தன.

அந்தவேளையில்தான் அனைவருக்கும் கல்வி எனும் சிந்தனை முகிழ்ப்பானது. உலகளாவியரீதியிலும் முக்கியத்துவம் பெற்றது. நிறுவனமயப்படுத்தப்பட்ட கல்விவழங்கும் நிறுவனமாக பாடசாலை அமைந்து காணப்பட்டன. அப்பாடசாலை அதுதோன்றிய சமூகத்தின் நாட்டின் தேவைகளை கருத்திற்கொண்டு கல்வியை வழங்கின. அதனால் அங்கு சென்று கல்வி கற்கவேண்டிய தேவை மக்களுக்கு ஏற்பட்டது. அந்த நிலையில் ஆறு வயது தொடக்கம் 16 வயது வயதான இடைநிலைக் கல்வியை அனைவருக்கும் வழங்கும் நிலையங்களாக பாடசாலைகள் அமைந்து காணப்பட்டன. இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் அரசியல், சமூக, பொருளாதார காரணங்களாலும், வறுமை, கல்வி விழிப்புணர்வு அற்ற நிலை, சமவாய்ப்பு அற்ற கல்வி முறைமை. யுத்தம், அதன்காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வு போன்ற காரணங்களால் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதில் தடைகள் காணப்பட்டன. இந்த நிலையில் பிள்ளைகளை பாடசாலைநோக்கிச் செல்ல வைக்கவேண்டிய தேவை உணரப்பட்டது. இதனால் "கட்டாயக்கல்வி" என்ற சட்டரீதியான கருத்தமைவு முதன்மை பெற்றது. 1948ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் 25ஆம் சரத்து, 26ஆம் சரத்து எல்லோருக்கும் கட்டாயக்கல்வி, இலவச ஆரம்பக்கல்வியை வலியுறுத்துவதுடன் பிற்பட்ட காலங்களில் இடைநிலைக்கல்வி தொடர்பாகவும் முன்னேற்றகரமான சிந்தனைகள் வெளியிடப்பட்டன. உலகளாவியரீதியில் ஆரம்பக்கல்வியை 2015ஆம் ஆண்டளவில் உன்னத நிலைக்குக் கொண்டுவரவேண்டும் எனும் கருத்தியல்களும் முனைப்புபெற்றது.

### இலங்கையில் கட்டாயக் கல்வி ஆரம்பம்

இலங்கை அரசு அனைவருக்கும் கல்வி எனும் எண்ணக்கரு தொடர்பாக ஆரம்பத்தில் இருந்தே தனது கவனத்தைச் செலுத்திவருகின்றது. அந்தவகையில் கட்டாயக்கல்வியை முதல் முதல் இடச்சுக்காரரே இலங்கையில் ஆரம்பித்தனர் எனவும் இவர்கள் தமது அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசங்களை பள்ளிக்கூட வட்டாரங்களாக பிரித்து ஆங்காங்கே பாடசாலைகள் அமைத்து ஒரு கட்டாய வரவுத்திட்டத்தின்படி சுதேச மொழிகளில் இலவசக்கல்வி வழங்கினர் எனக்கூறுவார் ஒரு சாரார். மறுபுறம் 1871ஆம் அண்டின் கிராமசபைச் சட்டம் ஆக்கப்பட்டதை அடுத்து அது பிரித்தானியர் ஆட்சியில் தான் கட்டாயக்கல்வி உண்மையில் ஆரம்பித்தது. இக்கிராம சபைச் சட்டச் சிறுவர், சிறுமியர் கல்வியின்பொருட்டு பல கிராமங்கள் ஒன்றுசேர்ந்து பாடசாலை அறைகள் கட்டி அவற்றைக் கொண்டு நடாத்துவதற்கும் வரவை வற்புறுத்தி சட்டங்கள் வகுப்பதற்கும் கிராம வாசிகளுக்கு அதிகாரம் வழங்கியது.

இத்தகைய சட்டங்களை அமுல்படுத்துவதில் கிராம சபைகள் பாராமுகமாக இருந்தன. அந்நிலையில் கோப்பிப் பயிர்ச் செய்கையில் ஏற்பட்ட வீழ்ச்சி பொருளாதார நெருக்கடியைக் கொண்டுவர, கட்டாயக் கல்வி தொடர்பான சட்டங்களை நடைமுறைப்படுத்தலில் இடறல் ஏற்பட்டது. இந்த நிலையில் 1901 ஆண்டின் குடிசன மதிப்பறிக்கையில் திரு.பி.அருணாசலம் "பாடசாலை செல்லும் வயதினருள் ஏறக்குறைய முக்காற் பங்கினர் அதாவது ஏறக்குறைய 650,000 பேர் பாடசாலை வசதி இல்லாத காரணத்தினாலோ, பாடசாலை செல்லவேண்டும் எனும் கட்டாயம் இல்லாத காரணத்தினாலோ பாடசாலை செல்லாதிருந்தனர்" எனக் கூறினார். இதனால் இக்கல்விப் பிரச்சினையை ஆராய மூன்று சிவில் சேவை உத்தியோகத்தரைக் கொண்ட ஒரு குழுவை தேசாதிபதி வெஸ்ற்றிட்ஜ்லே நியமித்தார்.

இந்த நிலையில் 1905ஆம் அண்டு ஆரம்பக்கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளை ஏற்றுச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஒன்று நகரப் பாடசாலைக் கட்டளைகளைச் சட்டம் இது மாநகரங்களிலும், உள்ளூர்ச் சபைகளிலும் 1892ஆம் ஆண்டு சிறுநகரச் சுகாதாரக் கட்டளைச் சட்டத்திற்கு உட்பட்ட நகரங்களிலும் கட்டாய சுயமொழிக்கல்விக்கு ஏற்பாடு செய்தது. மற்றையது கிராமப்புறப் பாடசாலை கட்டளைச் சட்டம். இது 6 வயதிற்கும் 12 வயதிற்கும் இடைப்பட்ட பிள்ளைகளுக்கு கட்டாயக்கல்வி போதித்ததற்கு வழிசெய்தது. அத்துடன் அரசாங்க அதிபர், பொதுக்கல்விப் பணிப்பாளர், மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைகாரருள் இருவர், மாவட்டக் கல்வித்துறையில் ஈடுபாடுகொண்ட ஒருவர் ஆகியோரைக் கொண்ட கட்டாயக்கல்விக் குழு அமைக்கப்பட்டது. அதன்படி 1920ஆம் ஆண்டின் முதலாம் இலக்கக் கல்விக் கட்டளைச்சட்டம் உருவாக்கப்பட்டது. இச்சட்டம் கட்டாயக்கல்விக்கான வயது 6 தொடக்கம் 14 வயது வரையாகியது. இதனை அடுத்து 1929ஆம் ஆண்டு கட்டாயக் சுயமொழிக் கல்வியைப் பேணும் நோக்கோடு அரசாங்கம் பாடசாலைகள் இல்லாத இடங்களில் பாடசாலை நிறுவ முடிவுசெய்தது. 1931ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கட்டாயக் கல்வி முன்மொழிவுகளும் விழிப்புணர்வுகளும் இன்னும் தொடர்ந்து வெளிவந்தவண்ணம் உள்ளன. 1939இல் இலக்கம் 31ஆம் இலக்க கல்விச்சட்டம் உள்ளூர் ஆலோசனைக் குழுக்கள் 6 தொடக்கம் 14 வயதுக் கிடைப்பவர்களின் கட்டாயக்கல்வி போதிக்கவேண்டிய பிரமாணங்களைச் செய்யும் அதிகாரம் கட்டாயக்கல்விக் குழுவிற்கு வழங்கப்பட்டது. 1943 கல்வி விசேட ஆணைக்குழுவின் சிபார்சு 5-16 வயதுவரை கட்டாயக் கல்வியை வழங்க வழி ஏற்படுத்தியது. C.W.W.கன்னங்கரா 1931 -1947 கல்வித்துறைக்குப் பொறுப்பாக (கல்வி மந்திரியாக) இருந்த காலப்பகுதியில் பல முற்போக்கான மாற்றங்களை ஏற்படுத்தினார். அவற்றுள் இலவசக்கல்வி, தாய்மொழிக்கல்வி, ஆசிரிய பயிற்சிக்கல்லூரிகள் இந்த வகையில் 1945ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி அறிமுகப்படுத்தப் பட்ட இலவசக்கல்வி கட்டாயக் கல்வி தொடர்பான பல முன்னேற்றகரமான மாற்றங்களைக் கொண்டுவந்தன.

1947ஆம் ஆண்டு 26ஆம் இலக்கச் சட்டம் கட்டாயக்கல்விக்கான வயது 5 தொடக்கம் 16 ஆக மாற்றியது. அத்துடன் பாடசாலையில் பிள்ளைகளில் வரவை உறுதிப்படுத்த உத்தியோகத்தர் நியமிக்கப்பட வழிகோலியது. 1950 வெள்ளை அறிக்கைகளை பாடசாலைக்குச் செல்ல இதனைத் தொடர்ந்து முன்வைக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை கட்டாய பாடசாலை வயது 5 - 11 வரை காணப்படுதல், 1972 இன் கல்விச் சீர்திருத்தம், 1981இன் வெள்ளை அறிக்கை, 1990 இளைஞர் சம்பந்தமான திகதி 1003/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப் பட்டது. இப்பொதுக்கல்வி சீர்திருத்தத்தில் 5 வயது முதல் 14 வயதிற்கிடைப்பட்ட பிள்ளைகளின் கட்டாயக்கல்வி தொடர்பான ஏற்பாடுகள் 37 ஆம் வாசகத்தில் பிள்ளைகள் கட்டாயமாக பாடசாலைக்குச் செல்லவேண்டும் என்ற கட்டாயக்கல்விக்கான கட்டளை வெளியிடப்பட்டது.

(தொடரும்)

# இலங்கையில் தமிழ் இலக்கியக்கல்வி எதிர்கொள்ளும் சவால்கள்

### நயத்தல் தொடர்பான ஆசிரியர் நிலை

"உண்மையில் நயத்தல் எனும் செயற்பாட்டை மாணவரிடத்து ஏற்படுத்த முனையும்போது, நாம் சொல்வது ஒரு குறிப்பிட்ட இலக்கியப் பாடத்தில் உள்ள ரசிக்கப்படவேண்டிய விடயங்களை அவர்களுக்கு முன்நிறுத்திக்காட்டுவதே ஆகும். (சிவத்தம்பி.கா 2010). இந்நிலையில் இலக்கியப் பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்கள் எத்தனைபேர் தாம் கற்பிக்கும் இலக்கியப் பாடத்தை மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமாக கற்பிக்கின்றனர்? என்ற வினாவிற்கான விடை மிகவும் அரிதாகவே இருக்கும். இலக்கிய ஆசிரியர் குறித்த பாடத்தில் அமைப்பொழுங்கையும் அந்த அமைப்பொழுங்கின் உயர்நிலையையும் எடுத்துக்காட்டல் வேண்டும். அதன்மூலம் மாணவர்களுக்கு இலக்கியப்பாடத்தில் இரசனை ஏற்படுத்தி அவனை இலக்கியத்தில் மூழ்கச் செய்யவேண்டும். இவற்றின்மூலம் உயர்மான இலக்கியப் பாத்திரத்தை போன்று, உதாரணபுருசர்களைப் போன்று அவன் சமூகத்தில் நடக்கமுன்வருவான். ஆனால் பல ஆசிரியர்கள் இத்தகைய முயற்சியில் தோற்றுப் போய்விடுகின்றனர். மாணவனை இலக்கியத்தில் இன்பம் துய்க்கவைக்க பின்வரும் விடயங்கள் முக்கியமானவை.

தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதி அதாவது உண்மையிலேயே நல்ல இலக்கிய இரசனையுடையதாக இருத்தல் வேண்டும். அப்படி இல்லாததை தேர்ந்தெடுக்கக் கூடாது. ஆசிரியன் அப்பகுதியை மிகமிக ஆழமாகப் படித்து அதில் உள்ள அம்சங்களை நன்கு தெரிந்திருக்க வேண்டும். வகுப்பில் சமாளிக்கலாம் என்ற உணர்வோடு போகக்கூடாது. அது மாணவன் அனுபவத்திற்கு உட்பட்டதாய் இருத்தல் வேண்டும். நயத்தலுக்கான பயிற்சியிலுள்ள முக்கியம் என்னவென்றால், இத்தகைய அம்சங்கள் இல்லை என்றால் அது நல்ல இலக்கிய பகுதி ஆகமாட்டாது என்பர் அறிஞர்கள்.

நயத்தல் விமர்சனத்திற்கு இட்டுச் செல்லவேண்டும். தீர்ப்பு எல்லா அம்சங்களையும் சீர்தூக்கிப் பார்த்து செய்யப்பட வேண்டும். இங்கு குணம் குற்றம் இரண்டையும் நாடுதல் வேண்டும். அவற்றுள் மிக்கதை மாத்திரம் எடுக்க வேண்டும். வாசித்தல் தமிழிலக்கியத்தில் ஒரு சிக்கலை எதிர்கொள்கின்றது. நவீனகாலத்திற்கு முற்பட்ட இலக்கியங்களைக் கொண்டு கூட்டி வாசிக்கவேண்டும். இதில் சொல்லொழுங்கு கவனத்தில் எடுக்கப்படவேண்டும். பின்பாடத்தின் ஒழுங்கு அமைப்பு புரியப்படல் வேண்டும். அத்துடன் அவற்றின் பலம், பலவீனம் நன்கு புரியப்பட்டிருந்தால் பாடத்தின் பொருள் எவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளது என்பது தெரியவரும். அப்பாடம் பற்றிய ஒரு மனப்படம் தோன்றும். மகிழ்வு அளிக்கின்றதா, அறிவுத்தெளிவினை ஏற்படுத்துகின்றதா? என்பதெல்லாம் கவனிக்கப்படவேண்டும்.

இத்தகைய விடயங்கள் ஒவ்வொன்றிலும் தமிழ்மொழியும் இலக்கியமும் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் கவனம் செலுத்துகின்றபோதுதான் தமிழ் இலக்கியம் கற்பித்தல் வினைத்திறனுடன் இடம்பெறமுடியும். அதன் ஊடாகத்தான் மாணவ சமுதாயம் சிறந்த பயனை அடையமுடியும். எவ்வளவுதான் முயன்று அரசு திட்டங்கள் வகுத்தாலும், சிறந்த ஆசிரிய பயிற்சி வழங்கினாலும், அர்ப்பணிப்புமிக்க ஆசிரிய மனப்பாங்கும், உற்சாகமான மாணவ சமுதாயமே இலக்கியக் கல்வி திறம்பட நடத்தலை உறுதிசெய்யும்.

(முற்றும்)



# பெற்றால் மட்டும் போதுமா?

இல்லற இன்பம் நல்கும் அருங் கனிகள் குழந்தைகளாகும். குழந்தைகளே பெற்றோர்களிடையே அன்பின் பிணைப்பை வலுப்படுத்தும் இன்பத் தளைகளாகும். குழந்தைகளை "உலகில் மலர்வதற்காக இறைவனின் இல்லத்திலிருந்து விழுந்த இனிமை நிரம்பிய புதிய மொட்டு" என்று ஓர் அறிஞன் வர்ணிக்கிறான். மற்றோர் அறிஞனோ, "வானிலிருந்து மாசற்ற நிலையில் விழும் உயிருள்ள ஆபரணம்" என்று கூறுகின்றான். ஆம், குழந்தைகள் என்போர் மனித இனத்தை வாழ்விப்பதற்காக மனிதஇனத்திற்கு இறைவன் நல்கும் அருட்கொடையே ஆவர். எனவேதான் ரோமானியச் சண்டமாருதன் சிஸரோவும் "இறைவன் மனிதனுக்கு வழங்கிய அருட் கொடைகளில் எந்த அருட்கொடை அவனுக்கு அவனின் குழந்தைகளைவிட மேலானவையாக இருக்கின்றன?" என்று வினவுகிறான்.

"ஒரு வீட்டில் ஒரு குழந்தை இருக்கிற தென்றால் அது இன்பத்தின், மகிழ்ச்சியின் ஊற்றாகும். அன்பு, அமைதி ஆகியவற்றின் தூதுவனாகும். உலகில் எளிய பண்புகளின் இருப்பிடமாகும். வானவர்களுக்கும், மனிதர்களுக்கும் இடையேயுள்ள தொடர்பாகும்" என்பது ஒரு மேதையின் வாக்கு. எனவேதான் அறிவிற்சிறந்த பெண்மணி ஒருவரும் "துன்புறும் உலகை மகிழ்ச்சியுறச் செய்வதற்கான இன்பங்களில் எந்த இன்பம் புதிதாகப் பிறக்கும் குழந்தையைவிட மேலானதாக உள்ளது?" என்று வினா எழுப்புகின்றார்.

"நம்முடைய மக்களின் உடலைத் தொடுவது நம் உடலுக்கு இன்பம் பயக்க வல்லது. அவர்களின் மழலை மொழிகளைக் கேட்பது நம் செவிக்கு இன்பம் தரவல்லது" என்று வள்ளுவப்பெருந்தகை ஒரு குறளில் கூறுகின்றார். அவர் மற்றொரு குறளில் "குழல் இனிமையுடைத்து என்றும் யாழ் இனிமையுடைத்து என்றும் தம்மக்களின் மழலை மொழிகளைக் கேளாதவர்களே கூறுவார்களேயன்றிக் கேட்டவர்கள் ஒருபோதும் கூறமாட்டார்கள்" என்றும் கூறுகின்றார்.

குழந்தைகள் இல்லா இல்லம் கதிரவனில்லா உலகம் போன்றுதான். எனவேதான் ஆன்றோர்கள் அனைவரும் குழந்தைகளை "குழந்தைச்செல்வம்" என்றே போற்றிப் புகழ்கின்றார்கள். ஒருவனுக்கு எத்தனை செல்வம் இருந்தபோதிலும் குழந்தை இல்லை என்றால் அத்தனையும் பொலிவிழக்கும். எனவேதான் அறிவுடைநம்பி என்ற பாண்டியனும் புறநானூற்றில் பின்வருமாறு பாடுகிறான்.

படைப்புப் பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப் பெருஞ்செல்வ ராயினும்
மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கல்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லை தாம் வாழும் நாளே.

எனவேதான் வள்ளுவப் பெருந்தகையும் பெறத்தகுந்த பேறுகளிலெல்லாம் அறிய வேண்டியவற்றை அறியும் நன்மக்களைப் பெறுவதைவிட மேலான பேற்றினை நாம் அறிந்தோமில்லை என்ற கருத்தையுள்ளடக்கி

"பெறுமற்றுள் யாமறிவது இல்லை;
அறிவறிந்த
மக்கட்பேறு அல்லபிற" என்று கூறினார்.

குழந்தைச் செல்வத்தைப் போற்றாத இக்காலக் கவிஞர் ஒருவரே இல்லை என்று கூறலாம். "பிள்ளைக்கனி அமுதே பேசும் பொற்சித்திரமே" என்று ஓரிடத்தில் பாரதியார் மகிழ்ச்சிப் பண்ணிசைக்கிறார். மற்றோரிடத்தில் "உன் கண்ணில் நீர் வடிந்தால் என் நெஞ்சில் உதிரும் கொட்டுதடி" என்று உள்ளத்தை உருக்கும் வண்ணம் பாடுகிறார்.

பாரதிதாசனோ,
"மின்னல் ஒளியே! விலைமதியா
இரத்தினமே!
கன்னல் பிழிந்து கலந்த கனிச்சாறே"
என்று பரவசமாகப் பாடுகிறார்.

கவிமணியோ,
"நெஞ்சிற் கவலையெல்லாம் நீங்கத் திருமுகத்தில்
புஞ்சிரிப்பைக் காட்டி எம்மைப் போற்றும் இளமதியோ!" என்று கவிமழை பொழிகின்றார்.

கவிஞர் ச.து.சு.யோகியோ,
"பூப்போலக் கன்னம்
புது மின்போல் வளையம் உடல்
பார்ப்போர் செவிக்குத் தேன்
பாய்ச்சும் குதலை மொழி
மாம்பழத்தின் மேனி
மது உறிஞ்சும் வட்டமுகம்
பூம் பருத்தி ஆடை
புனையாத தோகைமயில்
சோதி உயிர் பாய்ந்து
துள்ளும் சிறிய உடல்
மோதும் இன்ப மாய்வளர்ந்த
மோகச் சிறு குழந்தை"
என்று இன்ப கானம் இசைக்கின்றார்

குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பாவோ,
"கற்கண்டு சீனி
கனிவகைகள் எல்லாம் உன்
சொற்களால் நானடையும்
சுகத்தினுக்கு ஈடாமோ"
என்று இசை முழங்குகின்றார்.

இவ்வாறு உலகை இன்பமயமாக்க, உலகமக்களின் இதயங்களை விரிவாக்க அவர்களை சுயநலமற்றவர்களாகவும், அன்பு, இரக்கம் நிரம்பியவர்களாகவும் செய்ய, அவர்களை உரிய குறிக்கோள்களை மேற்கொண்டு உழைக்குமாறு செய்ய இறைவனால் அனுப்பிவைக்கப்படும் இக்குழந்தைகள் இளமையிலிருந்தே நற்பண்புடனும் நல்லொழுக்கத்துடனும் வளருமாறு பார்த்துக் கொள்ளவேண்டியது பெற்றோர்களின் கடமையாகும்.

குழந்தைகள் பற்றி நெப்போலியன் குறிப்பிடும்பொழுது, "குழந்தைகளின் விதியை தீர்மானிப்பவன் அவர்களின் அன்னையே ஆகும்" என்று கூறுகிறான். அவனுடைய இறவாவரம்பெற்ற இப்பொன்மொழிகள் ஒவ்வொரு தாயாலும் ஆழ்ந்து சிந்திக்கப்படத்தக்கவையாகும்.

குழந்தை கருவிலிருக்கும்பொழுது மட்டும் தனக்குப் பிறக்கப்போகும் குழவி நானிலம் போற்றும் நன்மகவாக விளங்கவேண்டும் என்று எண்ணுவதோடு தாயின் வேலைமுடிந்துவிடவில்லை. பின்னர் அவனுக்கு நல்ல அறிவுரைகள்கூறி அவனை நன்மகனாக வளர்ப்பதும் தாயுடைய வேலையாகும். அதில் தந்தையும் பெரும் பங்குபெறுகிறான். எனவே நுண்மையான கலையாகிய குழந்தை வளர்ப்பு என்பதனைப் பெற்றோர்கள் நன்கு உணர்ந்து செயலாற்றவேண்டியது அவர்களின் தலையாயகடமையாகும்.

குழந்தையின் ஐந்து வயதுக்குள் அதன் சூழ்நிலை, வளர்ப்பு முறை, அனுபவம் ஆகியவை அதனுடைய வருங்கால வாழ்க்கை முறையையே நிர்ணயித்துவிடுகின்றன என உளநூல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். அதன் மென்மையான உள்ளத்தில் சிறுசிறு நிகழ்ச்சிகள், உணர்ச்சிகள் ஆகியவை எல்லாம் ஆழமாகப் பதிந்து நீங்காத முத்திரையை உண்டு பண்ணிவிடுகின்றன. அதற்கேற்றவண்ணம் குழந்தையின் இயல்புகளும் உருவாகத் தொடங்கி விடுகின்றன. பெற்றோர்களோ தங்களின் குழந்தைகளுடன் அன்புடன் மென்மையாக நடந்துகொள்ளவேண்டுமென்று கருதி அவர்களுக்கு அளவுக்கதிகமான செல்லம் காட்டி அவர்களைக் கெடுத்துவிடுகிறார்கள். அவர்கள் கேட்ட பொருட்களையெல்லாம் வாங்கிக்கொடுத்து அவர்களை வீணாக்கி விடுகிறார்கள்.

மற்றும் சில பெற்றோர்களோ, தங்களுடைய குழந்தைகளைக் கண்டிப்புடன் வளர்க்க வேண்டுமென்று எண்ணி அவர்கள்மீது அடிக்கடிச் சீறிச்சீறிச் சினக்கவும் அவர்களைக் குறைகூறிக் கண்டிக்கவும் அவர்களின்மீது தங்களின் கருத்துக்களைத் திணிக்கவும் செய்கின்றனர். இதனால் தீய பலன்களேயன்றி நல்ல பயன்கள் ஏற்படுவதே இல்லை. அதனால் அவர்களின் வளர்ச்சி தடைப்படுவதோடு தங்களுடைய சுதந்திரங்கள் முடக்கப்படுகின்றன என்று குழந்தைகள் உணர்கின்றன. அதன்காரணமாக அவர்கள் பெரியவர்களானதும் தங்களின் பெற்றோர்களுக்கு எதிராகப் புரட்சிக்கொடியைத் தூக்கத் தொடங்கிவிடுகின்றனர்.

சில பெற்றோர்கள் தாங்கள் மகிழ்ச்சியுடன் இருக்கும்பொழுது தங்களின் குழந்தைகள் தவறு செய்துவிட்டபோதிலும் அதனை அனுமதித்துவிடுவர். ஆனால் தாங்கள் சினத்துடன் இருக்கும்பொழுது தங்களின் குழந்தைகள் அதே தவறு செய்தபோதிலும் அவர்களை அடிக்கின்றனர். இவ்வாறு தங்களின் மனநிலைக்குத் தக்கவண்ணம் குழந்தைகளைக் கண்டித்து குழந்தைகளைக் கலக்கமடையச் செய்துவிடுகின்றனர். அதனால் அதனைச்செய்வது சரியா, தவறா என்பதை உணராது குழந்தை தடுமாறுகிறது.

பெற்றோர்களும் மற்றவர்களும் எவ்வாறு நடந்துகொள்கிறார்களோ அவ்விதமே குழந்தைகளும் நடக்கத் தொடங்குகின்றன. ஆதலின் பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளின் முன்னிலையில் வைத்துப் பிறரை ஏசவோ, திட்டவோ செய்யின் அதேபோன்று குழந்தைகளும் நடக்கவும் அதே மொழிகளால் பிறரை ஏசவும் திட்டவும் செய்கின்றன. அண்மையில் ஆரம்பப் பாடசாலையொன்றில் தரம் இரண்டு மாணவன், தனது வகுப்பிலிருந்த மாணவியை தகாதவார்த்தைகளினால் திட்டியிருக்கிறான். இதனைப் பார்த்த ஆசிரியை அச்சிறுவனை அதிபரிடம் அழைத்துச்சென்று விபரம் சொல்லியிருக்கிறார். அதிபர் அச்சிறுவனை அன்பாக அணுகி அந்த வார்த்தைகளை யார் உனக்குச் சொல்லித்தந்தது என்று கேட்டிருக்கிறார். அவன், "அப்பாவும், அம்மாவும் சண்டைபிடிக்கும்போது அப்பா இப்படித்தான் அம்மாவைத் திட்டுவார்" எனக் கூறியிருக்கிறான். இந்தச் சம்பவத்தைப் பெற்றோர்கள் நினைத்துப் பார்க்கவேண்டும்.

முடிந்த மட்டும் குழந்தைகளை நல்ல குழந்தைகளுடனும் நல்ல மனிதர்களுடனும் பழக அனுமதிப்பதே நல்லதாகும். ஆனால் அதற்காக அவர்களை மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து பழகுவதைத்தடுத்து நாங்கள் பெருமக்கள், மற்றவர்களையெல்லாம் இழிமக்கள் என்ற தவறான மனநிலை அவர்களுக்கு உண்டு பண்ணிவிடக்கூடாது.


காந்தியடிகள் தென்னாபிரிக்காவில்

**- காத்தார் -**

இருக்கும்பொழுது தம்மக்களைச் செல்வர் வீட்டுப்பையன்கள் படிக்கும் பாடசாலைக்கு அனுப்பவில்லை. எல்லாப் பிள்ளைகளும் படிக்கக்கூடிய பொதுவான பாடசாலைக்கே அனுப்பினார். இதுபற்றி அவருக்கும் கஸ்தூரி பாய்க்கும் சிறு சச்சரவுகூட ஏற்பட்டது. ஆனால் காந்தியடிகள் இதில் கண்டிப்பாக இருந்துவிட்டார். தம் மக்கள் தாங்கள் மற்றவர்களைவிட மேலானவர்கள் என்ற தவறான மனநிலையைப் பெற்றுவிடக்கூடாது எனவே ஏழை மக்களோடுதான் கூடிப் பழக வேண்டுமென்று காந்தியடிகள் வாதாடினார். அவ்விதமானால் அவர்களின் தீய இயல்புகளை நம்முடைய குழந்தைகளும் பெற்றுவிட ஏதுவாகுமே என்று கஸ்தூரி கூறிய பொழுது "நம்முடைய குழந்தைகளின் நல்லியல்புகளை அவர்களும் பெற்று அவர்களும் நல்வழி நடக்க ஏதுவாகும் என்று நாம் ஏன் எதிர்பார்க்கக் கூடாது?" என்று எதிர்த்து வாதாடினார் காந்தி. பெரிய இலட்சியவாதியாகிய காந்தி, அவ்வாறு எண்ணியபோதிலும் பொதுவாக எல்லாக் குழந்தைகளும் நல்லியல்புகளுடன் நடந்து பிறரையும் நல்வழிப்படுத்த முயலும் என்று நாம் எதிர்பார்க்க இயலாது. ஆதலின் அவர்களை நல்ல சூழ்நிலையில் நல்லவர்களுடன் வளரச்செய்வதே நற்பயனை நல்கும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் ஒரு தாய்வயிற்றில் சற்று முன்பின்னாகப் பிறந்த இரட்டைக் குழந்தைகளாக இருந்தபோதிலும் அவர்களும் சூழ்நிலை, சுற்றுச் சார்பு ஆகியவற்றின் காரணமாக வேறுபட்ட இயல்புகளுடன் விளங்குகின்றனர் என்று உளநூல் கூறுகிறது.


ஆதலின் இளமையிலிருந்தே குழந்தைகளுக்கு நல்ல பழக்கவழக்கங்களைப் பயிற்றுவிக்கவேண்டியது பெற்றோர்களின் கடமை. "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பது நமது முதுமொழி.

(தொடரும்)



வாரமொரு வாழ்வியற் சிந்தனை

# தத்துவ வரிகள்



- உழைப்பு வறுமையை மட்டும் விரட்டவில்லை தீமையையும் விரட்டுகிறது.
- அசை போட்டு தின்னுவது மாடு அசையாமல் தின்னுவது வீடு.
- பறக்க விரும்புபவனால் படரமுடியாது.
- பசுவின் மடியில் நுளம்பு கடித்தாலும் அது குடிப்பது பாலையல்ல. அதன் இரத்தத்தை.
- குத்துவிளக்கு எவ்வளவு பிரகாசமாக எரிந்தாலும் அதன் அடியில் சற்று இருள் இருக்கத்தான் செய்யும்.
- ஒரு தகப்பனார் பத்துக் குழந்தைகளைக் காப்பாற்றலாம். ஆனால் பத்துக் குழந்தைகள் ஒரு தகப்பனாரைக் காப்பாற்றும் என்று உறுதியாகச் சொல்லமுடியாது.
  - ப்ரெப்ரிக் நீட்சே
- சுயநலம் என்பது சிறு உலகம். அதில் ஒரே ஒரு மனிதன்தான் வாழ்கிறான்.
- வெற்றியின் இரகசியம் - எடுத்த காரியத்தில் நிலையாக இருத்தல்.
- அதிர்ஸ்டத்திற்காகக் காத்திருப்பதும் சாவுக்காகக் காத்திருப்பதும் ஒன்றே!
- நாக்கு கொடிய மிருகம். அதை எப்போதும் கட்டியேவை!
- கப்பற்காரன் பெண்டாட்டி தொப்பைக்காரி. கப்பல் உடைந்தால் பிச்சைக்காரி.
- செக்களவு பொன்னிருந்தாலும் செதுக்கியுண்டால் எத்தனை நாளுக்குக் காணும்?

# பெண்







- கிராமத்து பெண் சிணுங்கினாலும் அன்புதான். நகரத்துப் பெண் அருண்டாலும் வம்புதான்.
- பணத்திற்காக ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள வேண்டாம். பணம் குறைந்த வட்டிக்கு வெளியே கிடைக்கும்.
- சேற்றில் நின்று நாற்று நடும் கிராமத்து பெண்களின் பாட்டில் சேறில்லை.
- அழகான பெண் கண்களுக்கு ஆனந்தமளிக்கிறாள். குணமான பெண் இதயத்திற்கு குதூகலமளிக்கிறாள். முதலாமவள் ஒரு ஆபரணம். இரண்டாமவள் ஒரு புதையல்.
- ஒரு தாய் தன் மகனை மனிதனாக்க இருபது வருடங்களாகிறது. அவனை மற்றொரு பெண் இருபதே நிமிடங்களில் முட்டாளாக்கிவிடுகிறாள்.
- பெண் இல்லாத வீடும் வீடு இல்லாத பெண்ணும் மதிப்பு இல்லாதவை!
- பெண்களில் இரண்டே பிரிவினர் தாம் இருக்கிறார்கள். ஒன்று அழகானவர்கள். மற்றொன்று அழகானவர்கள் என்று நம்பிக் கொண்டிருப்பவர்கள் - பெர்னாட்ஷா
- ஒரு பெண்ணை மனைவியாக ஏற்கும்போது மூன்று தடவை பிரார்த்தனை செய்யுங்கள். - வின்ஸ்டர் லூயிஸ்.

# பணம்



- பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது. பணம் இல்லாவிட்டால் யாருக்கும் உன்னைத் தெரியாது.
- செல்வம் என்பது பணம் மட்டும்தான் என்பது இல்லை, எப்படிப்பட்ட முட்டாளும் பணத்தை சம்பாதித்துவிடலாம். ஆனால், ஒரு புத்திசாலியால்தான் அதனைக் காப்பாற்றமுடியும்.
- செல்வந்தனாக வேண்டுமென நினைத்தால் அதன் தாயாகிய ஆடம்பர குணத்தை முதலில் ஒழித்துவிடு.
- பணத்தைக் கொண்டு நாய் வாங்கிவிடலாம். ஆனால் அன்பைக் கொண்டுதான் அதன் வாலை அசைக்கமுடியும்.
- சேரக்கூடாதவனிடம் சேர்ந்தால் பணமும், பதவியும் மோசமான வியாதிதான்.
- பணம் அறிவாளிகளுக்குத் தொண்டு செய்யும். முட்டாள்களை ஆட்சிசெய்யும்.
- பணம் பேசத்தொடங்கினால் உலகம் வாயை மூடிக்கொள்ளும்.
- ஊதாரி வருங்காலப் பிச்சைக்காரன். கஞ்சன் என்றுமே பிச்சைக்காரன்.
- பணம் நேற்று உன்னிடம், இன்று என்னிடம், நாளை யாரிடம்...?

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 652

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | | 18 |
| 19 | | 21 | | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 650 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஆ | 2 சி | 3 ரி | 4 ய | 5 பீ | 6 ட |
| 7 ச | 8 னா | 9 கா | | 11 தா | 12 நி |
| 13 ரோ | 14 ய் | 15 கெ | | 17 ம், | 18 ப |
| 19 க் | | 21 ய | 22 ம் | 23 ப | 24 உ |
| 25 மா | 26 சி | 27 ட் | | 29 ர | 30 ம் |
| 31 க | 32 க | 33 டி | 34 த் | 35 ம் | 36 த |

### மேலிருந்து கீழ்

01. இவர். காவிரிப்பூம் பட்டணத்தில் மாதவியின் தாய்.
02. தூதாள். ஒற்றன். (குழம்பியுள்ளது)
03. இந்தியப் பெருங்கடலில் ஆபிரிக்காவை அண்டியுள்ள ஓர் அதிசயத் தீவு.
4. இராசாத்தி.
5. தலையில் பற்றும் பூச்சி.
12. வழி தப்புதல்.
23. தீவினைப் பயன். (குழம்பியுள்ளது)
26. பூமி. மனைவி. பருத்தது.

### இடமிருந்து வலம்

01. ஜப்பான் நாட்டுப் பிரதமர்.
7. ஒரு கோத்திரத்தில் பிறந்தவன். (குழம்பியுள்ளது)
13. உருண்டை. கூட்டம்.
21. இராத்திரி.
23. பகிர். கூறுபடுத்து.
25. விள்குத்தண்டு. (குழம்பியுள்ளது)
31. வேறுபாடு.
35. சத்துள்ள ஒரு திராவக உணவு.

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 07.02.2015 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 652
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.650 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எம்.பெனடிக்,
பேசாலை, மன்னார்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. சு.நிவேதிதன், தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்.
02. எம்.பூமிகா, பிரதான வீதி, காலி.
03. அ.நந்திதா, கோவில் வீதி, வவுனியா.
04. தி.திருநாவுக்கரசு, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்
05. வ.வளர்மதி, சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.
06. டொ.ஜேம்ஸ் வசந்தன், பசல்ஸ் லேன், வெள்ளவத்தை.
07. இ.நாமகள், பரந்தன், கிளிநொச்சி.
08. எம்.எம்.இஸார், நிந்தவூர், மட்டக்களப்பு.
09. கே.இசந்தி, தும்பளை, பருத்தித்துறை.
10. எப்.பிரோஸ்கான், கடற்கரை வீதி, புத்தளம்.




# விஜயகாந்த் மகனுடன் நடிக்கும் புதிய படம்

நடிகரும், தே.மு.தி.க தலைவருமான விஜயகாந்த், நீண்ட இடைவெளிக்கு பிறகு தனது மகன் சண்முகபாண்டியன் நடிப்பில் வெளிவந்த சகாப்தம் படத்தில் ஒரு முக்கிய வேடத்தில் நடித்திருந்தார்.

இந்த படத்திற்கு பிறகு தனது மகன் சண்முக பாண்டியன் நடிக்கும் தமிழன் என்று சொல் என்ற புதிய படத்திலும் விஜயகாந்த் நடிக்கவுள்ளார். இந்த படத்தை அறிமுக இயக்குனர் அருண் பொன்னம்பலம் இயக்கவிருக்கிறார். ஹிப் ஹாப் தமிழா ஆதி இசையமைக்கவுள்ளார்.

இப்படத்தின் பூஜை சென்னையில் நடைபெற்றது. இதில், நடிகர் விஜயகாந்த், சண்முகபாண்டியன், இசையமைப்பாளர் ஹிப் ஹாப் தமிழா ஆதி, தே.மு.தி.க இளைஞரணி செயலாளர் எல்.கே.சுதீஸ், விஜயகாந்தின் மனைவி பிரேமலதா மற்றும் படக்குழுவினர் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த விழாவில், விஜயகாந்த் படத்தின் இயக்குனரை அனைவருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார். மேலும், படத்தில் பணிபுரியும் அத்தனை கலைஞர்களையும் அறிமுகம் செய்து வைத்தார்.

இதில், சண்முகபாண்டியன் பேசும்போது, என்னுடைய அடுத்த படத்துக்காக 50-60 கதைகளை கேட்டேன். இறுதியில் "தமிழன் என்று சொல்" படத்தின் கதை பிடித்துப்போனதும் இதில் நடிக்க ஒப்புக்கொண்டேன் என்று தெரிவித்தார்.

இயக்குனர் பேசும்போது, முதலில் நான் விஜயகாந்தை சந்தித்து பேசுவதற்கு மிகவும் பயந்தேன். ஆனால், அவர் இப்படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டதும் மிகவும் சந்தோசமடைந்தேன் என்றார்.

விஜயகாந்த் பேசும்போது, இந்த படத்தின் கதையை முதலில் எனது மகன் பிரபாகரன்தான் கேட்டார். அவர் என்னிடம் வந்து இந்த கதையில் நீங்கள் நடித்தால் நன்றாக இருக்கும் என்று கூறினார். பிறகு, கதையை கேட்டேன், நன்றாக இருந்தது.

இருப்பினும், அரசியலுக்கு நுழைந்தபிறகு மீண்டும் சினிமாவில் நடித்தால் நன்றாக இருக்குமா? எனத் தயக்கமாக இருந்தது. எனது மகன்கள், மனைவி ஆகியோர் தொடர்ந்து என்னை நடிக்க வலியுறுத்தவே, இதில் நடிக்க ஒப்புக்கொண்டேன் என்று கூறினார்.

விழாவில் பங்கேற்ற படக்குழுவினர் அனைவருக்கும் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. பூஜைக்கு பிறகு படத்திற்காக ஒரு காட்சியும் படமாக்கப்பட்டது.

# சேலையில் எளிமையாக இருப்பது எனக்கு பிடிக்கும்: ஐஸ்வர்யாராய்

ஐஸ்வர்யாராய் உலக அழகி பட்டம் வென்று 21 வருடங்கள் ஆகிறது. 2007இல் அபிசேக்பச்சனை மணந்தார். இவர்களுக்கு 4 வயதில் ஆரத்யா என்ற மகள் இருக்கிறாள். குழந்தை பிறந்தபின் சில வருடங்கள் சினிமாவைவிட்டு ஒதுங்கி இருந்த அவர் மீண்டும் நடிக்கவந்துள்ளார். இரண்டு இந்திப்படங்களில் தற்போது நடித்துக்கொண்டு இருக்கிறார். தனக்கு பிடித்த விசயங்கள் குறித்து ஐஸ்வர்யாராய் மனம் திறந்து பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:- "எனக்கு விதவிதமான கைக்கடிகாரங்கள் ரொம்ப பிடிக்கும். வெளிநாடுகளுக்கு போகும்போதெல்லாம் அவற்றை வாங்கிவருவேன். வீட்டில் நிறைய கைக்கடிகாரங்களை குவித்து வைத்துள்ளேன். உடைகளுக்கு பொருத்தமான கைக்கடிகாரங்களை அணிந்து கொண்டு வெளியே செல்வேன். எனக்கு பிடித்த நிறம் கறுப்பு. அத்துடன் நீலம், வெள்ளை நிறங்களையும் விரும்புவேன். எந்த ஆடைகளை அணிந்தாலும், இந்த நிறங்கள் அவற்றில் இருப்பதுபோல் பார்த்துக்கொள்வேன்.

சேலைகள் அணிந்து எளிமையாக இருப்பது பிடிக்கும். நீண்ட கவுன், சுடிதாரையும் விரும்பி அணிவேன். எனக்கு பிடித்த நடிகர் அமிதாப்பச்சன். நடிகைகளில் நர்கீசை பிடிக்கும். தாய்லாந்து, சைனீஸ் உணவுகளை பார்த்தால் விடமாட்டேன் வெளுத்துக்கட்டுவேன். அப்படி அந்த உணவுகள்மீது எனக்கு இஸ்டம். எப்போதாவது சோர்வாக இருந்தால், மசாஜ்செய்து குளிப்பேன். அதன் பிறகு நல்ல தூக்கம்போட்டு எழுவேன். அப்போது முகத்தில் புதிய மினுமினுப்பு வரும். என்னை சுற்றி எல்லாம் சுத்தமாக இருக்கவேண்டும். பண்டிகை காலங்களில் படப்பிடிப்பு இருக்கக்கூடாது என்று எதிர்பார்ப்பேன். அந்த நாட்களில் குடும்பத்தோடு புதுபுது இனிப்புகள் செய்து சாப்பிடுவேன். எனக்கு பிடித்தது பிரான்ஸ். அங்கு அழகு நிலையங்களில் முகத்தை ஒயின் மூலம் அழகுபடுத்துவது பிரபலம். அந்த நாட்டுக்கு போகும்போதெல்லாம் நான் "ஒயின் பேசியல்" செய்துகொள்வேன்."

இவ்வாறு ஐஸ்வர்யாராய் கூறினார்.




# No.1 நடிகையுடன் ஜோடி சேரும் விக்ரம்

10 எண்றதுக்குள்ள படத்திற்கு பிறகு நடிகர் விக்ரம், ஆனந்த் சங்கர் இயக்கத்தில் நடிக்கவுள்ளார். இந்த படத்தை ஐயங்கரன் தயாரிப்பதாக இருந்தநிலையில், சமீபத்தில் தான் புலி படத்தின் தயாரிப்பாளர் ஷிபு தமீம்ஸ் அதை வாங்கிவிட்டதாகக் கூறினர்.

இன்னும் பெயரிடப்படாத இந்த படத்தில் விக்ரமுக்கு ஜோடியாக நடிக்க நயன்தாராவை இயக்குனர் இப்போது அணுகியுள்ளார். நயன்தாராவும் நடிக்க ஒப்புக்கொண்டதாக நம்ப தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழ் சினிமாவின் நம்பர் 1 ஹீரோயினான நயன்தாரா, முதன் முறையாக விக்ரமுக்கு ஜோடியாக நடிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.



# விஷாலின் அடுத்த அதிரடி

விஷால் தற்போது கதகளி படத்தில் நடித்துவருகிறார். இப்படத்தை பாண்டிராஜ் இயக்கிவருகிறார். இதில் விஷாலுக்கு ஜோடியாக கேத்ரின் தெரசா நடித்துவருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து வருகிறது. பொங்கலன்று இப்படம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், விஷாலின் அடுத்த படமான மருது படத்தின் படப்பிடிப்பு பூஜையுடன் தொடங்கியது. கொம்பன் இயக்குனர் முத்தையா இயக்கும் இந்த படத்தின் கதை கிராமத்து பின்னணியை கொண்ட அக்சன் படமாக உருவாக இருக்கிறது.

இப்படத்தில் வி....ாலுக்கு ஜோடியாக ஸ்ரீதிவ்யா நடிக்க இருக்கிறார். தாரை தப்பட்டை வில்லன் ஆர்.கே. சுரேஸ் உள்ளிட்ட பலர் இப்படத்தில் நடிக்கவுள்ளனர். மேலும் ராதாரவியும் இந்த படத்தில் ஒரு முக்கிய கேரக்டரில் நடிக்கவுள்ளார். டி.இமான் இப்படத்திற்கு இசையமைக்கவுள்ளார்.

# விஜய் படத்தின் பர்ஸ்ட் லுக் ரிலீஸ் திகதி அறிவிப்பு

விஜய் தற்போது அட்லி இயக்கத்தில் நடித்துவருகிறார். இதில் விஜய்க்கு ஜோடியாக சமந்தா மற்றும் எமி ஜாக்சன் நடித்துவருகிறார். ஜி.வி.பிரகாஸ் இசையமைக்கும் இப்படத்தை கலைப்புலி தாணு தயாரித்துவருகிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்துவருகிறது. இதில் விஜய் பொலிஸ் அதிகாரியாக நடித்துவருகிறார். இன்னும் பெயரிடப்படாத இப்படத்தை "விஜய் 59" என்று அழைத்துவருகிறார்கள்.

மேலும் பொலிஸ் கதை என்பதால் "காக்கி" என்று தலைப்பு வைக்க இருப்பதாக செய்திகள் வெளியானது. ஆனால் உறுதியாகாதநிலையில், இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் அதிகாரபூர்வமான தலைப்பை வெளியிடவுள்ளனர்.

இதை இப்படத்தின் இயக்குனர் அட்லி வருகிற 26ஆம் திகதி வெளியிட இருப்பதாக அறிவித்திருக்கிறார். இது விஜய் ரசிகர்களை உற்சாகப்படுத்தியுள்ளது.




# காதலுக்காக பச்சை குத்தமாட்டேன்

## ஓவியா

சிவா, அசோக் செல்வன், ஓவியா ஆகியோர் நடிக்க ஜி.மணிகண்டன் டைரக்'னில் சி.வி.குமார், அபினேஸ் இளங்கோவன் ஆகிய இருவரும் தயாரிக்கும் படம் "144". இந்த படத்தின் அறிமுக நிகழ்ச்சி சென்னை வடபழனியில் உள்ள ஆர்.கே.வி. ஸ்டுடியோவில் நடந்தது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நடிகை ஓவியா நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவருடைய வலது கை தோள்பட்டையில் பச்சை குத்தி இருப்பது பற்றி நிருபர்கள் கேட்டார்கள். அதற்கு பதிலளித்து ஓவியா கூறியதாவது:-

என் தோள்பட்டை அழகாக இருக்கவேண்டும் என்பதற்காக கடல்குதிரை ஓவியத்தை பச்சை குத்திக்கொண்டேன். இது எனக்கு அழகாக இருப்பதாக நிறையப் பேர் பாராட்டுகிறார்கள். என் வலது கையின் தோள்பட்டையில் மட்டுமே நான் பச்சை குத்திக்கொண்டேன். வேறு எங்கும் பச்சை குத்திக்கொள்ளவில்லை. காதலுக்காக பச்சை குத்திக்கொள்வதில் எனக்கு உடன்பாடில்லை. மற்றவர்களுக்காக உடம்பை புண்ணாக்கி கொள்ளத்தேவையில்லை என்று கருதுகிறேன்.

இவ்வாறு நடிகை ஓவியா கூறினார்.

அவரிடம் நிருபர்கள் கேட்ட கேள்விகளும், அவற்றிற்கு ஓவியா அளித்த பதில்களும் வருமாறு:-

கேள்வி:- காதலுக்காக பச்சை குத்திக்கொள்வதில் உடன்பாடு இல்லை என்று கூறுவது நயன்தாராவை தாக்குவதுபோல் இருக்கிறதே?

பதில்:- நான் நயன்தாராவை தாக்குவதற்காக இதை சொல்லவில்லை. எனக்கு உடன்பாடு இல்லை என்றுதான் கூறினேன்.

கேள்வி:- மலையாள பட உலகில் இருந்து தமிழுக்கு வந்த நடிகைகளில் உங்களுக்கு நெருங்கிய தோழி யார்?

பதில்:- எனக்கு நெருங்கிய தோழர்களும் இல்லை, தோழிகளும் இல்லை. மற்ற கதாநாயகியை சந்திக்கும்போது "ஹலோ" சொல்வதோடு சரி யாருடனும் நெருங்கிய நட்பு வைத்துக்கொள்வது இல்லை.

கேள்வி:- நீங்கள் ஒதுங்கிப் போகிற கூச்சசுபாவம் கொண்டவரா?

பதில்:- எனக்கு கூச்ச சுபாவம் இல்லை. அப்படி இருந்திருந்தால் சினிமாவுக்கு வந்திருக்க மாட்டேன். நான் எப்போதுமே சந்தோசமாக இருக்க வேண்டும் என்று நினைக்கிற சுபாவம். சிரித்துக் கொண்டே இருப்பேன். எப்போதும் சிரித்த முகமாக இருக்கிறேனே என்று என்னைப் பார்த்து நிறையபேர் ஆச்சரியப்படுகிறார்கள்.

கேள்வி:- உங்களுக்கு காதல் அனுபவம் இருக்கிறதா?

பதில்:- நிறையபேர் என்னிடம் காதலை சொல்லியிருக்கிறார்கள் ஆனால், நான் யாருடைய காதலையும் ஏற்றுக்கொள்ளவில்லை. எனக்கு யார்மீதும் காதல் வரவில்லை. எதிர்காலத்தில் காதல் திருமணம் செய்துகொள்வேனா என்று இப்போது சொல்லமுடியாது.

மேற்கண்டவாறு ஓவியா பதிலளித்தார்.

# கணேஷ் வெங்கட்ராம் – நிஷா திருமணம் நடந்தது

அபியும் நானும் படத்தின்மூலம் தமிழ்த் திரையுலகில் நடிகராக அறிமுகமானவர் கணேஸ் வெங்கட்ராம். இப்படத்தை தொடர்ந்து பல படங்களில் நடித்துவந்தார். சமீபத்தில் சூப்பர் ஹிட்டான தனி ஒருவன் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். இவரும் சின்னத்திரை நடிகை நிஷாவும் காதலித்து வந்தார்கள். இருவீட்டாரின் சம்மத்துடன் இவர்களின் திருமணம் நடைபெற்றது. இதில் நடிகர் அரவிந்த்சாமி, சின்னத்திரை நடிகர் படவா கோபி, தொகுப்பாளர் மகேஸ், நீலிமா, இயக்குனர் ராதா மோகன், நடிகர் பாஸ்கி, தயாரிப்பாளர் சதீஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதற்கு முன்னதாக் இவர்களின் திருமண நடைபெற்றுவிட்டது. இதில் நடிகர்கள் நாசர், ஜெயம் ரவி, ஸ்ரீகாந்த், விக்ரம் பிரபு, சாந்தனு, விஜய் ஆண்டனி இயக்குனர்கள் தரணி, மோகன் ராஜா உள்ளிட்ட திரையுலக பிரபலங்கள் கலந்து கொண்டனர்.







## மீண்டும் களமிறங்கும் பிரகாஷ்ராஜ்

தென்னிந்திய மொழி படங்களில் வில்லனாக மட்டுமின்றி பல குணச்சித்திர வேடங்களும் நடித்து ரசிகர்கள் மனதில் நீங்கா இடத்தை பிடித்திருப்பவர் பிரகாஸ் ராஜ். நடிப்பது மட்டுமின்றி படம் இயக்குவதிலும் அதிகம் ஆர்வம் காட்டிவரும் அவர் தோணி, "உன் சமயலறையில்" ஆகிய படங்களை இயக்கியுள்ளார். மீண்டும் ஒரு தெலுங்கு படத்தை இயக்கவுள்ளதாக இப்போது அறிவித்துள்ளார் அவர்.



08

# கிராமங்களை நோக்கி...

வயலும் வயல் சார்ந்த நிலமுமாய் காட்சிதரும் அந்த அழகிய கிராமம் கோப்பாய் பகுதியின் பொருளாதார வளத்தை தீர்மானிக்கும் ஒரு சிறிய கிராமமாய் இருந்தது. அந்தக் கிராமத்தில்தான் கோப்பாய் பகுதியின் பொருளாதார வளத்திற்காக அல்லும் பகலும் அயராது உழைத்துவரும் மனிதஉரிமைகள் யாவும் மறுக்கப்பட்ட அடிமை மக்கள் வாழ்ந்துவந்தனர். வெளியுலக நடப்புக்கள் பற்றிய எந்தவொரு அறிவும் கலையும் அற்றவர்களாய் அந்தப் பகுதியில் உள்ள வயல்களிலும் செம்மண் தோட்டங்களிலும் உழைப்பதை மட்டுமே தமது வாழ்வுக்காகக்கொண்டு வாழும் அந்த மக்கள் மத்தியிலே சண்முகம் எனும் நாமத்தைக்கொண்ட ஒரு சண்டியன் வாழ்ந்துவந்தார்.

இந்தச் சண்முகம் என்பவருக்கு மாணிக்கம், வயித்தி என இரண்டு தம்பிகளும் சின்னன் என்ற ஒரு சகோதரியும் இருந்தனர். மேற்கூறிய சண்முகம், வயித்தி, மாணிக்கம் என்ற மூன்று சகோதரர்களும் அந்த ஊருக்கை பெரும் சண்டியர்களாக இருந்தார்கள். இதில் சண்முகம் என்பவரே முதன்மை யானவர். இந்தச் சண்முகம் என்பவர் மிகுந்த பலசாலியாக இருந்தாரெனக் கிராமத்தவர் கூறுவார்கள். ஒரு பனைமரத்தின் அடியில் நின்றுகொண்டு அந்தப் பனைக்கு சண்முகம் அவர்கள் தனது ஒரு கையால் ஓங்கி அடித்தால் அந்தப் பனைமரத்தின் மேற்பகுதியான 'வட்டே' ஆடுமாம் எனச் சண்முகத்தின் உடல் பலத்தைப் பற்றி சண்முகம் வாழ்ந்த காலத்தில் அந்தக் கிராமத்தில் வாழ்ந்தவர்கள் சொல்லுவார்கள். இந்தச்



சண்முகத்திற்கு அந்தக் கிராமத்தில் உள்ளவர்கள் மட்டுமல்ல, அயல் கிராமத்தவர்களும் பயந்தவர்களாகவே இருந்தார்கள்.

இவ்வாறு சண்முகமும் அவரது சகோதரர்களும் தனிக்காட்டு ராஜாக் களாக அந்தக் கிராமத்தில் வலம்வந்து கொண்டிருந்த காலத்தில்தான் அரச மானியமான கூப்பன் முத்திரை அறிமுக மானது. அரசாங்கத்தால் வறிய மக்களுக்கான மானியமாக வழங்கப்பட்ட இந்தக் கூப்பன் முத்திரையை அம்மக்கள் கிழமைக்கு ஒரு தடவை குறிப்பிட்ட கடைகளில் ஒவ்வொரு முத்திரையாகக் கொடுத்து அரிசி - மா - சினி - பருப்பு போன்ற அன்றாடத் தேவைக்கான உணவுப் பொருட்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். இந்தக் கூப்பன் முத்திரை கொடுக்கப்படவேண்டியவர்களை அந்தப் பகுதி விதானையார் தெரிவு செய்து அவரே அம்முத்திரைகளைத் தெரிவு செய்யப்பட்டவர்களிற்கு வழங்குவார்.

அந்தக் காலத்திலே உடையார் - விதானையார் போன்ற பதவிகள் கல்வித் தகைமையின் அடிப்படையில் வழங்கப்படுவதில்லை. உடையார் பரம்பரை! விதானையார் பரம்பரை எனக் குடும்பப் பரம்பரையின் அடிப்படையிலேயே அரசாங்கம் இப்பதவிகளை வழங்கிவந்தது. அதாவது ஏற்கனவே இருக்கும் விதானையார் (கிராமசேவகர்) இறந்துவிட்டால் அவரது மகனையே அடுத்த விதானையாராக அரசாங்கம் நியமிக்கும். எனவே அந்தக் காலத்து விதானைமாரின் காரியாலயம் பெரும்பாலும் அவரது வீடாகவே இருக்கும். அந்தவகையில் கோப்பாய் கிராமவிதானையாரின் காரியாலயம் அவரது வீடாகவே இருந்தது.

ஒரு நாள் சண்முகம் என்பவர் மண்வெட்டியுடன் தோட்ட வேலைக்காக வீதியால் சென்றுகொண்டிருந்தார். தற்செயலாக அந்த வீதியால் வந்துகொண்டிருந்த சண்முகத்தை இடைமறித்து "இஞ்சேர் சண்முகம் உனக்கு கூப்பன் முத்திரை வந்திருக்கு. வீட்டைவந்து அதை ஒருக்கால் எடு..." எனக்கூறினார். கூப்பன் முத்திரை பற்றி அறிந்திராத சண்முகம் "கூப்பன் முத்திரை எண்டால் என்ன விதானையார்?" என அவரைக் கேட்டான். அதற்கு விதனையார்,

"அரசாங்கம் உனக்கு இலவசமாய் அரிசி, சாமான்கள் தரப்போகுது. குறிப்பிட்ட கடையில நீ அந்தக் கூப்பன் முத்திரையைக் கொடுத்தால் அவர்கள் உன்னட்டைக் காசுவாங்காமல் உனக்கு இலவசமாய் அரிசி சாமான்கள் தருவினம்" என விதான்னயார் கூப்பன் முத்திரை பற்றி விளக்கமாகச் சண்முகத்திற்கு கூறினார். இதைக் கேட்ட சண்முகம் மிகுந்த கோபம்கொண்டார்...

"டேய் விதானை! இந்தச் சண்முகத்தை என்ன உழைக்கத் தெரியாத சோம்பேறிப் பிச்சைக்காரன் எண்டு நினைச்சியா? டேய்! உங்கடை அரசாங்கத்திட்டை பிச்சை எடுத்துக் குடும்பச் சீவியத்தை நடத்திற அளவுக்கு இந்தச் சண்முகம் தன்மானமில்லாத கோழை இல்லையெடா. என்ரை உடம்பில பலமிருக்கு. உள்ளத்திலை வீரமிருக்கு. என்ரை குடும்பத்திற்கு உழைச்சுச் சோறு போட என்னாலை முடியுமெடா... ஒரு உப்புக் கட்டிக்குக்கூட என்ரை மனிசி பிள்ளையை அடுத்தவனிடம் கையேந்தி நிற்கவிடாத இந்தச் சண்முகத்தைப் பார்த்து அரசாங்கத் திட்டை பிச்சை எடு எண்டு சொன்ன உன்னை" எனச் சண்முகம் விதானையார் மீது பாய்ந்தார். உடனே விதானையார் அவ்விடத்தைவிட்டு ஓடத் தொடங்கினார். ஓடுகின்ற விதானையாரைச் சண்முகம் துரத்திப்பார்த்தார். ஆனால் விதானையாரை சண்முகத்தால் பிடிக்கமுடியவில்லை.

விதானையாரைப் பிடிக்கமுடியாத தால் சண்முகத்தின் கோபம் அடங்க வில்லை. அரசாங்கத்திடம் பிச்சை எடுத்து வாழும்படி கூறி தன்னை அவமானப்படுத்திய விதானைக்குச் சரியான பாடம் படிப்பிக்கவேணும் எண்ட கோபவெறியுடன் சண்முகம் விதானை யாரின் வீட்டையே சுற்றிச் சுற்றி வந்தார். சண்முகத்திற்குக் கூப்பன் முத்திரை கொடுக்கமுயன்ற விதானையாரோ மூன்று நாட்களாக வீட்டுப் பக்கமே தலைகாட்டமுடியவில்லை. சண்முகத்தை எதிர்த்துநிற்கும் தைரியம் அந்தக் கிராமத்தில் எவருக்கும் இருக்கவில்லை. பொலிசில் சொல்லி சண்முகத்தை பிடிச்சுக் கொடுக்கலாமெண்டால் பிறகு அவனின் சகோதரர்களாக மாணிக்கமும் வயித்தியும் தன்னை விடமாட்டாங்கள் என எண்ணிய விதானையார் மாணிக்கத் தையும், வயித்தியையும் இரகசியமாய் சந்தித்து காலில் விழாத குறையாய் கெஞ்சிமன்றாடி அவர்கள் மூலமாகச் சண்முகத்தை சமாதானப்படுத்திய பின்புதான் விதானையார் தனது வீட்டில் நிம்மதியாய் படுத்துறங்கினார்.

இவ்வாறு சண்முகம் அவரது தம்பி களான மாணிக்கம், வயித்தி ஆகிய மூவரும் தாம் குடியிருக்கும் கிராமத்தில் மட்டுமன்றி கோப்பாய் பகுதியில் வாழ்ந்த சகல சமூகத்தவர்களும் பயப்படுமளவிற்குப் பெரும் சண்டியர் களாக இருந்தபோதிலும் தீண்டாமை எனும் மனிதாபிமானமற்ற கொடிய நடைமுறை அவர்களையும் பாதித்து தீண்டத்தகாதவர்கள் என்றவகையில் சமூகம் அவர்களையும் ஒதுக்கியே வைத்தது. இவ்வாறு தம்மை புறக்கணித்து பொதுஇடங்களிலும் தம்மை மிகக்கேவலமாய் நடாத்தும் தீண்டாமைக்கெதிராக அவர்கள் போராடத் தயாராய் இருக்கவில்லை.

"கூப்பன் முத்திரையைப் பெற்றுக் கொள்" என விதானையார் தன்னைக் கேட்டுவிட்டார் என்பதற்காக... தன் மானத்துடன் கொதித்தெழுந்த சண்முகம் என்னும் துணிச்சல்மிக்க சண்டியன் தன்னையும் தனது சமூகத்தையும் மிகக் கேவலமானமுறையில் ஒதுக்கிவைக்கும் இந்த தீண்டாமையெனும் கொடுமையான நடைமுறைக்கெதிராக தனது சின்னி விரலைக்கூட நீட்டத்தயாராய் இருக்கவில்லை. இது ஏன்?

இங்குதான் ஒரு விடயத்தை நாங்கள் ஆழமாக புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. தீண்டாமையென்னும் கொடுமையான நடைமுறை வெறும் சாதிப்பிரச்சினையாக மட்டும் இருந்திருந்தால் சண்முகம் போன்ற துணிச்சல்மிக்க இளைஞர்கள் கோப்பாய் பகுதியில் உள்ள தேனீர் கடைகள், ஆலயங்கள், சலூன்கள் என அனைத்து இடங்களிலும் அன்று நடைமுறையில் இருந்த தீண்டாமை யென்னும் நடைமுறையை ஓரிரு நாட்களிலேயே இல்லாமல் செய்து இருப்பார்கள்...! ஆனால் தீண்டாமை என்பது வெறும் சாதிசார்ந்த பிரச்சினை யாக மட்டும் அன்று இருக்கவில்லை. மாறாக தீண்டாமை என்பது அடிமை மக்களது நிலஉரிமையோடு தொடர்பு பட்ட நிலப்பிரபுத்துவ மேட்டுக்குடிச் சமூகத்தின் மேலாதிக்க வெறியோடு சம்மந்தப்பட்ட ஒரு பிரச்சினையாகவே இருந்தது. அதனால்தான் தம்மீது சுமத்தப்பட்ட தீண்டாமை என்ற மனிதக்கொடுமைக்கு எதிராக அன்றைய ஒதுக்கப்பட்ட மக்களால் ஒரு சின்னி விரலைக்கூட அசைக்கமுடியவில்லை.

கோப்பாய் பகுதியிலே சண்முகம் வாழ்ந்த 1940ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து கிட்டத்தட்ட 1970-கள் வரை சண்முகம் வாழ்ந்த கிராமத்து மக்கள் குடியிருந்த பெரும்பாலான நிலமும் அவர்கள் உழைத்து வாழ்ந்த வயல்நிலங்களும் அந்த மக்களுக்குச் சொந்தமானதாக இருக்கவில்லை. அந்த நிலங்கள் அனைத்தும் நிலப்பிரபுத்துவ சமூக வாரிசான கதிரவேற்பிள்ளை அவர்களுக்கே சொந்தமானதாக இருந்தது. எனவேதான் 1960-களில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் போது அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஓர் இளைஞன் ஏனைய முற்போக்கு இளைஞர்களோடு சேர்ந்து தீண்டாமைக் கொடுமைக்கெதிராகக் குரல்கொடுத்தான் என்பதற்காக கதிரவேற்பிள்ளை அவர்கள் துணிச்சலுடனும் அதிகாரத்துடனும் அந்தக் கிராமத்துக்குள் நுழைந்து அங்கு வாழ்ந்த மக்களை மிரட்டி விட்டுச்சென்றார்.

(தொடரும்)

**"கூப்பன் முத்திரையைப் பெற்றுக்கொள்" என விதானையார் தன்னைக் கேட்டு விட்டார் என்பதற்காக... தன்மானத்துடன் கொதித்தெழுந்த சண்முகம் என்னும் துணிச்சல்மிக்க சண்டியன் தன்னையும் தனது சமூகத்தையும் மிகக் கேவலமான முறையில் ஒதுக்கி வைக்கும் இந்த தீண்டாமையெனும் கொடுமையான நடைமுறைக்கெதிராக தனது சின்னி விரலைக்கூட நீட்டத் தயாராய் இருக்கவில்லை. இது ஏன்?**

தங்கன்



பரம்சோதி தங்கேஸ்

## ஒடுக்கப்பட்ட சாதியினரின் அரசியல் பங்கேற்பும் முற்போக்கு அரசியல் தமிழ்த்தேசியவாதத்திற்கான தேவையும்

கலாநிதி ஆய்வு மாணவன், மானிடவியற் துறை, சமூக விஞ்ஞானங்களின் பீடம், கிழக்கு லண்டன் பல்கலைக்கழகம்

**"தீர்க்கப்படாது நீண்டகாலமாகத் தொடரும் தமிழர் அரசியல் பிரச்சினை வெள்ளாளர் தலைமைத்துவத்தினை தொடர்ச்சியாக பேணுவதற்கு ஒரு வகையில் உந்துசக்தியாகவுள்ளது. நீண்டகால அரசியல் பிரச்சினை மற்றும் யுத்தவடுக்கள் மீண்டும் மீண்டும் இத்தலைமைத்துவத்தின் அரசியல் செல்வாக்குக்கு துணைபோகின்றன. இவை வெள்ளாளரின் தேசிய செயற்றிட்டத்தை நோக்கி தமிழ் மக்களின் உணர்வுகளை ஒன்றிணைப் பதற்கான வேலைத்திட்டத்தினை மிகவும் இலகுபடுத்தியுள்ளது. இப்போக்கு வெள்ளாளச் சாதிப்பின்புலத்தினை கொண்டிராத ஒருவர் அரசியலில் பங்கேற்பதற்கான சந்தர்ப்பத்தை மிக அரிதாகவே வழங்குகின்றது. இத்தகையதொரு சூழமைவில், அடக்கப்பட்ட சாதியினர் அரசியல் அதிகாரத்தில் சமத்துவமாகப் பங்குபெற வேண்டின், நீண்டகாலமாக இருந்துவரும் இனத்துவ அரசியல் முரண்பாட்டுக்கு நிரந்தரமானதொரு தீர்வு காணப்பட வேண்டும்."**

# ஒடுக்கப்பட்ட சாதி

தமிழர் இனத்துவ அடையாளத்தினையும் அரசியல் சுதந்திரத்தையும் பாதிப்புக்குட்படுத்தும் சிங்கள பௌத்த தீவிரவாதம் உள்ளூரிலுள்ள தமிழர்களின் சாதியபடிப்படியிலான ஏற்றத்தாழ்வுகள் மற்றும் அவர்களின் தவறான தலைமைத்துவம் தொடர்பாக அவர்கள் கடைப்பிடித்துவந்த பாராமுகத்தினை தொடர்ச்சியாக சிரமமின்றிப் பின்பற்றுவதற்கு உறுதுணையாக இருந்தது. இந்தக் காலகட்டத்தில் தான் அடக்கப்பட்ட சாதியினரும் இடதுசாரி இயக்கங்களினதும் இணைந்து மேற்கொண்ட தீண்டாமையை இல்லாதொளிக்கும் போராட்டங்கள் பெயரளவில் வெற்றி (symbolic success) கண்டது. அடக்கப்பட்ட சாதியினரின் அதிருப்தியினை பூர்த்தி செய்யும்முகமாக, 1977இல் மேற்கொள்ளப்பட்ட வட்டுக்கோட்டை தீர்மானத்தில் முன்வைக்கப்பட்ட தமிழீழத்திற்கான பிரகடனத்தோடு சாதியினை இல்லாதொழிக்கும் வாசகத்தினையும் பெயரளவில் வெளிப்படுத்துகின்றனர். எவ்வாறாயினும் அடக்கப்பட்ட சாதியினரின் அதிருப்தியை பூர்த்திசெய்யும்முகமாக எத்தகையதொரு ஆக்கபூர்வமான முன்னெடுப்பினையும் இத்தமிழ்த் தலைமைகள் இதுவரைகாலமும் மேற்கொள்ளவில்லை. இத்தலைமைகள் தமிழ்த் தேசிய அரசியலில் அடக்கப்பட்ட சாதியினர் பங்கேற்பதற்கான சமத்துவ வாய்ப்பினை வழங்குவதில்லை. மாறாக பாகுபாடு நிறைந்த தமிழ்த் தேசியவாத அரசியலை தமது தலைமையின்கீழ் வெற்றிகரமாகக் கொண்டு நடத்துவதற்கு இம்மக்களிடமிருந்து போதுமான ஆதரவினைப் பெற்றுக்கொண்டிருக்கின்றனர்.

வெள்ளாளர்களினால் தலைமை தாங்கப்பட்ட தமிழ்த் தேசியவாத அரசியல் செயற்றிட்டம் சிங்களத் தேசிய தீவிரவாதிகளோடு இடம்பெற்ற அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததைத் தொடர்ந்து பிரிந்த தமிழரசு, என்று தமிழீழக் கோரிக்கையோடு அதன் உச்சத்தைத் தொடுகின்றது. இது உண்மையில் அவர்களது அரசியல் நோக்கத்திற்காக தமிழர்களை சாதி, வகுப்பு, மத மற்றும் பால்நிலை வேறுபாடுகளின்றி ஒன்று சேர்ப்பதற்கு பெரிதும் உதவியது. முன்னர் வெள்ளாளத் தலைமைக்கு எதிராக தமது வாக்குகளைப் பதிவு செய்தவர்கள், பின்னர் தமது இனத்துவ அடையாளத்திற்கு ஏற்பட்ட பாதிப்பினைக் கருத்தில்கொண்டு அத்தலைமைகளுக்கே வாக்களிக்கவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இவ்விடத்தில் வெள்ளாளத் தமிழ்த் தேசியத் தலைவர்கள் தம்மால் தலைமை தாங்கப்படும் தமிழ்த்தேசியவாத அரசியலுக்கு மக்களை ஒன்று திரட்டுவதற்கு சிங்கள பௌத்த தேசிய வாதத்தின் அதிதீவிர நிலைப்பாட்டை மூலதனமாக்குகின்றனர்.

எனினும், தமிழ் ஆயுதக் குழுக்களின் வளர்ச்சி குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இத்தகையதொரு வெள்ளாளர் தலைமையிலான தேசிய செயற்றிட்டத்தை சவாலுக்கு உட்படுத்துகின்றனர். கட்டமைக்கப்பட்ட சாதிப் படிநிலைச் சமூக ஒழுங்கமைவில் தாழ்த்தப்பட்டோராகக் கருதப்பட்டவர்களில் பலர் அத்தகையதொரு தமிழ்த் தேசியச் செயற்றிட்டத்தில் தலைவர்களாயினர். இது தொன்றுதொட்டு வழக்கத்திலிருந்த வெள்ளாள ஆதிக்க அரசியலை ஆட்டங்காண வைத்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது அமைப்புக்குள் இருந்த அனைத்துச் சாதியினைச் சேர்ந்தோருக்கும் தலைமைப் பொறுப்பினை வழங்குவதினூடாக பாரம்பரியமாக இருந்துவந்த வெள்ளாள அரசியல் ஆதிக்கத்தினை குறிப்பிட்டுச் சொல்லத்தக்களவு இல்லாது ஒழித்தனர். உதாரணமாக: விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த தமிழ்ச்செல்வன் அடக்கப்பட்ட சாதிகளில் ஒன்றான அம்பட்டர் சாதியினைச் சேர்ந்தவர். விடுதலைப் புலிகளின் அரசியல் அசைவியக்கத்திலுள்ள வெற்றி, தோல்வி, பிரச்சினை என்பதற்கு அப்பால், வேறுபட்ட சமூக, சாதிப் பின்னணிகளைக் கொண்டிருக்கும் பலரும் பங்குகொள்ளும் அதிகார வலுவினை அதுகொண்டிருந்தது எனலாம். விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழர் அரசியல் மீண்டும் வெள்ளாளரது ஆதிக்கத்திற்குள் கொண்டுவரப்பட்டது. இந்த அரசியலில் அடக்கப்பட்ட சாதியினர் அரசியல் தலைவர்களாக வருவதற்குரிய வெளி மிகக்குறைவாக உள்ளது அல்லது அத்தகையதொரு வெளி இல்லை என்றே கூறலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிக்கு எதிராக முன்வைக்கப்படும் விமர்சனம் என்னவெனில், ஒவ்வொரு பாராளுமன்றத் தேர்தலிலும் வேட்பாளரைத் தெரிவுசெய்யும் பொழுது தாம் "சாதி பார்ப்பதில்லை" என்பதைக் காட்டுவதற்காக அடக்கப்பட்ட சாதியினரிடம் இருந்து ஒருவரை நியமிப்பார்கள். அவ்வாறு நியமிக்கப்படுபவர் தேர்தலில் தோல்வியடையும் நபராக இருந்தாரே அல்லாது வெற்றி பெறுபவராக இல்லை என்பதை கடந்தகால அனுபவங்கள் சுட்டிநிற்கின்றன.

தீர்க்கப்படாது நீண்டகாலமாகத் தொடரும் தமிழர் அரசியல் பிரச்சினை வெள்ளாளர் தலைமைத்துவத்தினை தொடர்ச்சியாக பேணுவதற்கு ஒருவகையில் உந்துசக்தியாகவுள்ளது. நீண்டகால அரசியல் பிரச்சினை மற்றும் யுத்தவடுக்கள் மீண்டும் மீண்டும் இத்தலைமைத்துவத்தின் அரசியல் செல்வாக்குக்கு துணைபோகின்றன. இவை வெள்ளாளரின் தேசிய செயற்றிட்டத்தை நோக்கி தமிழ் மக்களின் உணர்வுகளை ஒன்றிணைப்பதற்கான வேலைத்திட்டத்தினை மிகவும் இலகுபடுத்தியுள்ளது. இப்போக்கு வெள்ளாளச் சாதிப் பின்புலத்தினை கொண்டிராத ஒருவர் அரசியலில் பங்கேற்பதற்கான சந்தர்ப்பத்தை மிக அரிதாகவே வழங்குகின்றது. இத்தகையதொரு சூழமைவில், அடக்கப்பட்ட சாதியினர் அரசியல் அதிகாரத்தில் சமத்துவமாகப் பங்குபெறவேண்டின், நீண்டகாலமாக இருந்துவரும் இனத்துவ அரசியல் முரண்பாட்டுக்கு நிரந்தரமானதொரு தீர்வு காணப்படவேண்டும்.

இவ்வாறு சொல்வதனூடாக, இந்தியாவில் உள்ளது போன்று, தமிழ்த் தேசிய அரசியலிலும் சாதியை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் அரசியல் அசைவியக்கத்தினை நான் தூண்டிநிற்கிறேன் என்பதாக அர்த்தம் கொள்ளக்கூடாது. அத்தகையதொரு கண்ணோட்டத்தில் பார்த்தால் தற்பொழுது ஒரு குறிப்பிட்ட சாதியினரின் எல்லைக்குள்ளேயே அதிகாரம் குவிந்துகிடக்கின்றது. அத்தகையதொரு மறைந்து காணப்படும் சாதிசார்ந்த அரசியலை கோடிட்டுக் காட்டுவதும் இக்கட்டுரையின் நோக்கங்களில் ஒன்று. தமிழ்த் தேசிய அரசியலில் சாதிய உணர்வுகளைத் தூண்டி அரசியல் செய்வதனூடாக தற்பொழுதுள்ள பழமைவாத, ஒரு குறிப்பிட்ட சாதியினை மையமாகவைத்து மேற்கொள்ளப்படும் அரசியலுக்கு தீர்வு காணப்படலாம் என்பதையும் நான் நம்பவில்லை.

அத்தகையதொரு எண்ணப்பாடு தமிழர்களின் அரசியல் பலத்தினை அல்லது ஒற்றுமையை உடைப்பதற்கு முயற்சிப்பவர்களுக்கு துணைபோவதாக அமைந்துவிடும். எனது எழுத்து சாதியின் அடிப்படையில் மக்களைப் பிரித்து அரசியல் இலாபம் தேடுபவர்களை திருப்திப்படுத்தும் நோக்கத்தினையும் கொண்டிருக்கவில்லை. அத்தகையதொரு வெளி தமிழ்ப் பிரதேசங்களில் தற்பொழுது இருப்பதாகவும் எனக்குத் தெரியவில்லை. இந்தக் கட்டுரையில் எனது நோக்கம், தமிழ்த் தேசிய அரசியல் தற்பொழுது இருப்பது போன்று பழமைவாத எண்ணத்தோடு இல்லாது முற்போக்கு தேசியவாதமாக இருக்கவேண்டும் என்பதாகும். அத்தகையதொரு அரசியல் முன்னெடுப்பில் அனைத்து சாதியினருக்கும் சமஅந்தஸ்து கொடுக்கப்படவேண்டும் என்பதாகும்.

கட்டுரையின் ஆரம்பத்தில் மேற்கொண்ட விவாதத்திற்கு இப்போது வருகின்றேன். அடக்கப்பட்ட சாதியினர் தற்பொழுது எண்ணிக்கையில் அதிகமாகவுள்ளனர். சமூக, பொருளாதார மற்றும் கல்வித் தகைமைகளிலும் கணிசமாக முன்னேறியுமுள்ளனர். ஆனால், தமக்கிருக்கும் சமூக மூலதனத்தை தமக்கான அரசியல் சமஅந்தஸ்தினைப் பெற்றுக்கொள்ளும் உயர்ந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தாது, வெள்ளாளத் தலைவர்களுக்கு வாக்களிப்பதோடு மட்டும் தமது அரசியல் பங்கேற்பினைச் சுருக்கிக் கொள்கின்றனர்.

இந்நிலைமை மாறவேண்டும். முற்போக்கான மாற்றத்திற்காக, அனைத்து சமூகத்தினைச் சேர்ந்தவர்களும் சாதி வேறுபாடின்றி அரசியலில் சமஅளவில் பங்கேற்பதற்கானதொரு வெளியினை தமிழ்த் தேசிய அரசியல் உருவாக்க வேண்டும். தமிழ் அரசியல் தலைவர்கள், வேட்பாளர் தெரிவு மற்றும் அரசியல் தலைவர் ஒருவரை உருவாக்குவதற்கான ஆதரவு முதலியவற்றில் சாதி பார்ப்பதில்லை என்றுகூறுவதில் உண்மையில்லை என்பதை ஆத்மார்த்தமாகப் புரிந்து கொள்ளவேண்டும். இந்த விடயத்தில் தாம் சொல்லுவதற்கு நேர்மாறாகவே யதார்த்தம் உள்ளது என்பதை எடுத்தியம்புவதும் இக்கட்டுரையின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும்.

உசாத்துணை

Cheran, R. (2009) Pathways of Dissent: An Introduction to Tamil Nationalism in Sri Lanka, in R. Cheran (ed)Pathways of Dissent: Tamil Nationalism in Sri Lanka, New Delhi: Sage Publication, pp. Xiii-Xiii.

Daniel, E.Valentine & Thangaraj, Yuvaraj. (1995) 'Forms, Formations and Transformation of the Tamil Refugee', in E.V. Daniel & Chr. Knudser, J. (eds), Mistrusting refugees, University of California Press, Los Angeles, pp.225-255.

Gunasingam, M. (1999) Sri Lankan Tamil Nationalism: A Study of Its Origins, Sydney: South Asian Study Centre-MV Publications.

McDowell, C. (1996) A Tamil Asylum Diaspora: Sri Lankan Migration, Settlement, and Politics in Switzerland. Oxford: Bergham Books.

McDowell, C. (1999) 'The Point of No Return: The Politics of the Swiss Tamil Repatriation Agreement', in Black, R. and Koser, K. (eds) The End of The Refugee Cycle? Refugee Repatriation and Reconstruction, Oxford: Berghahn Books, pp. 126-141.

நூலாசிரியர் பற்றி:

பரம்சோதி தங்கேஸ் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சமூகவியற் துறையில் கலைமாணி பட்டத்தினைப் பெற்றவர். இவர் கொழும்புப் பல்கலைக்கழத்தில் சமூகவியல் விரிவுரையாளராக கடமையாற்றியவர். சர்வதேச சமூக ஆராய்ச்சி நிறுவனங்களில் ஆய்வாளராக பணிபுரிந்தவர். ஐக்கிய இராச்சியத்தில் கிழக்கு லண்டன் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்ட பின்னர் தற்பொழுது அதே பல்கலைக்கழகத்தில் மானிடவியற் துறையில் கலாநிதிப் பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகின்றார். யாழ்ப்பாணச் சமூகத்தின் புலம்பெயர்வு, சாதி, இனத்துவம், மதம், அடையாளம் முதலியவை தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டும் அவற்றினை பரந்தளவில் வெளியிட்டும் வருகின்றார். இவரது ஆய்வுக் கற்கைகள் தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களமொழிகளில் வெளிவந்துள்ளன.

**இக்கட்டுரை தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றது. (ஆ-ர்)**

(முற்றும்)

# இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும்

## வெளியீடு 03




- ஆர்.கே.மேனன் -

# இலங்கையில் தமிழர் பூர்வீகம்

இலங்கையின், வடக்கு, வடமேற்கு, வடகிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த கற்கால மனிதர்கள் பயன்படுத்திய கருவிகளும், தமிழ்நாட்டில் குறிப்பாகத் திருநெல்வேலிக் கரையோரம் கண்டுபிடிக்கப்பட்ட கருவிகளும் ஒரே தன்மையானவையாகக் காணப்படுகின்றன. தமிழகத்தில் காணப்பட்ட பெருங்கற் காலப் பண்பாட்டுக்குரிய அடக்கக் களங்களை ஒத்த களங்கள் இலங்கையின் வடமேற்குக் கரையோரம் பொம்பரிப்பிலும், கிழக்குக் கரையோரம் கதிரவெளியிலும் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன. தொடக்ககாலப் பாண்டிய இராச்சியப் பகுதியில் காணப்படும் அடக்கக்களங்களோடு குறிப்பிடத்தக்க வகையில் ஒத்துள்ள இக்களங்கள் முறையே கி.மு 5ஆம் நூற்றாண்டையும், கி.பி 2ஆம் நூற்றாண்டையும் சேர்ந்தவை. இவற்றோடு பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய அம்சங்கள் இலங்கையில் மன்னார், கந்தரோடை, ஆனைக்கோட்டை, வேலணை, காரைதீவு, புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பூநகரி, முல்லைத்தீவு, வவுனியா, மாமடு, பறங்கியாறு, அனுராதபுரம் ஆகிய இடங்களிலும் கண்டறியப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் அரிக்கமேட்டில் காணப்பட்டதை ஒத்த கி.மு 1300ஐச் சேர்ந்த மட்பாண்ட வரிசைகள் யாழ்.மாவட்டத்தில் கந்தரோடையில் கண்டறியப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டைப் பிரதேசத்தில் தொல்லியலாளர் கா.இந்திரபாலாவின் தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அகழ்வாராய்ச்சிக் குழுவினர் நடத்திய ஆய்வில் கி.மு 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மனிதன் ஒருவனுடைய புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது. அக்குழியில் காணப்பட்ட முத்திரை ஒன்றில் இரண்டு வரியில் எழுத்துக்கள் காணப்பட்டன. ஒரு வரி தமிழ் பிராமியிலும், மற்றையது சிந்துவெளிக் குறியீடுகளை ஒத்தும் அமைந்திருந்தன. இதை கோவேந்த, கோவேதன், கோவேதம தீவுக்கோ எனப் பல்வேறுவகையில் திராவிட மொழிச் சொல்லாக வாசித்துள்ளனர். இதை அடிப்படையாகக்கொண்டு இது ஒரு தலைவனுடைய புதைகுழியாக இருக்கலாம் என்கின்றனர்.

இலங்கையின் ஆனைக்கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால முத்திரை வேலணை சாட்டிப் பிரதேசத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தொல்பொருளியல் பிரிவினால் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்களும் மனித எலும்புகளும் சாட்டியை அண்டிய பிரதேசத்தில் முதற் சங்ககாலம் தொட்டு நாகரிகமடைந்த மக்கள் வாழ்ந்தாக அறியமுடிகின்றது.

இவற்றை அடிப்படையாகக்கொண்டு, அக்காலத்தில் இலங்கையில் வாழ்ந்த மக்கள் தென்னிந்தியாவில் வாழ்ந்த திராவிட மொழி பேசிய மக்களின் இனத்தவரே என்னும் கருத்தைச் சில ஆய்வாளர்கள் முன்வைத்துள்ளனர். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இலங்கையில் பரவிவாழ்ந்த இடைக்கற்கால மக்களின் வழித் தோன்றல்களே இன்றைய இலங்கைத் தமிழரும், சிங்களவரும் என்பதும், தமிழ் பேசுவோரோ அல்லது பிராகிருத மொழி பேசுவோரோ பெருமளவில் இலங்கையில் குடியேறி அங்கிருந்த மக்களை அகற்றவில்லை என்பதும் இந்திரபாலாவின் கருத்து.

கிறித்தவ ஆண்டுக்கணக்கின் தொடக்கத்தை அண்டிய காலப் பகுதியில், தமிழ்நாடு, கேரளம், ஆந்திர, கர்நாடக மாநிலங்களின் தெற்குப் பகுதிகள், இலங்கை என்பன ஒரே பண்பாட்டு வலயமாக இருந்தன என்றும், தமிழும், பிராகிருதமும் மக்களின் இடப் பெயர்வினால் அன்றிப் பண்பாட்டுப் பரவலினாலேயே இலங்கைக்கு வந்தன என்றும் அவர் கூறுகிறார்.



**தொல்பொருளில் கிடைக்கப் பெற்ற இலங்கையின் சுதேசிகள் தமிழர் என்பதற்கான ஆதாரங்கள்**

### வரலாற்றுக் காலம்

வடக்கே பூநகரியில் இருந்து தெற்கே திசமகாராமை வரை எழுத்துக்களோடு கூடிய மட்பாண்டத் துண்டுகள் பல கிடைத்துள்ளன. இவற்றுள் குடிப்பெயரான வேள என்பதும் காணப்படுகின்றது. இது பண்டைத் தமிழ் நாட்டில் இருந்த வேளிர் குடியைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது. பண்டைத் தலைநகரமான அனுராத புரத்திலும், இலங்கையின் பிறபகுதி களிலும், கி.மு 2ஆம் நூற்றாண்டில் இருந்தே தம்மை தமேலா அல்லது தமேதா (பிராகிருத மொழியில்) என அழைத்துக்கொண்டவர்கள் (தமிழர்) வாழ்ந்ததற்கான கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. இவ்வாறான ஐந்து கல்வெட்டுக்களில் இரண்டு வவுனியா மாவட்டத்தில் உள்ள பெரிய புளியங்குளத்திலும், ஒன்று திருகோண மலை மாவட்டத்தில் உள்ள சேருவிலை யிலும், ஒன்று அம்பாறை மாவட்டத்தில் குடுவில் என்னும் இடத்திலும், இன்னொன்று பண்டைய தலைநகரமான அனுராதபுரத் திலும் கண்டெடுக்கப்பட்டவை. இலங்கை யின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள திசமகாராமையில் நடந்த அகழ்வாய்வு களின்போது கி.மு 2ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் வெளியிடப்பட்ட உள்ளூர் நாணயங்கள் கிடைத்தன.

இவற்றில் சிலவற்றில் தமிழர் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. இது அக்காலத்தில் இலங்கைத் தீவின் தெற்குக் கரையோரத்தில் தமிழ் வணிகர்கள் முனைப்பான வணிக்த்தில் ஈடுபட்டிருந்தமைக்கான சான்றாகக் கருதப்படுகிறது. விசாகா என்னும் தமிழ் வணிகனின் பெயரும், உள்ளூரில் வாழ்ந்த சமன என்னும் தமிழன் ஒருவனின் பெயரும், கரவா என்னும் தமிழ் மாலுமி ஒருவனின் பெயரும் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. கி.மு இரண்டாம் நூற்றாண்டில் தமிழர் தோணிகளில் இலங்கைக்குக் குதிரைகளைக் கொண்டுவருவது குறித்த இலக்கியச் சான்றுகள் உள்ளன. பெரும்பாலும், இக்குதிரைகள் குதிரைமலை என இன்று அழைக்கப்படும் இடத்தில் இறக்கப்பட்டிருக்கலாம்.

வரலாற்றுப் பதிவுகளின்படி, கி.மு இரண்டாம் நூற்றாண்டில் இருந்தே தமிழ் நாட்டில் இருந்த தமிழ் இராச்சியங்கள் இலங்கை விடயங்களில் நெருக்கமான ஈடுபாடுகொண்டிருந்தமை தெரிய வருகின்றது. கிறித்துவுக்கு முந்திய சில நூற்றாண்டுகள் இலங்கையின் வடபகுதி யில் இருந்த குதிரைமலை, கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய நகரங்களுக்கும், தமிழ்நாட்டு நகரங்களுக்கும் இடையே தமிழ் வணிகர்கள் வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். இவ்விடங்களில் நடத்தப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் மூலமும், தமிழ்க் காப்பியமான மணி மேகலையில் குறிப்பிடப்பட்டு இருப்பதில் இருந்தும், யாழ்ப்பாணக் குடாநாடு, முத்து, சங்கு போன்ற கடல்படு பொருட்களுக்கான பன்னாட்டுச் சந்தையாக இருந்ததும், தமிழ் வணிகர்கள் இங்கே வணிகத்தில் ஈடுபட்டிருந்ததும் தெரியவருகிறது.

### இலங்கையின் தமிழ் ஆதிவாசிகள்

சிங்களவர்களின் வரலாறு கூறும் நூலான மகாவம்சம், கி.மு இரண்டாம் நூற்றாண்டில் இருந்தே பல தமிழர்கள் இலங்கையைக் கைப்பற்றி ஆண்டமை குறித்த தகவல்கள் காணப்படுகின்றன. சேன, குத்தக என்னும் இரு தமிழர்கள் கி.மு177 தொடக்கம் கி.மு155 வரை 22 ஆண்டுகால ஆட்சி புரிந்துள்ளனர். சோழநாட்டைச் சேர்ந்த எல்லாளன் என்பவன் கி.மு145 காலப்பகுதியில் இலங்கையைக் கைப்பற்றி 44 ஆண்டு காலம் சிறந்த முறையில் ஆட்சி செய்துள்ளான். பின்னர் கி.மு 104இல் ஏழு தமிழர்கள் அநுராதபுரத்தைக் கைப்பற்றி 14 ஆண்டுகளுக்கும் மேலாக கி.மு 87 வரை இலங்கையை ஆட்சி செய்துள்ளனர். கி.மு 47ஐ அண்டிய காலத்திலும் இரண்டு தமிழர்கள் ஏறத்தாள இரண்டு ஆண்டுகாலம் இலங்கையை ஆண்டுள்ளனர். இவற்றை விட, கி.பி முதலாம் நூற்றாண்டின் பின்னர், சிங்கள அரச குடும்பங்களில் ஏற்பட்ட வாரிசுப் போட்டிகள் காரணமாக அரசிழந்தவர்கள் தமிழ் நாட்டில் இருந்து படைதிரட்டி வந்து ஆட்சியைப் பிடித்தமை பற்றிய குறிப்புக்களும் உண்டு.

### மத்திய காலம்


பொலநறுவையில் கண்டெடுக்கப்பட்ட தமிழில் எழுதப்பட்ட "வேளக்காரர் கல்வெட்டு".

கி.பி 10 ஆம் நூற்றாண்டிலும், 11ஆம் நூற்றாண்டிலும், முதலாம் இராசராச சோழன் காலத்திலும், அவனது மகனான இராசேந்திர சோழன் காலத்திலும் இரண்டு முறை ஏற்பட்ட சோழர் படையெடுப்புக்களின்மூலம், இலங்கை முழுவதும் சோழப் பேரரசின் ஒரு மாகாணமாக இணைக்கப்பட்டது. சோழர்கள் 77 ஆண்டுகள் இலங்கையை ஆட்சிசெய்தனர். கி.பி 1215இல் தமிழ் நாட்டில் வலுவானநிலையில் இருந்த பாண்டியர்கள் இலங்கைமீது படையெடுத்து அதன் ஒரு பகுதியைக் கைப்பற்றி ஆண்டனர். மேற்படி ஆட்சிக் காலங்களில் ஏற்கெனவே இருந்தவர்களுடன் படைவீரர் களாகவும் தமிழர்கள் வந்திருப்பர். சோழ, பாண்டிய ஆட்சிகள் முடிந்த பின்னரும் இவர்களில் ஒரு பகுதியினர் இலங்கையிலேயே தங்கிவிட்டனர். தவிர, இக்காலங்களில் தமிழ் வணிகர்களின் வணிக நடவடிக்கைகளும் அதிகரித்துக் காணப்பட்டன.

சோழரின் தலையீடுகளைத் தொடர்ந்து தலைநகரம் அனுராதபுரத்தில் இருந்து தெற்குநோக்கிப் பொலநறுவைக்கு நகர்ந்தது. 1215ஆம் ஆண்டில் கலிங்க நாட்டைச் சேர்ந்த மாகன் என்பவன் தென்னிந்தியாவில் இருந்து பெரும் படை திரட்டிவந்து பொலநறுவையைக் கைப்பற்றினான். ஆனாலும், அவனால் அதை நீண்டகாலம் தக்கவைத்துக் கொள்ளமுடியவில்லை. சிங்கள அரசனின் தாக்குதல்களைத் தொடர்ந்து மாகன் வடக்குநோக்கி நகர்ந்து யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டதாகத் தெரிகிறது. அதே வேளை, சிங்கள அரசர்களும் பாதுகாப்புக்கருதி மேலும் தெற்கு நோக்கிநகர்ந்து தம்பதெனியா என்னும் இடத்தைத் தலைநகரம் ஆக்கினர். அநுராதபுரம், பொலநறுவை ஆகிய பழைய நகரங்களை உள்ளடக்கிய பெரும்பரப்பு கைவிடப்பட்டு வட பகுதிக்கும், தென்பகுதிக்கும் இடையே வலுவான தடுப்பாக அமைந்தது.

இது, தீவின் வடக்குப் பகுதியில் பெரும்பான்மையாக வாழ்ந்துவந்த தமிழர்களும், தெற்கில் பெரும்பான்மை யாக வாழ்ந்த சிங்களவர்களும் தனித்தனியாக வளர வாய்ப்பளித்தது. இதனால், 13ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில், தனியானதும் வலுவானது மான யாழ்ப்பாண இராச்சியம் உருவானது. தனித்துவமான இலங்கைத் தமிழர் சமுதாயத்தின் உருவாக்கத்துக்கு இதுவே அடித்தளமாக அமைந்தது எனலாம்.

(தொடரும்)



# பாப்பா முரசு



பரமண்ணா

# "விளையும் பயிரின் முளை!"

## வாரம் ஒரு திருக்குறள்



### அறிவுடைமை

**எண்பொருள் வாகச் செலச்சொல்லித்
தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.**

நாம் சொல்ல வேண்டியவைகளை எளிய முறையில் கேட்போரின் இதயத்தில் பதியு மாறு சொல்லிப் பிறர் சொல்லும் நுட்பமான கருத்துக்களையும் ஆராய்ந்து தெளிவதே அறிவுடைமையாகும்.

குறள் : 424

நாட்கள் வேகமாக உருண்டுகொண்டே போயின.

இப்பொழுது சேகரனுக்கு விஞ்ஞானிகள் போன்று நாட்டுக்கும், மக்களுக்கும் வேண்டிய அருங்கண்டு பிடிப்பொன்றை தன்னாலும் உருவாக்கமுடியுமெனும் திடமான நம்பிக்கை உள்ளத்தில் வளர்ந்தது.

அந்நிலைக்கான அளவு தனது கல்வி அறிவையும், தன்னிடமுள்ள பெருமளவி லான விஞ்ஞான ஆராய்ச்சி நூல்களையும் நம்பியே துணிவும் பிறந்தது.

அவன் படித்திருந்த நூல்களில் அறிந்திராத சந்தேகங்களே இல்லை என்னும் அளவுக்கு அத்தனை நூல்களையும் அலசியதுடன் இல்லாமல் தேவையான போதில் எடுத்துப் பார்த்துச் சந்தேகங்களை போக்கிக் கொள்ளவோ, ஏனையவர் களின் கேள்விகளுக்கு பதிலளிக்கவோ படித்த புத்தகங்கள் அனைத்தும் அவனிடம் கைவசம் இருந்தன.

விஞ்ஞானம், மருத்துவம், கணிதம், இலக்கியம், சூழல், வரலாறு போன்ற துறைகளில் சேகரனைக் கவர்ந்தது விஞ்ஞானம் ஒன்றேதான் என்றாலும் அவன் மேற்கொள்ள இருக்கும் ஆராய்ச்சியைச் செய்வதற்கு ஏனைய துறை களிலும் அவனுக்கு உள்ள கொஞ்சநஞ்ச ஈடுபாடுகளும் இன்றியமையாதது என்பதை அவன் அறிந்தே இருந்ததால் சம்பந்தமான துறைசார் நூல்களையும் படித்தும், சேகரித்துக்கொண்டான்.

ஒன்றோடு ஒன்றை இணைத்து ஒன்றினால் மற்றதுக்கு உதவும்படியான அளவுகள் மட்டுமில்லாமல் ஒன்றில் ஒன்றை இணைத்துப் புதிய கண்டுபிடிபொன்றை யும் உருவாக்கக் கூடியதான அறிவும், ஆற்றலும், நம்பிக்கை யும் கூட அவனிடம் விஸ்வரூபம் எடுத்துக் கொண்டிருந்தன.

இப்பொழுது சேகரனுடைய மூளையில் எழுந்துள்ள கேள்வி ஒன்றேதான். தன்னால் உருவாக்கப்பட வேண்டிய பொருள் எது என்பதே அது. முன்பாகத் தோன்றி மறைந்த விஞ்ஞானிகள் இடைவெளி வைக்காமல் நிரப்பிவிட்டது போன்றிருந்தாலும், நிரப்பப்படாமல் இருக்கும் தேவைகள் உலகிற்கு உள்ளதை அவனால் உணரவும் முடிந்திருந்தது. தவிரவும் தன்னால் நிரப்பப்பட வேண்டியதை அவனால் திடப்படுத்தமுடியாமலும் தவித்தான்.

"அம்மா... தாயே... பிச்சை போடுங்கம்மா..." பிச்சைக் காரனின் ஓலம் ஒரு தடவை க்கு பல தடவைகள் வெளி வந்த பின்புதான் சேகரனின் சிந்தனைகள் தடைப்பட்டன. அல்லாமலும் வீட்டு மறு பக்கத்தில் இருந்த அன்னத்தின் காதுகளிலும் விழுந்தன.


திடுகூறாகப் பிச்சைக் காரனைப் பார்த்த சேகரனது பார்வை அவனுடைய மேனியில் குத்திட்டு நின்றது. அவனது நிலைமையை உணர்ந்ததும் சேகரனுக்கு அவன் மீதில் கருணை பிறந்தது. அவன் கொடிய நோயென்றால் அவஸ்தைப்படுவதையும் இவனால் அவதானிக்க முடிந்ததே காரணம்.

நோயின் அவஸ்தைக் குள்ளும் வயிற்றை நிரப்ப வேண்டிய கொடுமையால் அவன் பட்டுலையும் பிரயத்தனத்தைக் கண்ட சேகரனுடைய இதயத்தில் தனி அக்கறையை பிச்சைக்காரன் பெற்றுக் கொண்டான்.

தாயார் பிச்சை வழங்கி அனுப்பி அரை மணி நேரத்தைக் கடந்தபோதும், அவன் நினைவாகவே சேகரனின் சிந்தனை வலம் வந்துகொண்டிருந்தது.

புற்றுநோயால் பிச்சைக்காரன் தன்நிலை இழந்து சீரழிந்தவனாகக் காட்சி தந்தான். அந்நோய் மிகக்கொடிய ஒன்று. ஒருவருக்கு ஏற்பட்டுவிட்டால் எளிதில் குணப்படுத்தவும் முடியாது. எனில் அந் நோயைக் கண்டிக்கத்தக்க மருந்தை இதுவரை உற்பத்தி செய்யாமைதான் காரணம்.

(தொடரும்)



# அதிரடி ஐயாத்துரை



* யாழ்ப்பாணக் கச்சேரியடி பழைய பூங்காவில் கொலுவீற்றிருக்கும் வடக்கின் அதிகாரத் தலைக்கும் வடக்கின் விக்கினவிநாயகனுக்கும் இடையிலான பனிப்போர் முற்றிவிட்டதாம். அதிகாரத்தலை அரச நிர்வாகத்தைக் கரைச்சுக் குடிச்சவர். விக்கினவிநாயகன் நிர்வாகத்தில அரிவரி. இவர்களுக்கிடையிலை 'பத்தி' வைக்கிறதுக்கு நாதன்களும், சீலன்களும், இந்திரன்களும், ஈஸ்வரன்களும் ஏட்டிக்குப்போட்டியாயெல்லோ நிக்கினம். விக்கினவிநாயகன் சொன்னதை ஆரம்பத்தில கேட்ட வடக்கின் அதிகாரத் தலை இப்ப மாறியெல்லோ நிக்கிது. உது எங்க போய் முடியப்போதோ தெரியாது எண்டு கீழ்மட்டத்திலிருந்து மேல் மட்டம்வரை ஒரே குசுகுசுப்புத்தானுங்க.

* வடக்கின் உயர்சபையின் எதிர்க்கட்சி ராசாவின் முழக்கத்தில மந்திரிமாற்ற பாடு அதோ கதிதான் பாருங்கோ. மனுசன் இப்பிடி கேள்வி கேட்கிறதுக்குப் பதிலாக எங்கட வேட்டியை உருவியிருக்கலாம் எண்டு டாக்குத்தர் மந்திரி புலம்பலோ புலம்பல். எல்லாம் உவங்கள் அதிகாரிகளாலதான் வந்தது. உவங்கள் செய்யிற கூத்துக்கு எங்களுக்கெல்லோ அடி விழுகுது. இதிலை வேற விக்கியர் சேம் சைட் கோல் அடிக்கிறார். இரண்டு வருடம் ஒருமாதிரி ஓட்டியாச்சு. மிச்சக் காலத்தையும் பெட்டியும், புட்டியுமா ஓட்டுவம் எண்டா எதிர்க்கட்சி ராசா விடுறார் இல்ல. நாங்களும் கெட்டிக்காரர்தான். ஆனா எதிர்க்கட்சி ராசா தவப்பிறவியோ?

* பட்ஜெட்டில அது வருது, இது வருது சம்பளம் கூடுது எண்டெல்லாம் கனவுகண்ட சனத்துக்கு பட்ஜெட் மழைக்குள்ள போட்ட வெடி மாதிரிப் போச்சுது பாருங்கோ. மூச்சுப்பிடிச்சு பட்ஜெட் மந்திரி வாசிக்க எம்.பிமார் நித்திரை கொண்ட ஸ்ரைல்தான் 2015ஆம் ஆண்டின் மிகச்சிறந்த காட்சி. குரக்கன் சால்வை வேற பட்ஜெட்டில ஒண்டும் இல்லை எண்டு சொல்லுது. இதுக்கிடையில பட்ஜெட் தோற்கடிக்கிறதுக்கு ஒரு கூட்டம் தயாராவதாக களனி பக்கம் இருந்து கதைவருதுங்க. இதை முறியடிக்க அந்தக் கூட்டத்தில இருந்து ஒரு சிலருக்கு மந்திரிப் பதவியள எறியிற பிளான் ஒண்டு ஓடித்திரிவதாகவும் கோட்டைப் பக்கம் இருந்து கதை வருது. முடிவு அதி உத்தமனார் திரியற்ற கையிலதான் எண்டு பரவலாக் கதை.

* முன்னாள் வடக்குக் கிழக்கு மாகாண மகாமந்திரி பெருமாளுடைய முகதாவில ஒரு நட்பு தினம் கொண்டாடப்பட்டது. இதில எதிரிகள் எல்லாம் நட்பா நிண்டவை. இதில பகிடி என்னெண்டால்... வந்தவை எல்லாம் ஒரு காலத்தில ஆயுதம் தூக்கிய ஆக்கள். உதெல்லாம் பழைய கதை. இப்ப புதிய அத்தியாயம் ஒண்டு எழுதுவம் எண்டு அந்தக் கூட்டத்தில வெளிக்கிட்டதுமாதிரிக்கிடக்கு. அதில கலந்துகொண்ட கூத்தாடி மாவிட்டபுரத்து மைந்தனுடைய மூஞ்சை சரியில்லை. ஏனெண்டு தெரியுமோ? ஏற்கனவே பதியப்படாத கூத்தமைப்பு ஒண்டு இருக்கு. உதுக்குப் போட்டியாக இன்னொரு கூத்தமைப்பு ஒண்டு வந்தா தங்கட மடியில எல்லோ கைவைக்கும் எண்டு நம்மட ஆயுதம் தூக்காத உயர்ந்த தலைவர் மாவிட்டபுரத்து மைந்தன் புலம்பினவராம்.

* வாசிற்றியில பொறியியல்பீடம் விடுதி ஆகியவற்றின் திறப்புவிழாவில வடக்கும் தெற்கும் இணைஞ்சு இருந்த காட்சியைக் காண ஒரு கண் என்ன ஓராயிரம் கண்வேண்டும். ஆரோ விதைக்க ஆரோ அறுவடை செய்யிறது மாதிரி கூத்தாடிகளும் யானைப் பெண்மணியும் திறக்கிறதுக்கு பட்டபாடு பெரும்பாடு. இதைப் பார்த்துக்கொண்டிருந்த வாசிற்றி சமூகம் ஒரே முகம் சுழிப்பு. உவங்கள் செத்தவீட்டையும் விடமாட்டாங்கள். கலியாணவீட்டையும் விடமாட்டாங்கள். உவங்கள்தான் ஒரு காலத்தில வீணைக் கட்சி தேவரை விமர்சிச்சவங்கள். கட்டிடம் வேண்டாம். உரிமைதான் வேணும் எண்டு. இப்ப தாங்கள் உரிமை கொண்டாடிக் கொண்டு கட்டிடம் திறக்கவந்திட்டாங்கள். ஏன் எண்டு தெரியுமே? கொழும்பு அமைச்சரைப் புடிச்சு வாசிற்றிக்குள்ள இருக்கிற வெற்றிடங்களுக்குத் தங்கடை ஆக்களைத் தள்ளத்தான்.

* ஒரு பொது அறிவுக் கேள்வி! இலங்கையின் மிகப் பெரிய குப்பை நகரம் எது? விடை என்னெண்டு சொல்லுங்க பாப்பம். சின்னக் குழந்தையே சொல்லும். 'யாழ். மாநகரம்' குப்பை கூழங்களால் நிரம்பி வழிஞ்சுகொண்டிருக்குது யாழ்.மாநகரம். முந்தியாவது அந்த மனிசி ஏதோ தன்னால முடிஞ்சத செய்தது. இப்ப நாறுது மாநகரம். மீண்டும் எப்படியாவது நகரத்தை நாறவிடாம தடுக்கிறதுக்கான 'யோகம்' யாருக்கு வரப்போகுது?

**இந்த வாரப் பொன்மொழி**

உங்களை ஒருவர் விமர்சித்தால் எரிச்சல் வருகிறதா? அப்படியெனில் அவ்விமர்சனம் சரியானது.

**சிறுகதை**

அப்ரார் ஏ.அஸீஸ்,
யாழ்ப்பாணம்

# அது ஒரு அழகிய காலம்



> “ஒருநாள் மதுரஸாவுக்கு ஓதப்போகாவிட்டால் ஓடிவந்துவிடும் அல்லாஹ்பிச்சை மதுரஸா முஸ்தபா லெப்பை காலத்தால் மறக்கமுடியாதவர். மாலையில் வீட்டில் வந்து ஓதித்தரும் “சவ்வரிசி அப்பா” என்று அன்போடு அழைக்கும் அந்த பாசம் என்றும் நெஞ்சைவிட்டு அகலாதது.”

உம்மா... உம்மா... வாங்கம்மா... நாம எல்லாம் என்ர பிறந்த இடம் நீர்கொழும்பு போய் என்ட ம்... ம்... என்று ஓவென்று ஒப்பாரி வைத்துக் கொண்டு அழுதுகொண்டிருக்கும் மகளுக்கு என்ன சாரா உங்களுக்கு பைத்தியமா பிடிச்சு போச்சு. அப்பாடா... லேசுப்பட்ட தூரமா... அங்க போய்... இங்கபோய்... போறவாற செலவு பத்தி நீங்க அறியமாட்டீங்க! நல்லாத்தான் நான் செல்லம்தந்து வளர்த்திட்டன். அதுதான் இந்தப் பிடிவாதம்.

ஆமா! நீங்க பிறந்து வளர்ந்த இடம் எங்கட ஊர் யாழ்ப்பாணம் என்று பெரிசா எங்கள கூட்டி வந்துட்டீங்க, உங்களுக்கு அது பெருமைதானே. அதாலதான் இப்படி சொல்லுறீங்கம்மா என்று கூறிக்கொண்டே தனது பொம்மையை தூக்கித் தோளில் சாய்த்துக்கொண்டு சாரா தனது விளையாட்டை தொடர அந்த கூழாமர நிழலில் உட்காந்தவளாக, அடுத்த வீட்டு அப்ரா, மப்ரா, சப்ராவை வரிசையாக பெயரைக்கூறி அழைத்ததைக் கேட்டும் பார்த்துக் கொண்டு இருந்த லைலாவுக்கு அன்று தன் மகள் சைனப்பும் இந்த மரநிழலுக்குத்தானே ஓடிப்போய் விளையாடுவார் என்று நினைத்ததும் கண்களில் இருந்து கண்ணீர் பொலபொலவென்று ஆறாய்ப் பொழிந்தது. மறுகணம் அந்த நாட்களுடன் அவள்....

ஆம்....!

அந்தக் காலம் வசந்தகாலம். இனிய உலாவரும் இன்பமான காலம்... தான் பிறந்த மண் யாழ்.இசை மீட்டி பெருமைப்பட்ட யாழ்ப்பாணம் தந்த தரவுகளுடன், தலைநிமிர்ந்து, தான் வளர்ந்ததைத மீட்டுகின்றாள்.

அந்த நாவலர் வீதியிலே கல்விகற்கும் கலைக்கூடம் இடப்பக்கமும், அல்லாபிச்சை பள்ளி முன்பக்கமும் அன்பான அயலவர்கள், தோழியர் குடும்பங்கள் வலப்பக்கமுமாக புடைசூழ தான் தன் வீட்டின் முன்பக்கம் கூழாமர நிழலையும், பலாமர நிழலையும் விளையாட்டிடமாக அமைத்து விளையாடுவது, ஆரம்ப வகுப்பிலிருந்து இறுதிவரை பெண்களுக்கென்றே தனித்துவமாக விளங்கிய யாழ். கதீஜா மஹா மகளிர் வித்தியாலயத்தில் அதிபர்கள், மர்ஹூமா கரீமையும் லைலா முஹிடீனையும் வழிகாட்டிகளாக்கி கற்றுக்கொண்டதையும் என்றுமே வாழ்வில் மறக்கமுடியாத ஆசிரியைகளாக, ஜுனைத்தா டீச்சர், ஹஸீனா டீச்சர், ஜெஸீலா டீச்சர், றாஹிலா டீச்சர், றஸீனா டீச்சர், சுபைத்தா டீச்சர் என்ற நீண்ட பட்டியலுடன் திருமதி கிருஸ்ணராஜா, திருமதி துரைரட்ணம், மிஸிஸ் கருணநாயக்க, மிஸிஸ் கருணதாஸ என்று இனமொழி வேறுபாடு இன்றிய அளப்பரிய பாசங்களுடன் அளவளாவி வளர்ந்தது என்றும் உள்ளத்தில் பசுமையாக... ஊற்றெடுத்து அதிலே... உயிரோடுள்ளவர்களுக்கான பிரார்த்திப்பையும் மறைந்துவிட்டவர்களுக்கான பிரார்த்திப்பையும், இறையிடம் முறையிட்டு இறைஞ்சியவளாக, தனது சிந்தனையின் சிறகை அகல விரித்து பறக்கவிட்டாள். அப்போது அவளது அன்புத் தந்தை முன்னே நின்று சிரிப்பதுபோல இருந்தது. அந்தக் காலகட்டத்திலே, தேநீர் கடை முதலாளி அன்சார் நானா என்றால் அனைவருக்கும் அன்பான மனிதர் என்ற நல்லிணக்கப்பாடு.

ஐந்து சந்தியிலே... மானிப்பாய் வீதியிலே... “ஒஸ்மானியா கபே” என்னும் தேநீர் கடைக்கு உரிமையாளராக எம் வாப்பா இருந்தது எங்களுக்கு ரொம்ப வசதியாக இருந்தது...!

எம்பாடசாலையில் இன்டர்வெல் விட்டபோது எனது தோழியர் புடைசூழ அவரிடம் சென்றால், அனைவரையும் அன்போடு ஆதரித்து தேநீர், பலகாரம் தந்து, என் தோழியர் ஆசைப்படும் பென்சில், கட்டர், ரேசர் என்று அவர்களுக்கு கொடுத்து வழியனுப்பி வைப்பார். நானும் பெருமிதத்தோடு என் தோழியரின் அன்பளிப்பில் மனம்குளிர்ந்து மீண்டும் பாடசாலை திரும்புவது. இன்று... நினைத்தாலும் பெருமையாக உள்ளது. ஒருநாள் மதுரஸாவுக்கு ஓதப்போகாவிட்டால் ஓடிவந்துவிடும் அல்லாஹ் பிச்சை மதுரஸா முஸ்தபா லெப்பை காலத்தால் மறக்கமுடியாதவர்.

மாலையில் வீட்டில் வந்து ஓதித்தரும் “சவ்வரிசி அப்பா” என்று அன்போடு அழைக்கும் அந்த பாசம் என்றும் நெஞ்சைவிட்டு அகலாததும், ஐதுரூஸ் மஹாம் பள்ளி முஅத்தின் மம்மது காக்காவும் மக்களுக்கான இறைஅழைப்பை இனிமைசெய்வதும் ஈண்டு நினைவுகொள்ளவேண்டியது! ஏதாவது எங்களுக்கு சின்னநோய் கண்டாலும் முதல் மனோகரா தியேட்டர் அருகில் இருக்கும் சண்முகலிங்கம் (பெயர் சரியாத புரியாது) காரணம் அந்த சின்னவயதிலே சொத்தி டொக்டர் என்று அன்பாக அழைப்பவர், அவர் அன்பாக பேசியே நோயை குணமாக்கிவிடுவார். இதேபோல் ராசாப் பரியாரி, மங்கையர்க்கரசி டொக்டர், கங்காதரன் டொக்டர் எல்லோரும் அன்று முஸ்லிம் மக்களுக்கு முழு அன்புடன் சேவையாற்றியது பசுமையாக நினைவலைகளில் நிழலாடுகின்றது. எங்க உம்மாவிடம் கேட்டால், யாழ். மரைக்காப் பரியாரியாரும், சுல்தான் முகிதீன் பரியாரியும் கைநாடி பிடித்து பார்த்து வைத்தியம் செய்வோர் என்பார்.

அது ஒரு காலம் -

நாவலர் வீதி, ஐதுரூஸ் மகாம் வீதி, மானிப்பாய் வீதி, மாவடி வீதி, கலீபா அப்துல் காதர் வீதி, ஜின்னா வீதி, ஏ.பி. லேன், கொள்ளொழுங்கை காதி அபூபக்கர் வீதி, முஸ்லிம் கல்லூரி வீதி, அராலி வீதி, புதிய சோனகத்தெரு என்று முஸ்லிம் குடும்பங்கள் செறிந்து வாழ்ந்த பகுதிகளை உறவுகளின் உணர்வுகளை மதித்துப் பழகி, திருமண நிகழ்வில் கலந்துபோய் வந்து ஒட்டிஉறவாடி ஒரு கூட்டுப்பறவையாக, வாழ்ந்த காலம் வெள்ளிடை மலை!

ஆண்களுடன் ஆரம்பித்த யாழ். ஒஸ்மானி கலைக்கூடம், பின்னாளில் உயர்தர பெண் மாணவியரையும் இணைத்துக்கொண்டு கல்வி வளர்ச்சியின் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது. காலவெள்ள கரைபுரண்டோடலின் ஊரின் பிரிவு அண்மிக்கும் வேளையில்தானோ....

(21 ஆம் பக்கம் பார்க்க...)




# மருத்துவம்

# சலரோகம் எனும் நீரிழிவு நோய்

## அதற்கான காரணிகளும் சிகிச்சைகளும்

வெளியீடு - யாழ். மருத்துவபீட மாணவர்கள்

### நீரிழிவு நோயின் முக்கிய அறிகுறிகள்




நீங்கள் அணியும் செருப்பை காலை நெருக்காத அளவுக்குத் தேர்ந்தெடுங்கள். கால் பகுதியில் தோல் கடினமாகி இருக்கிறதா என்று கவனியுங்கள். கையிலோ அல்லது காலிலோ சூடு தெரியாமலோ அல்லது வலிதெரியாமலோ இருந்தால் மருத்துவரை உடனே அணுகுங்கள். இரத்த அழுத்தை அடிக்கடி சரிபார்த்து கொள்ளுங்கள். வருடத்திற்கு ஒரு முறையாவது முழு உடற்சோதனை செய்துகொள்ளுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக மனம் துவண்டுபோகாதீர்கள். உங்கள் உடம்பை நீங்கள் ஆளக்கற்றுக் கொள்ளுங்கள்.

### 1. உணவு முறை

சப்பாத்தி அல்லது கோதுமை ரொட்டி, அரிசி, கேழ்வரகு போன்ற கார்போ-ஹைட் ரேட்கள் நிறைந்தவற்றைச் சாப்பிடுங்கள். இவைகளால் செலவுகளுமில்லை. நீங்கள் பசியுடன் இருந்தாலும் இனிப்புப் பதார்த்தங்கள் சாப்பிடும் பழக்கத்தை நிறுத்திவிடும்.

1. கொஞ்சமாகவும், நேரம் தவறாமலும் சாப்பிடவும். சாப்பாட்டு நேர இடைவெளியில் குறிப்பிட்ட சில பழங்கள் அல்லது காய்கறிகள் போன்ற சத்துள்ளவற்றைச் சாப்பிடவும்.

2. கொழுப்பு நீக்கப்பட்ட பால் மற்றும் தாவர எண்ணெய்யைப் பயன்படுத்தவும்.

3. சமையல் முறையை மாற்றி, வேகவைத்த, தீயில் வாட்டிய, நீராவியில் சமைத்த பதார்த்தங்களைச் சாப்பிடுங்கள்.

4. கொழுப்பு நிறைந்தவற்றை அதிகம் சாப்பிடக்கூடாது. கொழுப்பு பதார்த்தங்களான நெய், வெண்ணெய், பொரித்தவைகளான பூரி, சமோசா போன்றவற்றை தவிர்க்கவேண்டும். கொழுப்புமிக்க இறைச்சி, வெண்ணெய் மற்றும் பொரித்த உணவு வகைகளைத் தவிர்க்கவேண்டும்.

5. சீனி, சர்க்கரை, தேன், ஜாம், கேக்குகள் மற்றும் சொக்லேட்கள் போன்ற இனிப்புச்சத்து அதிகமுள்ள உணவு வகைகளைத் தவிர்க்கவேண்டும்.

6. மீன், கோழி, பாலாடைக்கட்டி மற்றும் ஸ்டார்ச் சத்துள்ள பதார்த்தங்களைக் குறைவாகச் சாப்பிடவேண்டும்.

### நீரிழிவு நோய் உள்ளவர்கள் விரதம் இருக்கலாமா?

நீரிழிவு நோய் கட்டுப்பாட்டிற்குள் இருந்த நீங்கள் விரதம் கடைப்பிடிக்க விரும்பினால் முதலில் உங்கள் மருத்துவரை சந்தித்து ஆலோசிக்கவும். அவர் உடல்நிலைக்கேற்ப உணவு முறைகளையும் மருந்துகளையும் தெரிவிக்கலாம்.

### நீரிழிவு நோய்க்கான உணவு வகைகள்

உங்கள் மருத்துவரிடம் உங்களுக்காக ஒரு உணவு அட்டவணையைத் தயார் செய்யச் சொல்லுங்கள். அது திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான சலிப்படையச் செய்யும்வகையில் இருக்காது. ஒருவருடைய தேவைக்கேற்பவும் விருப்பத்திற்கேற்பவும் பல மாற்று உணவு வகைகளை நீங்கள் சேர்த்துக் கொள்ளமுடியும்.

### மாற்று உணவு வகைகள் என்றால் என்ன?

ஆகாரத்தில் மாற்றங்கள் எளிதாக இருக்கும் வண்ணம் உருவாக்கப்பட்ட சமபோசாக்கு இருக்கும் மற்ற உணவு வகைகள்தான் மாற்று உணவு வகை. ஓர் உணவு வகைக்குப் பதிலாக கீழ்கண்ட 7 மாற்று உணவு வகைளை மாற்றி மாற்றி சாப்பிடலாம்.

1. காய்கறிகள்.
2. கார்போஹைட்ரேட்ஸ்.
3. பழங்கள்.
4. இறைச்சி, மீன் மற்றும் பருப்புகள்.
5. பால் மற்றும் பால் தயாரிப்புகள்.
6. தானியங்கள்.
7. எண்ணெய், கொழுப்பு மற்றும் கொட்டை வகைகள்.

### 2. உடற்பயிற்சி

நீரிழிவு நோய் உள்ளவர்கள் உடற்பயிற்சி செய்வதால்,

1. இரத்தத்தில் உள்ள இனிப்பின் அளவைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

2. எடையைக் கட்டுக்குள் வைக்க உதவுகிறது.

3. நல்ல உடல்நலத்துடன் இருக்கிறோம் என்ற உணர்வை அதிகரிக்கிறது.

4. உங்கள் உடலில் இன்சுலினுக்கு உகந்தநிலையை அதிகரிக்கிறது.

#### உடற்பயிற்சியில் கவனிக்கவேண்டியவை

உங்கள் உடலுக்கேற்ற பயிற்சியைப் பற்றி முதலில் உங்கள் மருத்துவரிடம் கலந்தாலோசித்துக்கொள்வது நல்லது.

1. கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பித்து தவறாமல் செய்யவும்.

2. மிதமான ஓட்டம், நீச்சல் போன்ற திடமான விளையாட்டுக்களில் பங்கெடுத்துக் கொள்ளவும்.

3. காலி வயிற்றுடன் உடற்பயிற்சி செய்யக்கூடாது.

4. இன்சுலின் ஊசி போட்டுக்கொண்ட உடனேயே உடற்பயிற்சி செய்வதைத் தவிர்க்கவேண்டும்.

5. இரத்தத்தில் இனிப்பின் அளவு அதிகமானதாக இருந்தால் உடற்பயிற்சி செய்யக்கூடாது. நீரிழிவு கட்டுக்குள் இல்லாதபோதும் உடற்பயிற்சி செய்யக் கூடாது.

### 3. மாத்திரைகள்

சிலசமயங்களில், இரத்தத்தில் உள்ள அதிக இனிப்பைக் குறைக்க உணவுக் கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சி மட்டும் போதாது. இனிப்பின் அளவை இரத்தத்தில் குறைக்கும் மாத்திரைகள் எடுத்துக் கொள்ளலாம். இது இரத்தத்தில் இனிப்பின் அளவு குறைய உதவும்.

சில மாத்திரைகள் இன்சுலின் உற்பத்தியை அதிகரிக்க, கணையத்தைத் தூண்டிவிடுகிறது. மாத்திரைகள் சிறப்பாகச் செயல்புரிய, இன்சுலின் சுரக்கும் அளவிற்கு நோயாளியின் கணையம் நல்ல நிலையில் இருக்கவேண்டும்.

சில மாத்திரைகள், செல்லினுள் இன்சுலின் நுழைந்து செயல்புரிய உதவுகிறது. சில மாத்திரைகள் குடலிலிருந்து குளுக்கோஸ் இரத்தத்தில் கலப்பதைக் குறைக்க உதவுகின்றன.

### 4. இன்சுலின்

நீரிழிவு முற்றினால், பல நீரிழிவு நோயாளிகளுக்கு இன்சுலின் தவிர்க்க இயலாததாகிவிடுகிறது. உங்கள் மருத்துவர் உங்களுக்கு இன்சுலின் போட்டுக் கொள்ள பரிந்துரை செய்துவிட்டால் இன்சுலின் போட்டுக்கொள்ளத் தொடங்குவது நல்லது.

#### இன்சுலின் எப்படி செயலாற்றுகிறது?

இரைப்பைக்குப் பின்னால் உள்ள உறுப்பான கணையத்திலிருந்து உற்பத்தியாகும் ஒரு ஹோர்மோன்தான் இன்சுலின். இன்சுலின் சுரக்காமல்போனால் அல்லது குறைவாகப்போனால் அல்லது செயற்படமுடியாமல் போனால் செல்களுக்குள் இனிப்பு (குளுக்கோஸ்) செல்லமுடியாது. இரத்தத்திலேயே அதிக அளவில் தங்கிவிடும்.
எனவே நீரிழிவு முற்றினால், இன்சுலின் தவிர்க்க இயலாததாகிவிடுகிறது. இன்சுலின் ஊசி போட்டுக்கொண்ட பிறகு இரத்த ஓட்டத்தில் கலந்து, உடல்முழுவதும் பரவுகிறது. செல்லின் மேற்பரப்பில் படர்ந்து செல்லினுள் இனிப்பு புக வழிசெய்கிறது.

#### இன்சுலினின் வகைகள்

இன்சுலின் இனம், செயற்பாடு மற்றும் அதன் சக்தியை வைத்து பிரிக்கப்பட்டுள்ளது.

இன்சுலின் அதன் மூலத்தைப் பொறுத்து ஹியூமன், போர்சைன், போவைன் போன்ற வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஹியூமன் இன்சுலின் மரபியல்மூலமாக அல்லது செமி சிந்தெடிக் முறையில் தயாரிக்கப்படுகிறது. போர்சைன், போவைன் இன்சுலின் முறையே பன்றி மற்றும் மாடுகளின் கணையங்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

இன்சுலின் செயற்படும் கால அளவு, அதன் செயற்படும் திறன்களைக் கொண்டும் பல வகைகளாகப் பிரிக்கப்பட்டு உள்ளது.

#### இன்சுலின் ஊசி எப்படி தாமாகவே போட்டுக்கொள்வது?

1. முதலில் உங்கள் கைகளை நன்றாகக் கழுவிச் சுத்தம்செய்து கொள்ளவும்.

2. உங்கள் இன்சுலின் சக்திநிலைக்கு ஏற்ற சிரின்ஜைத் தேர்வுசெய்து கொள்ளுங்கள். அதாவது 40 ஐ.யூ.இன்சுலினுக்கு 40 ஐ.யூ. சிரின்ஜ். நீங்கள் கலங்கலான இன்சுலினைப் பயன்படுத்தினால், உள்ளே இருக்கும் வண்டல்முழுவதும் நன்கு கலக்கும் வரையில் போத்தலைக் கவிழ்த்துக் குலுக்கவும்.

3. இன்சுலின் செலுத்தவேண்டிய அளவுவரை சிரின்ஜ் மூலம் போத்தலை நேராகப் பிடித்து காற்றை மெதுவாக உள்ளே செலுத்தவும்.

4. தேவையான அளவு இன்சுலினை இழுக்கவும். காற்றுக் குமிழிகளைப் போக்க சிரின்ஜை மெதுவாகத் தட்டவும்.

5. ஊசி போடவேண்டிய இடத்தில் உள்ள தோலைப்பிடித்து அகலமான மடிப்பினுள் தோலின் அடியில் உள்ள அடுத்த திசுவிற்கு எதிராக 90 டிகிரி கோணத்தில் ஊசியைக் குத்தவும்.

6. இன்சுலினை மெதுவாகச் செலுத்தவும் ஊசியை வெளியே எடுக்கும் பொழுது, அந்த இடத்தில் வேறொரு விரலால் அழுத்திக்கொண்டே எடுக்கவும்.

7. தோலின் அடியில் உள்ள திசுவில் மாறுதல் வராமல் இருக்க ஊசிபோடும் இடத்தை மாற்றிக்கொண்டே இருக்க வேண்டியது அவசியம்.

### நினைவில் வைத்திருக்க வேண்டியவை

1. நீங்கள் நீரிழிவைப் பற்றி அறிந்து, புரிந்து சமாளிக்க மனம் வைத்தால் போதும். மற்றவரைப்போல ஆரோக்கியமாக, உற்சாகமிக்க, மனம் நிறைந்த வாழ்க்கை வாழலாம்.

2. உங்கள் நோயைக் கட்டுப்படுத்த வேண்டிய முக்கிய நபர் நீங்கள்தான். மருத்துவரும், மற்றவர்களும் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள் அறிவுரை வழங்குவார்கள்.

3. நீங்கள் நோயுற்றிருந்தாலும் இன்சுலினைத் தொடர்ந்து எடுத்துக் கொள்ளுங்கள். உங்களால் சாப்பிட முடியாதபோது திரவநிலை உணவை எடுத்துக்கொள்ளுங்கள்.

4. சிகிச்சை எடுத்துக்கொண்டால் மட்டும்போதாது. சிகிச்சையின் முடிவு-களைத் தவறாமல் குறித்து வைத்துக் கொண்டால்தான் நீரிழிவை சிறப்பாகச் சமாளிக்கமுடியும்.

5. தவறாமல் பரிசோதனைகள் செய்வதும், கவனமாகக் குறிப்பெடுத்துக் கொள்வதும் மிக முக்கியம்.

6. ஹைப்போக்ளைசீமியாவை உடனடியாக சமாளிக்க கையில் குளுக்கோஸ், இனிப்புபோன்ற இனிப்புகளை வைத்துக் கொள்ளுங்கள்.

7. உங்கள் கைகள், பாதங்கள், கண்கள், பற்கள் மற்றும் சருமத்தை நன்கு கவனித்துக்கொள்ளவும்.

சரிவிகித உணவு, தவறாத உடற்பயிற்சி, மருந்துகள் மற்றும் நடக்கும் என்ற நம்பிக்கை போன்றவற்றால், நீரிழிவு இருந்தாலும் உங்கள் இலக்கை அடைய உதவும்.

### நீரிழிவு நோயாளிகள் உண்ணக் கூடிய பழங்கள்!

உலகில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகம் உள்ளது. இத்தகைய நீரிழிவு நோய்வருவதற்கு காரணம், ரத்தத்தில் உள்ள குளுக்கோசின் அளவு அதிகமாக இருப்பதுதான். மேலும் இந்த நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள், எதை சாப்பிடுவதாக இருந்தாலும் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

இல்லாவிட்டால், இரத்தத்தில் உள்ள குளுக்கோசின் அளவு அதிகரித்து, உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்திவிடும். ஆனால் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஒருசில பழங்கள்ள சாப்பிடுவதன் மூலம் இரத்தத்தில் உள்ள இனிப்பின் அளவை கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ளலாம்.

ஆய்வு ஒன்றிலும், நீரிழிவு நோயாளிகள், தினமும் 45 பழங்களை சாப்பிடுவதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம் என்று சொல்கிறது. மேலும் அந்த ஆய்வில் நீரிழிவு நோயாளிகள் முற்றிலும் குளுக்கோஸ் பொருளைத் தவிர்க்கக்கூடாது.

(தொடர்ச்சி 21ஆம் பக்கம்)




# விளக்கு மட்டுமா சிவப்பு?

## சொல்லத்தான் நினைக்கிறேன்

திங்களை விழுங்கிவிடும் பாம்பு. எங்களை விழுங்கிவிடக் கூடாதா? நாங்கள் ஓயாமல் அழுதபோது "என்னம்மா?" என்று கேட்டுக்கொண்டே தோட்டப்புறத்திலிருந்து உள்ளே நுழைந்தாள் சுலோசனா அக்கா.

"மகளே, என் ராஜாத்தி! அம்மா தாயே! எங்கேம்மா போனே?" என்று புலம்பியபடியே வந்து சுலோசனா அக்காவின் கன்னத்தில் மாறி மாறி முத்தமிட்டாள் என் தாய்.

"இல்லம்மா இல்லே உங்களுக்குப் பாரமா இருக்கவேண்டாம்னு சாகப் போனேம்மா. தம்பி, தங்கச்சிகள் ஞாபகம் வந்து கிணத்தடியிலேயே உட்கார்ந்திட்டேம்மா!" என்று அழுதாள் சுலோசனா அக்கா.

என் அப்பா ஆவேசம் வந்தவராக நீ ஏம்மா சாகணும்? அற்புதமான மாப்பிள்ளை கிடைப்பான். ராஜா மாதிரி மாப்பிள்ளை வருவான். நான் பண்ணியிருக்கிற தருமத்துக்கு அந்த முருகனே சம்பந்தம்பேசி முடிப்பான். இதுவரை எனக்கு வந்த கஷ்டமெல்லாம் நல்லதுக்குத்தான்னு நினைச்சுக்க. நல்லவங்க அழுதேதான் தீரணுமின்னா இதுவரை எல்லாக் கோவில்லேயும் இடி விழுந்திருக்கும்மா. இடி விழுந்திருக்கும்" என்றார் என் தந்தை.

எங்கள் கவலைகள் மறைந்தன. ஒரு நிம்மதி ஏற்பட்டது. புது சந்தோஷம் வந்த மாதிரி இருந்தது.

கைத்தாங்கலாக அக்காவை அணைத்தபடி உட்காரவைத்தாள் என் தாய்.

கண்ணனும், திருப்பதியும் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு, "எங்களைவிட்டுப் போயிடாதே அக்கா" என்று அழுதார்கள்.

அவர்கள் அழுவதைப் பார்த்து எல்லோரும் அழுதோம்' ஆனால் இந்த அழுகை பயமில்லாத அழுகையாக இருந்தது.

அன்று இரவுபூராவும் நான் தூங்கவில்லை.

நானொரு புறமும் சாவித்திரி அக்கா ஒருபுறமுமாக சுலோசனா அக்காவைக் கட்டிப்பிடித்துப் படுத்துக்கொண்டோம்.

அந்தச் சின்ன வயதிலும் நான் எவ்வளவு சிந்தித்திருப்பேன் தெரியுமா? இது இறைவன் எனக்களித்த வரம். நம் குடும்பத்தை நாம் எப்படியாவது காப்பற்ற வேண்டும்" என்று ஏனோ எனக்குத் தோன்றியது.

எப்படிக் காப்பாற்றுவது?

நமது சமூகத்தில் ஒரு பெண் எவ்வளவுதான் படித்தவளாயிருந்தாலும், உத்தியோகம் பார்ப்பவளாயிருந்தாலும், மிஞ்சி, மிஞ்சிப் போனால் தன்னையும் தன் பிள்ளைகளையும் காப்பாற்றிக் கொள்ளமுடியுமே தவிர உற்றார், உறவினரைக் காப்பாற்ற எப்படி முடியும்?

ஒரு மடத்தனமான ஆசை. குருட்டுத்தனமான தைரியம். அதிலே ஒரு நிம்மதி.

பணத்தைச் சுற்றியே உருண்டு கொண்டிருக்கும் சமூக வாழ்க்கையில் நளாயினியும், அனுசுயாவும் மீண்டும் பிறந்தால்கூட நாய்படாத பாடுபடுவார்கள். இதில் நான் யார்?

ஆனால், சுகமான கற்பனையை வளர்த்துக்கொள்வது அந்தநேரத்தில் ஒரு நிம்மதி.



பொழுது விடிந்தபோது நான் பால்கறக்கப் புறப்பட்டேன். எங்கள் வீட்டில் இரண்டு நல்ல பசு மாடுகள் உண்டு. தினமும் காலையில் அக்காதான் பால் கறப்பது வழக்கம். அன்று நான் கறக்கச் சென்றேன்.

சேர், உங்களுக்குத் தெரியாததல்ல. வங்காளத்து இந்துக் குடும்பங்களில் பெண்ணுக்கே பால் கறப்பவள் என்றுதான் பெயராம். "அவள் பாலை மட்டுமா கறக்கிறாள்? வயது வந்து தகப்பனின் பணத்தையும் கறந்துவிடுகிறாள்" என்று சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கிறார்.

என் தந்தை பசுப்போன்றவர்தான். ஆனால் கறப்பதற்கு அவரிடம் பணம் இல்லை. அது சுரக்கும்போது கறக்கும் வயது என் அக்காவுக்கு வரவில்லை.

நான் பால் கறந்தேன்.வழக்கத்திற்கு அதிகமாக அன்று அந்தப் பசுவின் மடியில் பாலிருந்தது. அந்தப் பால் செம்பைக் கையில் ஏந்தியபடி நடந்துவந்தபோது தோட்டத்து மகிழ மரத்திலிருந்து ஒரு பூ உதிர்ந்து அந்தப் பாலில் விழுந்தது. ஏதோ நல்ல சகுனம் என்று நினைத்தேன். பூனை ஒன்று இடதுபுறமாக ஓடிற்று. அது மேலும் ஒரு நல்ல குணம் அல்லவா?

விநாயகருக்கு பூஜை செய்ய அப்பா புறப்பட்டுச்சென்றார். அங்கே அவர் பூக்கட்டி வைத்துப் பார்த்தாராம். "மூன்று நாட்களுக்குள் பெண்ணுக்குத் திருமணப் பேச்சு முடிந்துவிடும்" என்று குருக்கள் வேறு சொன்னாராம். பூக்கட்டி வைத்ததிலும் நல்ல சேதிவந்ததாம்.

ஒருவருக்கொருவர் நல்ல சேதி சொல்லிக் கொள்வதில்தான் எவ்வளவு ஆறுதல்!

மறுநாளைக்கு மறுநாள் எங்கள் வீட்டுவாசலில் ஒரு வண்டி வந்து நின்றது. "இல்லாத வீட்டைத் தேடி யார் வரப்போகிறார்கள்?" என்ற ஏக்கத்தோடுதான் நான் வெளியே வந்து பார்த்தேன்.

எங்கள் தூரத்து உறவினர் ஒருவரும், அவரது மனைவியும் வண்டியிலிருந்து இறங்கினார்கள். அவர் பெயர் மோகனரங்கம். அந்த அத்தை பெயர் அபிராமி.

அவர்கள் திடீரென்று எங்கள் வீட்டிற்கு வருவானேன்?

அக்கா திருமண விஷயமாகத்தான் இருக்கும் என்று நான் எண்ணினேன். அப்படியே இருக்கவேண்டும் என்றும் ஆண்டவனை வேண்டிக்கொண்டேன்.

அப்பாவும், அம்மாவும் அவர்களை வரவேற்றார்கள். சகோதர்கள் ஜமுக்காளம் விரித்தார்கள்.

வந்தவர்கள் அமர்ந்த கையோடு என் தாயைப்பார்த்து "கமலாம்பா, நாங்க எதற்காக வந்திருக்கிறம் தெரியுதில்லே. உன் பொண்ணு கலியாண விஷயமாகத்தான் வந்திருக்கிறோம்' என்றார்கள்.

உடனே நாங்கள் அவர்களை விழுந்து விழுந்து உபசரித்தோம்.

"துன்பப்பட்டவர்கள், தங்கள் சந்தர்ப்பங்களுக்காகக் காத்திருங்கள்" என்று நமது வேதங்கள் சொல்லுவது பொய்யல்ல சேர்!

(விளக்கு எரியும்)

---

**வாரமொரு சிந்தனை**

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# வளர்ச்சி - மாற்றம்

மனிதகுலத்தின் வாழ்க்கை ஓயாத மாற்றத்திற்குரியது. மாற்றத்திற்குக் காரணம் வளர்ச்சி. மாற்றத்திற்கு உந்துசக்தி - மூன்று, காலத்தின் பரிணாம வளர்ச்சி, பிறிதொன்று மாற்றம். மாற்றங்கள் வளர்ச்சிக்குத் துணை, அரண். எந்த ஒன்றும் தேங்கிவிட்டால் அழிந்துவிடும், பயனற்றுப்போகும்.

நாள்தோறும் ஊற்றெடுக்கும் கிணறுகளின் தண்ணீரே பயன் படுகிறது. இடையீடிலுள்ளது ஓடிக்கொண்டேயிருக்கிற ஆறே ஜீவநதி; மனிதகுலத்துக்குப் பயன்படுவது. புண்ணிய தீர்த்தங் களைக்கூட இடையீடில்லாது ஓடிக் கொண்டேயிருக்கின்ற ஆறுகளே அங்கீகரிக்கப்படுகின்றன.

தேங்குவன எல்லாம் குட்டை. குட்டையில் கிடைக்கும் தண்ணீர் பயன்படாது. பயன்படாதது மட்டுமன்றி நோயும் தரும். ஆதலால் மனிதகுலம் வளர்ச்சியடையவேண்டும். வளர்ச்சி மாற்றத்தை உருவாக்கும்.

மனிதகுலம், மாற்றங்களை விரும்பினால் வளர்ச்சி பொருந்திய வாழ்க்கை முறையை தெரிதல் வேண்டும். இந்த உலகம் எப்படி இருந்தது என்று எவரும் கூறலாம். ஆனால், இந்த உலகம் எப்படி இருக்கவேண்டும் என்று எண்ணுகின்ற, சொல்லுகின்ற, அமைகின்ற திசையில் மக்கள் செல்லவேண்டும்.

வளரும் சமுதாயத்தில் பரிணாம வளர்ச்சியில் தோன்றுவதே புதுமை. புதுமை செயற்கையன்று, இயல்பாக வாழ்க்கைப் போக்கில் - பரிணாம வளர்ச்சியில் தோன்றும் புதுமைகள், விவாதங்களைக் கடந்தவை. "முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றிய தாய்" என்றார் மாணிக்கவாசகர்.

பின்னைப் புதுமை, இனி எதிர்வரும் புதுமை. நம்முடைய சமுதாயத்தில் புதுமையை வரவேற்கும் இயல்பில்லாத வர்கள் பல ஆயிரம் பேர்கள் உண்டு. அவர்களையும் கடந்துதான் புதுமை வளர்ந்துவருகிறது ; இனியும் வளரும். ஆனாலும் நாட்டில் மாற்றங்கள் குறைவு.

நமக்கும் சரி, அடுத்த தலைமுறை யினருக்கும் சரி, எதிர்கால நம்பிக்கை வேண்டும். வளர்ச்சியுடன்கூடிய மாறுதல் தேவை. சென்ற காலத்தைவிட எதிர்காலம் விழுமிய சிறப்புடையதாக இருக்கவேண்டும் என்பது சேக்கிழார் திருவுள்ளம். "இனி எதிர்காலத்தின் சிறப்பும்" என்பார் சேக்கிழார். பாவேந்தன் பாரதிதாசன் "புதியதோர் உலகம் செய்வோம்" என்றான்.

ஆதலால், இப்போது நாம் சென்று கொண்டிருக்கிற நிறைவான வளர்ச்சியும் மாற்றமும் இல்லாத திசையில் தொடர்ந்து செல்லக்கூடாது. புறத்தோற்றத்தில் (கடை அலங்காரம்) மட்டுமே புதுமை காட்டும் போக்கும் அறவே கூடாது. மனிதனே மாறவேண்டும். மனிதகுலம் மாறவேண்டும். அன்றாடம், வளர்ச்சியும் மாற்றமும் பொருந்திய திசையில் செல்லவேண்டும்.

வளர்ச்சி - மாற்றம் என்றால் என்ன? மனிதனின் அறிவு வளரவேண்டும். வளர்ந்துவரும் உலகியலின், மானுட வியலில் எத்தனை எத்தனையோ அறைகூவல்கள் தோன்றுகின்றன. அவற்றைத் தாக்குப்பிடித்து நின்று போராடி முன்னேறவேண்டும்.


அறிவின் வளர்ச்சிக்குப் புத்தம் புதிய நூல்களைக் கற்கவேண்டும். இலக்கியங்கள், புராணங்கள் மிகப் பழமையானவைகளைக் கற்க வேண்டும். அப்படிக் கற்பது வாழ்நிலையின் அடித்தளத்தை வலுப்படுத்தும் - வேர்கள் மரத்தை வலுப்படுத்துபோல!

கலாசாரம், பண்பாடு முதலியன நாடுகள் தோறும் மாறும்! இவை தலை முறை தலைமுறையாக வருவன. இப்படி வழி வழிவரும் கலாசாரம், பண்பாடு ஆகியன வளரும். புதிய சமுதாயத்திற்கு மாறுபடாது சென்ற கால வரலாற்றில் மாறுபட்டதில்லை.

(தொடரும்)

(19 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

# சலரோகம் எனும் நீரிழிவு நோய்




தினமும் ஒரு குறிப்பிட்ட அளவில் இனிப்பை உடலில் சேர்க்கவேண்டும் என்றும், அதிலும் பழங்களில் உள்ள இனிப்பை நாள்தோறும் அளவாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் சொல்கிறது. அதாவது நம்முன்னோர்கள் சொல்வதுபோல், அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சுதான்.

எனவே நீரிழிவு நோயாளிகள் ஒருசில பழங்களை சாப்பிடுவதன்மூலம், இரத்தத்தில் உள்ள இனிப்பின் அளவில் பாதிப்பை ஏற்படுத்தாதவாறு பார்த்துக் கொள்ளலாம். இப்போது நீரிழிவு நோயாளிகள் பயமின்றி நிம்மதியாக சாட்'ʼ ʼி ்கூடிய சில பழங்களைப் பார்ப்போம்.

கிவி பழம் :

நீரிழிவு நோயாளிகளுக்கான ஒரு சிறந்த பழம். ஏனெனில் இது ரத்தத்தில் உள்ள இனிப்பின் அளவை குறைக்கும்.

செர்ரி :

செர்ரி பழங்களில் கிளை சீமிக் இன்டெக்ஸின் அளவு 20 மற்றும் அதற்கு குறைவாகத்தான் இருக்கும். எனவே இதனை அவ்வப்போது அளவாக சாப்பிட்டு வந்தால், இரத்தத்தில் உள்ள இனிப்பின் அளவைக் கட்டுப்பாட்டுடன் வைக்கலாம்.

கொய்யா :

கொய்யாப்பழத்தை நீரிழிவு நோயாளிகள் சாப்பிடுவது மிகவும் நல்லது. மேலும் இது மலச்சிக்கல் பிரச்சினையைப் போக்கும். அதுமட்டுமின்றி, கொய்யாப்பழத்தில் விற்றமின் "ஏ" மற்றும் சில அதிகளவிலும், கிளைசீமிக் இன்டெக்ஸ் குறைவாகவும் நிறைந்துள்ளது.

நாவல் பழம் :

கிராமப்பகுதிகளில் அதிகம் கிடைக்கும் இந்த பழம், நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்ற பழம். ஏனெனில் இதனை நீரிழிவு நோயாளிகள் சாப்பிட்டால், இரத்தத்தில் உள்ள இனிப்பின் அளவு விரைவில் கட்டுப்படும். அதுமட்டுமின்றி, இதன் கொட்டையை பொடிசெய்து சாப்பிட்டால், இன்னும் சிறந்த பலனைக் காணமுடியும்.

பீச் :

மிகவும் சுவையான பீச் பழத்திலும் கிளைசீமிக் இன்டெக்ஸ் குறைவாக உள்ளது. எனவே இந்த பழத்தையும் தைரியமாக நீரிழிவு நோயாளிகள் சாப்பிடலாம்.

பெர்ரிப் பழங்கள் :

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருந்தால், எந்த ஒரு பயமும் இன்றி பெர்ரிப் பழங்களான ஸ்ட்ராபெர்ரி, ராஸ்பெர்ரி போன்றவற்றை சாப்பிடலாம். ஆனால் அளவாக சாப்பிடுவது மிகவும் சிறந்தது.

அப்பிள்: தினமும் ஒரு அப்பிள் சாப்பிட்டால் ஆரோக்கியமாக இருக்கலாம் என்று மருத்துவர்கள் சொல்வார்கள். இது நீரிழிவு நோயாளிகளுக்கும்தான். ஏனெனில் அப்பிள் சாப்பிட்டால், அதில் உள்ள அன்டிஒக்ஸிடன்ட் கெட்ட கொலஸ்ட்ரோலை குறைப்பதோடு, இது செரிமான மண்டலம், நோயெதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

அன்னாசி :

அன்னாசிப் பழமும் இனிப்பு நோயாளிகளுக்கான பழம்தான். இந்த பழத்தில் அன்டிவைரல் மற்றும் நோயெதிர்ப்பு அழற்சி தன்மை அதிகம் இருக்கிறது.

பேரிக்காய் :

நீரிழிவு நோய் உள்ளதா? அப்படியெனில் பேரிக்காயை சாப்பிடுங்கள். ஏனென்றால், பேரிக்காயில் விற்றமின்கள் மற்றும் நார்ச்சத்து அதிகம் உள்ளது. இது இரத்தத்தில் உள்ள இனிப்பின் அளவை கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ள உதவும்.

பப்பாளி :

பப்பாளியும் நீரிழிவு நோயாளிகளுக்கு சிறந்தது. ஏனெனில் இதில் விற்றமின்கள் மற்றும் மற்ற கனிமச்சத்துக்கள் அதிகம் நிறைந்துள்ளன.

அத்திப்பழம் :

அத்திப்பழத்தில் நார்ச்சத்து அதிகம் இருப்பதோடு, இன்சுலின் சுரப்பை சீராக வைத்துக்கொள்ள உதவும். அதிலும் இதனை தினமும் அளவாக சாப்பிடுவது மிகவும் சிறந்தது.

ஒரேஞ்சு :

சிட்ரஸ் பழங்களுள் ஒன்றான ஒரேஞ்சு பழத்தில் விற்றமின் - சி இருப்பதால், இந்த பழத்தை தினந்தோறும் அளவாக சாப்பிட்டு வந்தால், நோயெதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

தர்ப்பூசணி :

தர்ப்பூசணியில் கிளைசீமிக் இன்டெக்ஸ் அதிகம் உள்ளது. எனவே இதனை அளவுக்கு மிகவும் குறைவாக எடுத்துக் கொள்வதால், உடலுக்கு நீர்ச்சத்தானது கிடைத்து, உடல் வறட்சியானது தடுக்கப்படும்.

கிரேப் ஃபுருட் :

ஒரேஞ்சுப் பழத்தைப் போன்றே காணப்படும் இந்த பழம் தான் கிரேப் ஃபுருட். இது நீரிழிவு நோயாளிகளின் உடலில் உள்ள இனிப்பின் அளவை கட்டுப்பாட்டுடன் வைத்துக்கொள்ளும்.

மாதுளை :

அழகான சிவப்பு நிறத்தில் உள்ள மணிகளைக்கொண்ட மாதுளையும் நீரிழிவு நோயாளிகள் தைரியமாக சாப்பிடக் கூடிய பழங்களுள் ஒன்று. ஏனெனில் இது இரத்தத்தில் உள்ள இனிப்பின் அளவை குறைக்க பெரிதும் உதவியாக இருக்கும்.

பலாப்பழம் :

பலாப்பழம் மிகவும் இனிப்பாக இருப்பதால், இதனை நீரிழிவு நோயாளிகள் அறவே தொடக்கூடாது என்று நினைக்கக்கூடாது. ஏனென்றால், இந்த பழம் நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் சிறந்த, இன்சுலின் சுரப்பை அதிகரிக்கும் பழங்களுள் ஒன்றாகும்.

நெல்லிக்காய் :

கசப்பு தன்மைக்கொண்ட இந்த நெல்லிக்காய் இனிப்பின் நோயாளிகளுக்கு மிகவும் சிறப்பான பழமாகும். இதில் விற்றமின் - சி மற்றும் நார்ச்சத்து அதிகம் இருப்பதால், இதனை தினமும் உணவில் சேர்த்து வருவது மிகவும் நல்லது.

முலாம்பழம் :

முலாம் பழத்திலும் தர்ப்பூசணியைப் போன்றே கிளைசீமிக் இன்டெக்ஸ் அதிகம் உள்ளது. ஆனால் இதில் நல்ல அளவில் நார்ச்சத்து நிரம்பியிருப்பதால், அளவாக சாப்பிடுவது சிறந்த பலனைத் தரும்.

நட்சத்திரப் பழம் :

இந்த பழமும் நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்ற, இரத்த இனிப்பின் அளவைக் கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ள உதவும் பழமாகும். ஆனால் அளவாக சாப்பிடவேண்டும்.

வெள்ளை கொய்யா :

நாவல் பழத்தைப் போல் இது மிகவும் பிரபலமாக இல்லாவிட்டாலும், இது நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் சிறப்பான ஒரு பழம். இதனை நீரிழிவு நோயாளிகள், தினமும் சாப்பிட்டுவந்தால், இரத்தத்தில் உள்ள இனிப்பின் அளவை கட்டுப்பாட்டுடன் வைக்கலாம்.

மேலும் இதில் நார்ச்சத்து அதிகம் உள்ளது. நீரிழிவு நோய் என்பது பரம்பரை நோயா அல்லது பருவத்தில் வரும் நோயா என்ற பட்டிமன்றம் நடத்தாமல் வந்த பின்னர் என்ன செய்யவேண்டும் என்று யோசியுங்கள்.

உணவு கட்டுப்பாட்டை சரியாக கடைப்பிடித்து வந்தால் எல்லா நோயுமே நம்மைவிட்டு அகன்றுவிடும். அதிலும் குறிப்பாக மேற்கண்ட பழவகைகளை மட்டும் உண்டு வாழ்வை மட்டும் இனிப்பாக்குவோம்.

(முற்றும்)

---

(18 ஆம் பக்கம் தொடர்ச்சி...)




யாழ்.ஒஸ்மானியா பதியுதீன் மண்டபத்தில் அன்றைய யாழ். பல்கலைக்கழக வேந்தர் C.மௌனகுரு அவர்கள் தலைமையில் நிகழ்த்தப்பட்ட மருதாணி நூல் வெளியீட்டு விழாவையும் அதில் உள்வாங்கப்பட்ட ஜினூஸ் சுல்தான், மர்ஹூம் பாயிஸ் அன்சார், ஜெஸ்மின் அன்சார் பௌசியா கே.முஹமட் என்றும் மறக்கமுடியாத நிகழ்வாக, அந்த 23.10.1988 என்றுமே நிலைத்து நீடித்த நாளாக இந்த யாழ். ஒஸ்மானியா கல்லூரி வெள்ளி விழாவதை (இருபத்தைந்தாவது ஆண்டு) கொண்டாட அன்றைய நாளில் எனது திருமணமும் இனிது நிறைவேற்றப்பட்டது. நெஞ்சைவிட்டகலாத ஓவியமாக நிலைத்திருக்க...

நிம்மதியற்ற சூழல் நெருக்குவாரம் தர வைணப்புடனான இடப்பெயர்வு நடந்தேறியது. எதிர்பாராத அந்த சூழ்நிலையாலே, அவதிப்பட்டு நிர்க்கதியாக்கப்பட்டபோது, எம்மைப் படைத்த இறைவன் ஒருவனின் துணையை மட்டும் அவர்களால் துண்டித்து விடமுடியாது போய்விட்டது. "அல்லாஹு அக்பர்" யாஅல்லாஹ் நீயே பெரியவன், "அல்ஹம்து லில்லாஹ்!!" எல்லாப் புகழும் உனக்கே என்றே உள்ளத்திலே அவனது எண்ண நிறைவோடு எங்கள் மண்விட்டகன்ற அந்த நாள் "வாழ்நாளிலே மறக்கமுடியாத நாள்" அன்றிருந்த கூட்டுக் குடும்ப உறவில் உள்ள அங்கத்தவர்களை பலரை இழந்து பேத்தி, பேரன், மருமகன் என்ற புதிய உறவுகளுடன் மீண்டும் எம் மண் மிதிப்பு இறை எம் இனத்துக்கு தந்த மதிப்பு மிக்க அருட்கொடை. அவனின்றி அணுவும் அசையாது. ஆனாலும் அது ஒரு காலம் அழகிய காலம் என்றவளாக சிந்திய கண்ணீரை துடைத்தவளாக உம்மா... என்ற பேத்தியின் அன்பான குரலைக் கேட்டு...

என்னம்மா...? சாரா என்றால்... உம்மா.. நீ இந்த கூழாம் பழங்கள் மண்ணை ஊதி ஒடைச்சு தாங்களேன். அப்படித்தானே நீங்க தின்னுவீங்களாமே உம்மா சொன்னாங்க!

இதைக்கேட்டதும் "கொல்"லென்று சிரித்துக் கொண்டே ஆமாம்மா... அது ஒரு காலம் அழகிய காலமம்மா என்று கூறிய வளாக அப்பழங்களை வாங்கிக் கொண்டாள்!

(முற்றும்)

---

# இயற்கையைத் தொலைத்துவிட்ட செயற்கை வாழ்க்கை!



(07 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

கதிரவனின் பேரொளியிலும், மின்மினியின் சிறு ஒளியிலும் நம் எண்ணத்திற்கு எட்டாத இறைவனின் கைத்திறம் ஒளிரும்.

இவ்வியற்கை மனிதனோடு தொடர்புடையது மனிதனைவிட மிக்க ஆற்றல் வாய்ந்தது. இயற்கையோடு மனிதன் கூட்டுறவாக இருந்தால் அன்றி அவன் சிறக்க இயலாது. இயற்கை ஒரு பெரிய குறியீடு. அதன் ஒவ்வொரு பொருட்கூறும் ஆய்வுக்குரிய ஒரு உண்மையை மறைத்து வைத்துள்ளது.

இயற்கை ஒரு சிறந்த போதகன். அதன் ஒவ்வொரு சொற்பொழிவும் கருதும் சிறப்புடையது. போதகனாக மட்டுமன்றி ஆசிரியனாக அதனைக் கருதும் ஆய்வாளனுக்கு இயற்கை தன் செல்வங்களை வாரி வழங்குகின்றது. அவன் காட்சியைத் தெளிவுறுத்தி மனத்திற்கு ஒளிகாட்டி உள்ளத்தை தூய்மைப்படுத்துகின்றது. இயற்கையைப் பின்பற்றுபவன் ஒருபோதும் தன்வழியில் நின்று தவறான்.

அறிவு உடையவனையும் தூயவனையும் இயற்கை என்றும் கைவிடுவதில்லை. அன்பையும், அழகையும் உணரத்தக்கதாக அது அவன் உள்ளத்தை ஆக்குகின்றது. ஆனால் ஒரு நாளும் அது முற்றிலும் அழிவதுமில்லை; அணைவதுமில்லை. இயற்கையின் செல்வம் அளவிட இயலாதது. இயற்கை தன் மேல்மட்டத்தை மட்டுமே நம்முன் படைக்கிறது. ஆனால் அது அளவிடமுடியாத ஆழமுடையது.

எனவேதான் இயற்கையைக் கற்பவன் என்றும் அதில் புதுமையைக் காண்கின்றான். மனிதனின் அனைத்து உணர்வுகளையும் தோற்றுவிப்பது இயற்கையே. இயற்கையின் ஒவ்வொரு காட்சியும் மனிதனின் ஐயங்களையும், கவலைகளையும் போக்கி, அவன் உள்ளத்திற்கு அலையாத அமைதி அளிக்கின்றது.

இயற்கை தன் எழிலால் மட்டுமன்று அது இயற்கை என்பதாலே மனிதனை இயற்கையிலேயே ஆட்கொண்டது. இத்தகைய இயற்கையோடு ஒத்துணர்வுபெறுவதே ஒரு சிறந்த மனிதனின் மதம். உண்மையின் நண்பன் இயற்கை. இயற்கை மனிதனின் வாழ்க்கை நாடக அரங்காகத் தீட்டப்பட்டுள்ளது. அரங்காக மட்டுமின்றி அந்நாடகத்தைக் காணும் அவையாகவும் காண்பதுண்டு. கவிஞனை உருவாக்கும் மாபெரும் கவிஞன் இயற்கை. ஒரு புலவனும் இயற்கையில் கொடுமையைக் காணவில்லை.


காலச்சுழற்சியில் மனிதன் தனது கண்டுபிடிப்புகளால் இயற்கையை மாசு படுத்தினான். இயற்கை வளங்கள் உள்ள இடங்களையெல்லாம் தனது ஆசாபாசங்களுக்காய் அழித்தான். தனது மிதமிஞ்சிய செல்வ வளங்களைப் பதுக்கிவைக்கும் இடமாய் இயற்கை எழில் கொஞ்சும் மலைகளை மாற்றினான்.

இயற்கையின் சீற்றங்களைத் தாங்கி தனது அடிவாரத்தில் வாழும் மக்களை மலைகள் காத்து நின்றன. மலைகளையெல்லாம் வெறும் கனிமக் குன்றுகளாய் கருதி, அவைகளை உடைத்தெடுப்பதற்காக உருவாக்கிய கொடுமை நமது காலத்தில்தான் நடக்கிறது.

கால்ச்சூழலில் இயற்கையின் மாற்றங்களாலும் சீற்றங்களாலும் மனித இனம் அழிந்த கதையும் நடந்து கொண்டிருக்கிறது. மனிதன் எப்போது இயற்கையோடு இயைந்த வாழ்வுக்குத் தன்னைத் தயார்படுத்துகிறானோ அப்போது முதல் இயற்கையால் மனிதனுக்கு ஏற்படும் துன்பங்களும் குறையும்.

பூமியின் முகமெங்கும் பசுமை பூக்கச் செய்து புவியை பசுமையின் தாயகமாக்கும் பணியில் ஒவ்வொரு மனிதனும் இணையவேண்டும். எவனொருவன் நாளைய சமூகத்திற்கு நல்ல சூழலை உருவாக்கிக் கொடுக்கிறானோ அவனே எதிர்காலத்திற்கான தலைசிறந்த அடையாளம்.



## யாழில் புகைவண்டியுடன் கார் மோதி விபத்து! பொறியியலாளர் உட்பட இருவர் பலி - 2 பேர் காயம்

யாழ்.கச்சேரி- நல்லூர் வீதியில் 21-11-2015 கடந்த சனியன்று புகைவண்டியுடன் கார் மோதி விபத்திற்குள்ளான சம்பவத்தில் ஒருவர் உயிரிழந் துள்ளதுடன் மேலும் 3 பேர் காயமடைந்துள்ளனர். கொழும்பிலிருந்து யாழ்.நோக்கி வந்த புகைவண்டி வருவதை பொருட்படுத்தாமல் கச்சேரி-நல்லூர் வீதி யில் உள்ள பாதுகாப்பற்ற புகைவண்டி கடவையை மேற்படி இளைஞர்கள் காரில் கடக்க முற்பட்ட போது விபத்து இடம்பெற்றுள்ளது.

## மன்னாரில் முன்னாள் போராளி ஒருவர் மர்மமான முறையில் மரணம்



மன்னார், மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குற்பட்ட மூன்றாம் பிட்டி கிராமத்தைச் சேர்ந்த புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த நபர் 21-11-2015 கடந்த சனியன்று காலை மர்மமான முறையில் உயிரிழந்தநிலையில் அவருடைய வீட்டு முற்றத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலமாக மீட்கப்பட்டவர் புனர்வாழ்வுபெற்ற முன்னாள் போராளி யான வீரசிங்கம் தனபாலசிங்கம்(வயது-40) மூன்று பிள்ளைகளின் தந்தை என தெரியவந்துள்ளது.

## பிச்சைக்காரனுக்கு பவுடர் போட்டது போன்றதே வரவு - செலவுத் திட்டம்



தேசிய அரசாங்கத்தின் 2016ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவானது அலங்கோலமான பிச்சைக் காரனுக்கு பவுடர் போட்டு அவனை அலங்கரித்து விட்டதைப் போன்று அமைந்திருப்பதாக மஹிந்த அணியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

## மீண்டும் அரசியலில் ஈடுபட எதிர்பார்ப்பதாக திஸ்ஸ அத்தநாயக்க அறிவிப்பு

மீண்டும் அரசியலில் ஈடுபட எதிர்பார்ப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

## ஒஸ்மானியா கல்லூரியில் எல்லே விளையாடிய சமந்தா பவர்



இலங்கைவந்துள்ள ஐ.நா.வுக்கான அமெரிக்க பிரதிநிதி சமந்தா பவர், ஞாயிற்றுக்கிழமை, 22 நவம்பர், 2015 அன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு இருந்தார். இதன்போது யாழ். ஒஸ்மானியா பெண்கள் கல்லூரியின் புதிய கட்டடத்தை சமந்தா பவர் திறந்து வைத்துள்ளார். இவ்விழாவிற்கு பிரதம அதிதிகளாக வருகைதந்திருந்த சமந்தா பவர் மற்றும் சீ.வி. விக்னேஸ்வரன் ஆகியோர் கட்டடத்தை திறந்து வைத்துள்ளனர். இதன்போது, ஒஸ்மானிய கல்லூரி மாணவிகளுடன் சமந்தா பவர் எல்லே விளையாட்டில் ஈடுபட்டுள்ளார்.

## தமிழக மீனவர்கள்மீது இலங்கை கடற்படையினர் மீண்டும் தாக்குதல்!

தமிழக மீனவர்களின் படகுகள்மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



## முதலமைச்சர் விக்னேஸ்வரனுடான கருத்து வேறுபாடு ஒரு சிறுவிடயமே! எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன்

வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் சிறியளவிலான கருத்து வேறுபாடு தலைதூக்கி இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் விக்னேஸ்வரன் ஏற்றுக் கொண்டுள்ளார். இதுகுறித்து சிங்கள வார இதழ் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

# செவ்வாய் கிரகத்தில் 'மனித முகம்' பரபரப்பை ஏற்படுத்திய நாசாவின் புகைப்படம்






நாசா சமீபத்தில் வெளியிட்டுள்ள செவ்வாய் கிரகத்தில் எடுக்கப்பட்ட புகைப்படத்தில் பாறையில் தெரிந்த முகம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. செவ்வாய் கிரகம் தொடர்பான ஆராய்ச்சியில் அமெரிக்காவின் நாசா மற்றும் பல்வேறு நாடுகளை சேர்ந்த விண்வெளி ஆராய்ச்சி அமைப்புகளும் ஈடுபட்டுவருகின்றன.

அங்குள்ள வளங்கள் மற்றும் உயிரினங்கள் வாழ்வதற்கான சூழ்நிலைகள் குறித்தும் ஆராய்வதற்காக நாசா பல்வேறு விண்கலங்களை அனுப்பியுள்ளது. இந்நிலையில் நாசாவின் விண்கலம் ஒன்று செவ்வாய் கிரகத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை கடந்த திங்களன்று அனுப்பியுள்ளது. செவ்வாய் கிரகத்தில் உள்ள கன்செப்சியான் பள்ளம் என்ற இடத்தில் எடுக்கப்பட்ட அந்த புகைப்படங்களில் பாறையில் மனித உருவங்கள் செதுக்கப்பட்டுள்ள காட்சிகள் நன்றாக பதிவாகியுள்ளன. அதில் தெரியும் ஒரு முகம் பண்டைய காலத்தில் வாழ்ந்த அசீரியர்களின் கடவுளான நாபுவின் முகம் போன்று உள்ளதாக சிலர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வேற்றுகிரக வாசிகளை பற்றி ஆராய்ச்சி செய்துவரும் ஸ்காட் வாரிங் என்பவர் கூறுகை யில், செவ்வாய்க் கிரகத்தில் ஏலியன்ஸ் வாழ்ந்துவந்தார்கள் என்பதற்கு இந்த புகைப்படமே சாட்சி.மேலும் ஆசிரியர்கள் அப்போது விண்கலம் மூலம் செவ்வாய் கிரகத்துக்கு சென்று தங்களின் கடவுளின் முகத்தை செதுக்கியுள்ளனர் என்பதும் இதன் மூலம் நிரூபணம் ஆகியுள்ளது. எனினும் நாசா விவகாரம் குறித்த உண்மையை மக்கள் அறிந்து கொள்வதை நாசா விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.

நாசாவில் செவ்வாய் கிரகம் தொடர்பாக ஆராய்ச்சியில் ஈடுபட்டு வரும் அஸ்வின் வசவதா என்பவர் இது குறித்து கூறியதாவது, வேற்று கிரகவாசிகள் குறித்த எந்த விவரங்களையும் விஞ்ஞானிகள் சாதாரண மக்களிடம் இருந்து மறைக்கவிரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார். எனினும் செவ்வாய் கிரகத்தில் வேற்றுக்கிரகவாசிகள் மற்றும் கடவுள்களின் உருவங்கள் தெரிவதாக புதிதாக சர்ச்சைகள் கிளம்பியுள்ளன.கடந்த சில நாட்களுக்கு முன்னர் செவ்வாய் கிரகத்தின் மலைகளில் புத்தரின் சிலை செதுக்கப்பட்டிருந்ததாக தகவல் பரவியது குறிப்பிடத்தக்கது.




## தற்காலிக தீர்வும் நிரந்தர அபிவிருத்திக்கு நீண்ட இடைவெளியும்

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மஹிந்தவின் ஆட்சியில் கல்விக்கான ஒதுக்கீடு 1.8 வீதமாகும். இப்போது அது 6 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது பாரிய ஒதுக்கீடாகும். கல்வியை முன்னேற்றுவதற்காக பல்கலைக்கழக மாணவர்களுக்கு வட்டியில்லா கடன் திட்டம், அவர்களுக்குப் புதிய விடுதி- களை அமைத்தல் மற்றும் கல்விசார்ந்த புத்தக இறக்குமதிக்கான வரிக் குறைப்பு போன்ற நல்ல யோசனைகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மஹிந்தவின் ஆட்சியில் கல்விச் சீரழிவு பெரும் பிரச்சினையாக இருந்தது. ஜி.சீ.ஈ. சாதாரண தர வினாத்தாள்களில் பிரச்சினை, வெட்டுப்புள்ளிகளில் பிரச்சினை, சட்டக்கல்லூரி வெட்டுப்புள்ளி களில் பிரச்சினை என அப்போது கல்வி அச்சாராகிக் கிடந்ததை மறுக்கமுடியாது.

மேலும், வவுனியா மற்றும் அம்பாறை போன்ற இடங்களில் பொருளாதார வலயங்கள் அமைக்கும் யோசனை சிறுபான்மை இன மக்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் என நம்பலாம். பொலிஸ் நிலையங்களை 600 ஆக அதிகரிக்கும் யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸ் நிலையங்களை மேலும் அதிகரிப்பதன் மூலம் நாட்டில் மலிந்து கிடக்கும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு மக்கள் நேயத் திட்டங்கள் இதில் இருந்தாலும் எல்லா பட்ஜெட்களையும்போல் இதிலும் குறைபாடுகள் இல்லாமல் இல்லை.


தொலைபேசி வரி அதிகரிப்பு, ஒரே நாளில் கடவுச்சீட்டைப் பெறுவதற்கான கட்டணத்தை 10,000 ரூபாவாக அதிகரித்தமை, அரச ஊழியர்களின் சம்பளம் நேரடியாக அதிகரிக்கப்படாமை மற்றும் சில விடயங்களில் தெளிவின்மை போன்ற பல விடயங்கள் ஏற்கக் கூடியதாக இல்லை.

எதிர்கால தூரநோக்கு அபிவிருத்தி எனும் தொனிப்பொருளிற்கு இது வித்திடவில்லை என்பது பெரும் குறை பாடாக உள்ளதோடு சர்வதேச நாடு களின் அபிவிருத்தியோடு ஒப்பிடும்போது இலங்கையின் அபிவிருத்திப் பயணத்திற்கு எந்த அத்திவாரமும் இந்த பஜெட்டில் போடவில்லை என்பது பெரும் குறைபாடாகும்.இருப்பினும், ஏழை மக்களுக்கு ஏற்றதான - விலைவாசியைக் குறைக்கக்கூடியதான பட்ஜெட்டாக இது இருப்பதை மாத்திரம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

இருந்தாலும், இது எதிர்வருகின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட பட்ஜெட் என்றும் பொருளாதார நிபுணர்கள் கேள்வி எழுப்புகின்றனர். இந்த பட்ஜெட் மக்கள் நேய பட்ஜெட்டாக - அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைக்கும் பட்ஜெட்டாக காட்டப்பட்டால் மாத்திரம் போதாது. அது உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதே முக்கியமானது.

2015 பட்ஜெட்டில் எரிபொருட்களின் விலைகள், சமையல் எரிவாயுக்களின் விலைகள் குறைக்கப்பட்டபோதிலும், சமையல் எரிவாயுவைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விலைகள் குறைக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்கின்றன. அந்தவகையில் தேசிய அரசின் தெரிவுகள் மக்களிற்கு பயன்மிக்கதா? இல்லையா? என்பது நாளோட்ட நடைமுறையில்தான் நாமறியவேண்டும்.

# வாரமொரு காரம்




## யாழ் - கொழும்பு ரயில் பயணத் திருட்டிற்கு

# முடிவுகட்ட முடியாதா?

வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கான ரயில்களில் பயணிப்பவர்களின் பணம், நகை மற்றும் உடைமைகள் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் அதனைக் கட்டுப்படுத்த ரயில்களில் ரயில்வே பாதுகாப்புப் படையின் விசேட பிரிவொன்று சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளதாக ரயில்வே பாதுகாப்புப் பிரிவின் உதவி பாதுகாப்பு அதிகாரி காமினி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களுக்குச் செல்லும் ரயில்களில் நாள்தோறும் திருட்டுகள் நடப்பதாகக் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே இந்த விசேட பாதுகாப்பு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இருந்துகூட அண்மையிலும் பல திருட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளன. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம்நோக்கி பயணித்த தபால் ரயிலில் விநோதமான முறையில் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. ரயிலில் பயணித்த மூவருக்கு மயக்கமருந்து கலந்த ரொட்டியைக் கொடுத்து அவர்களிடமிருந்த பணம், நகை என்பன அபகரிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் கொழும்பில் இருந்து கிளிநொச்சிக்கு ரயில்மூலம் பயணித்துள்ளனர்.

குருநாகலில் இருந்து ஏறிய மூன்று பேர் இவர்களுடன் உரையாடிக்கொண்டு வந்துள்ளனர். தரிப்பிடமொன்றில் மூவரில் ஒருவர் ரொட்டி வாங்கிவந்து, இவர்கள் மூவருக்கும் உண்ணக்கொடுத்துள்ளார். ரொட்டியை உண்ட மூவரும் மயக்கமடைந்த நிலையில் ஒருவருடைய மோதிரமும் பையில் இருந்த 10 ஆயிரம் ரூபாய் பணமும் களவாடப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் இறங்கவேண்டிய இவர்கள் மயக்கநிலையில் யாழ்.புகையிரத நிலையத்தை சென்றடைந்துள்ளனர். மயங்கியநிலையில் இருந்த இவர்களை பொலிஸார் மீட்டுள்ளதுடன், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இவர்களுக்கு உண்ணக்கொடுத்த உணவை பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளதாகவும் மேலதிக விசாரணை- களை மேற்கொண்டு வருவதாகவும் யாழ் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைவிட அண்மையில் சங்கானை வாசி ஒருவர் (11.11.2015) அன்று யாழ். ரயில் நிலைத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். இவரது இருக்கையில் யாழ்ப்பாணத்தில் இருந்து இன்னொரு ஆசாமியும் பிரயாணம் செய்துள்ளார். இரவு ரயில் பிரயாணம் தீபாவளிக்கு மறுநாள் சங்கானைவாசி நித்திரையாகிவிட்டார் என்பதை உறுதி செய்ய காலால் இரண்டு, மூன்று தடவை இடித்துப்பார்த்துவிட்டு 40,000ரூபா பெறுமதி யான கைத்தொலைபேசியை எடுத்து கையில் வைத்திருக்கும்போது நித்திரை போல பாசாங்குசெய்த சங்கானைவாசி எழுந்து கன்னத்தில் அடித்துப் பிடிக்க முற்பட்டார். குருநாகல் ஸ்டேசனும் வர இறங்கிப்பாய்ந்துவிட்டார். தனிநபராக நின்று முயற்சித்தமையால் சங்கானைவாசியால் பிடிக்கமுடியவில்லை. இந்த இடத்தில் கண்காணிப்பு எதுவும் இடம்பெறாமை வேதனைக்குரிய ஒன்று.

இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் யாழ்-கொழும்பு இரவு ரயிலில் தொடர்ந்து இடம்பெறுகின்றன. சனப்பிளக்கம் குறைந்த யாழ். ரயில் நிலையத்தை குறிவைத்து இதுதொடர்ச்சியாக இடம்பெறுகின்றன. இது தொடர்பாக ரயில்வே திணைக்களமும் பொலிஸ் பிரிவும் விரைந்து நடவடிக்கை எடுத்து மக்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்தவேண்டியது கட்டாய கடமையாகும் என்பதுடன், இதுவரை இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் நிறுத்தப்படாமை வேதனைதரும் விடயமாகும். இதுதொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறப்பட்டும்கூட இதுவரை எந்த மாற்றமும் இடம்பெறவில்லை.

# இந்தவாரம் உங்கள் பலன்

(26.11.2015 தொடக்கம் 02.12.2015 வரை)

### மேடம்

புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பதால் வீண் பிரச்சினைகள் வராமல் தடுக்கலாம். வெளிநாடுகள் சென்றுவருதல் போன்ற புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றியடைவீர்கள். தீராத நாட்பட்ட நோய்களுக்காக மருத்துவச் செலவுகளைச் செய்யும் பொருட்டுப் புதிய கடன்வாங்குவீர்கள். கடன்கொடுத்து இருந்த நீண்டகாலமாக வராத பணம் திரும்பக் கை வந்துசேரும் காலமாகும். கணவன் - மனைவி உறவுகளில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லதாகும். வங்கிகளின்மூலமாக எதிர பார்த்து இருந்து எதிர்பார்த்து இருந்த கடன் உதவித்தொகைகள் கிடைப்பதில் இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். பொதுவாக இது ஒரு மனஆறுதலைத் தரும் வாரமாகும்.

### இடபம்

ஒரு சிலருக்கு வீடு மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்ய எண்ணுவீர்கள். வெகுகாலமாகப் பிரச்சினைகளில் இருந்துவந்த பூர்வீகச் சொத்துக்கள் சட்டபூர்வமாக கைக்கு வந்துசேரும் குடும்பத்தில் காரணமற்ற குழப்பங்களும் மனச்சஞ்சலமும் ஏற்பட இருப்பதால் கவ- னமுடன் இருத்தல் நல்லதாகும். தந்தை - மகன் உறவுகளில் விரிசல்கள் ஏற்பட்டு விலகும். வங்கிகளால் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும் காலமாகும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### மிதுனம்

பழுதுபட்ட ஆலயங்கள் மற்றும் வீடு வாகனங்களைப் புதுப்பிப் தற்கான பணிகளில் ஈடுபடுவீர்கள். உத்தியோக விசயமாகப் பணம் மற்றும் பொருட்களை கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். நீண்டகாலமாகப் பிரச்சினைகளில் இருந்துவந்த அரசு சம்பந்தமான வழக்கு விசயங்களில் சாதகமான தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம். குடும்பத்தில் சகோதர சகோதரிகளால் பொருள்வரவும் மனமகிழ்ச்சியும் ஏற்படும். தேவையில்லாத புதிய நண்பர்களின் தொடர்புகளால் வீண் பிரச்னைகளில் மாட்டிக் கொள்ள வேண்டாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### கடகம்

இதுநாள்வரையில் தடைப்பட்டு வந்த காரியங்களை மனத் தைரிய- முடன் சற்று பிரயாசையுடன் செய்து முடிப்பீர்கள். பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். கொடுக்கல், வாங்கல் தொழில் செய்பவர்கள் புதிய கடன்கொடுப்பதைத் தவிர்க்கவும். அரசியல்வாதிகளால் ஆதாயம் இல்லை. வேலை இல்லாதவர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. மற்றவர்களை நம்பிப் பணம் கடன் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். புதிய வீடு வாகனங்களை வாங்க வாய்ப்பு உள்ளது. கண், காதுகளில் கவனமுடன் இருக்கவும். சம்பந்தம் இல்லாத நபர்களின்மூலம் பொருள் வரவுகள் உண்டாகும்.

### சிங்கம்

படித்த வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்க வாய்ப்புள்ள காலமாகும். காதல் விசயங்களில் எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்துசேரும். வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்களது தாய்நாடு சென்று திரும்புவதற்கான வாய்ப்புகள் உள்ளது. ரேஸ் லோட்டரி போன்ற சூதாட்ட விசயங்களில் பணம் வந்துசேரும் என எண்ணி ஏமாற்றம் அடைய வேண்டாம். விவசாயம் செய்பவர்களுக்குப் புதிய முறை விவசாயங்களின்மூலமாக நல்ல இலாபம் பெறுவார்கள். புதிய ஆடை மற்றும் அணிகலன்கள் வாங்குவதைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லது.

### கன்னி

காதல் சம்பந்தமான விசயங்களுக்காக வீண் பொருட்செலவுகள் செய்து ஏமாற்றம் அடையாதீர்கள். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக வெகுதூர உல்லாசப் பயணங்களை மேற்கொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். உத்தியோகத் துறையினர்களுக்குப் பதவியுயர்வுடன் கூடிய இடமாற்றம் உண்டாகும். தந்தை - மகன் உறவுகளில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் தீரும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்வதன்மூலம் மனத்திருப்தி அடைவீர்கள். விட்டுப் பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்குவதன்மூலம் சில மனக்கவலைகள் வந்துநீங்கும்.

### துலாம்

காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. குடும்பத்தில் திருமணம்போல் சுபகாரியங்களை நடத்துவதற்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல முடிவுகள் வந்துசேரும். குலதெய்வ ஆலய வழிபாடுகளை செய்து வருவதற்கான முயற்சிகளில் தடைகள் ஏற்படலாம். கொடுக்கல் வாங்கல் சம்பந்தம் ஆகிய பிரச்சினைகளில் உறவினர்களின் தலையிடுதலால் ஓரளவு மனநிம்மதி அடைவீர்கள். மனத்தைரியமுடன் எடுத்த காரியங்களைச் சற்று முயற்சியுடன் செய்துமுடிப்பீர்கள். பொதுக்காரியங்களில் தலையிட்டு நற்பெயர் புகழ் அடைய வாய்ப்பு உள்ள காலமாகும்.

### விருச்சிகம்

தீராத நோய்கள் மற்றும் கடன் தொல்லைகள் தீர ஆலயவழிபாடு- களை செய்துவர எடுத்துக்கொண்ட முயற்சிகளில் வெற்றியைப் பெறுவீர்கள். வெளிநாடு சென்றுவருதல் போன்ற விசயங்களுக்காகப் புதிய முயற்சிகளில் தலையிட்டு வெற்றி பெறுவீர்கள். மனைவியின் உடல்நிலையில் சில பாதிப்புகள் ஏற்படுவன்மூலம் மருத்துவச் செலவுகள் உண்டாகலாம். காதல் சம்பந்தமான நல்ல செய்தி வந்துசேரும். அண்டை அயலார்களிடம் கவனமாகப் பேசிப் பழகிவிட்டுக் கொடுத்துப் போகுவதன்மூலம் மனம் நிறைவடைவீர்கள். நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வதன்மூலம் புதிய பிரச்சினைகள் வர இருப்பதால் பயணங்களைச் சற்றுத் தள்ளிப்போடுதல் நல்லது.

### தனுசு

நண்பர்கள் மற்றும் உறவினர்களால் தேவையில்லாத மனச்சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். கொடுக்கல், வாங்கலில் மிகவும் கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. நண்பர்களுடன் பணப்பிரச்சினைகள் சம்பந்தமாக மனக்கசப்புகள் ஏற்படலாம். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல தகவல்கள் கிடைக்கும். சிறு தின்பண்ட வியா- பாரிகள், சமையற் கல்லூரிகள் நடத்துபவர்கள் இவற்றில் பணிபுரிபவர்கள், அரசு உயர் பதவிகளை வகிப்பவர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், முதியோர் இல்லங்களை நடத்துபவர்கள் நன்மை அடைவார்கள்.

### மகரம்

குடும்பத்தில் காரணமில்லாத மனக் கசப்புகளும் மருத்துவச்செலவுகளும் ஏற்படலாம். உடம்பில் கண் மற்றும் காது முகங்களில் சிற்சில உபாதைகள் வந்துபோகும். குலதெய்வ ஆலயவழிபாடு செய்துவருவது நல்லது. குடும்பச்சொத்து விசயங்களில் வழக்கு சம்பந்தமான முயற்சிகளைச் சற்று தள்ளிப் போடுதல் உகந்ததாகும். சகோதர சகோதரிகளால் சிற்சில நன்மைகள் வந்துசேரும். மாணவர்கள் கல்வியில் மிகவும் கவனமுடன் பயின்று வருதல் நல்லதாகும். கணவன் - மனைவி உறவு- கள் நன்றாக இருக்கும். விட்டுப்போன கணவன்- மனைவி உறவுகளில் இருந்த மனக்கசப்புகள் நீங்கி மீண்டும் ஒன்றுசேருவார்கள்.

### கும்பம்

வேலை இல்லாத படித்த இளைஞர்களுக்கு புதய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகளும் மருத்துவச்செலவுகளும் உண்டாகலாம். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகள் வந்துபோகும். வெகுநாட்களாக காணாமல்போன பொருட்கள் காவல் துறையினர்களின் உதவிகளால் திரும்பக் கிடைக்கும். பெண்களிடம் கவனமாக பேசிப்பழகுவதால் வர இருக்கும் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். மஹான்களின் எதிர்பாராத தரிசனங்களால் நிம்மதி உண்டாகும். உடல்நிலையில் கண் காதுகளில் கவனம் தேவை. மஹான்களின் தரிசனங்களால் மனநிம்மதி ஏற்படும்.

### மீனம்

காதல் சம்பந்தமான விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல தகவல்கள் கிடைக்கும். உற்றார் மற்றும் உறவினர்க்ளின் திடீர்வரவுகளால் பொருள் வரவும் மனமகிழ்ச்சியும் வந்துசேரும். பங்காளிகளுடன் கூட்டுத்தொழில் முயற்சிகளைத் தவிர்த்தல் நல்லது. குலதெய்வ ஆலய வழிபாடு- களை செய்துவருவீர்கள். பொருளாதாரத்தில் இதுவரையில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறி மனநிம்மதியும் சந்தோசமும் அடைவீர்கள். இதுவரையில் நெருக்கடியில் இருந்து வந்த பணத்தட்டுப்பாடுகள் நீங்கிப் பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள்.



## அழகிகளின் இளவரசன்

பிரித்தானிய அரச குடும்பத்தினரின் வருடாந்த ஒன்றுகூடல் விழாவில் இளவரசர் ஹரியும் கலந்து கொண்டார். இவர் பாடகிகளுக்கு வாழ்த்துத் தெரிவித்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

## மாணவிகளின் வரவேற்பு

நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ அண்மையில் வியட்னாமுக்கு விஜயம் செய்து இருந்தார். இவ்விஜயத்தில் பாடசாலைகளுக்கும் நேரில் சென்றார். பாட-சாலை மாணவிகள் இவரை வரவேற்கின்ற பாணியையே படத்தில் காண்கின்றீர்கள். முகத்தை நியூசிலாந்து தேசியக் கொடியால் மறைக்கின்றனர்.



## மக்களுக்கு அஞ்சலி

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் அண்மையில் இடம்பெற்ற பாரிய தொடர் குண்டுத் தாக்குதல்களில் இறந்த பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்துகின்ற வகையில் ஈபெல் கோபுரம் நீலம், வெள்ளை, பச்சை ஆகிய நிறங்களுடன் ஒளிரவிடப்பட்டது. பிரான்ஸின் தேசியக் கொடி இந்நிறங்களை கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



## தடுப்பு மருந்துத் திட்டம்

யேமன் தலைநகர் சனாவில் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து ஊட்டும் திட்டம் வீடு, வீடாக முன்னெடுக்கப்படுகின்றது.



அமெரிக்காவின் முதல் பெண்மணியான மிச்சேல் ஒபாமா வெள்ளை மாளிகையில் குழு நடனம் ஆடியபோது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. மேல் வகுப்பு மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் அண்மையில் இங்கு மேடை ஏற்றப்பட்டன. இவ்விழாவில் கலந்து கொண்டே நடனம் ஆடி அசத்தினார்.



## தலைவியின் நடனம்



இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிரைவேட்) [illegible] நவம்பர் 28ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.